தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஐப்பசி 16, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

1989 நவம்பர் 1, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் மு. சாத்தையா** என்கிற **தமிழ்க்குடிமகன்** அவர்கள் தலைமையில் காலை 9-00 மணி யளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை"

சோர்வு என்பது அறவே இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில், ஆக்கமானது தானே அவன் இருக்கும் இடத்திற்கு வழி கேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ஐ.ஏ.எஸ். தேர்வில் தமிழ்நாட்டில் அதிகம் பேர் தேர்வு பெறத் திட்டம்.

*1223. **திரு. எஸ். டி. உகம்சந்த் :**

திரு. சோ. பால்ராஜ் :

திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் ஐ.ஏ.எஸ். தேர்வில் அதிகம் பேர் தேர்வு பெற அரசு திட்டம் தயாரித்துள்ளதா ?

(ஆ) தேர்ச்சி பெறுபவர்களில் குறிப்பிட்ட சதவீதம் மத்திய அரசு பணிக்கு அனுப்பப்படவேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ் நாட்டில் இந்திய ஆட்சிப்பணி தேர்வில், ஆதி திராவிடர்-பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்புக்களைச் சார்ந்தவர்கள் தேர்வு பெற பயிற்சி மையங்கள் 1966

ஆம் ஆண்டிலிருந்தும், 1971 ஆம் ஆண்டிலிருந்தும் முறையே தொடங்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாட்டில் மத்திய பணிகளுக்கான தேர்வு எழுதுவோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பதன் காரணங்களை ஆராயும் பொருட்டு, தமிழ்நாடு அரசு குழு ஒன்றை நியமித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் தற்போது அரசின் கல்வித்துறையால் பரிசீலிக்கப்பட்டு தகுந்த முடிவெடுக்கப்படும்.

(ஆ) இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களின் விருப்பத்தைத் தெரிந்து கொண்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மத்திய அரசின் கீழ் பணியாற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஐ.ஏ.எஸ். பயிற்சியில் அதிகம் பேர் தேர்வு செய்வதற்காக பயிற்சி அளிப்பதற்கு அரசு வழிவகை செய்து இருக்கின்றது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். ஏற்கெனவே இதற்காக அரசின் சார்பாக கார்த்திகேயன் குழு என்று ஒரு குழு அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகள் அரசுக்கு வந்திருக்கின்றன என்ற தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் என்ன ? அதன்மீது எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன ? இப்போது நடைபெறுகின்ற தேர்வுகளில் அதிக அளவில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெறாததற்குக் காரணம் கல்வியினுடைய தரம் குறைந்து இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு அரசாங்கம் என்னென்ன செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழுவினுடைய பரிந்துரைகளை அரசாங்கத்தினுடைய கல்வித் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது. மாநிலக் கல்லூரி போன்ற ஒன்றிரண்டு கல்லூரிகளில் ஒரு சிறப்பு ஊக்கம் பெறுகின்ற வகையிலே பயிற்சி அளிக்க வேண்டுமென்றும் அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கார்த்திகேயன் அவர்களுடைய் தலைமையிலே ஒரு உயர் மட்டக் குழு கடந்த காலத்திலே—கவர்னர் ஆட்சியிலே என்று கருதுகின்றேன்—அமைக்கப்பட்டு இதுபோன்ற பரிந்துரை பெறப்பட்டு உள்ளது.

1989 நவம்பர் 1]

நான் என்னுடைய தொடக்கப் பதிலில் சுட்டிக்காட்டியதற்கு இணங்க் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்காகவும் அதற்குப் பிறகு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்காகவும் இரண்டு கட்டங்களில் முறையே 1966 ஆம் ஆண்டிலும் 1971 ஆம் ஆண்டிலேயிருந்தும் பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படு கின்றன. அந்தப் பயிற்சி மையங்களில் 1984 ஆம் ஆண்டு 50 பேர் பயிற்சி பெற்றார்கள். ஆனால் தேர்வு பெற்றவர்கள் யாரும் இல்லை. 1985-ல் 55 பேர் பயிற்சி பெற்றார்கள். தேர்வு பெற்ற வர்கள் யாரும் இல்லை. 1986-ல் 48 பேர் பயிற்சி பெற்றார்கள். தேர்வு பெற்றவர்கள் 3 பேர். 1987-ல் 51 பேர் பயிற்சி பெற் றார்கள். தேர்வு பெற்றவர் 1. 1988-ல் 60 பேர் பயிற்சி பெற் றார்கள். நேர்முகத் தேர்வு இன்னும் நடைபெறவில்லை. அதைப் போல பிற்படுத்தப்பட்டோருக்கான பயிற்சி மையத்திலும் 1984-ல் 35 பேர் பயிற்சி பெற்றார்கள். தேர்வு பெற்றவர்கள் யாரும் இல்லை. 1985-ல் 43 பேர் பயிற்சி பெற்றார்கள். தேர்வு பெற்ற வர்கள் யாரும் இல்லை. 1986-ல் 54 பேர் பயிற்சி பெற்றார்கள். தேர்வு பெற்றவர்கள் யாரும் இல்லை. 1987-ல் 26 பேர் பயிற்சி பெற்றார்கள். தேர்வு பெற்றவர்கள் யாரும் இல்லை. 1988-ல் 29 பேர் பயிற்சி பெற்றார்கள். நேர்முகத் தேர்வே நடைபெற வில்லை. இதுதான் நிலைமை. இருந்தாலும்கூட இந்தக் குழுவினுடைய அறிக்கையை, அதனுடைய பரிந்துரைகளை நாம் பரிசீலித்து இந்த நிலை தொடராமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி அரசு ஆழ்ந்து சிந்திக்கும்.

(9-05)

திரு. சோ. பால்ராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு முதல்வர் அவர்கள் கூறியதுபோல ஆதி திராவிடர், பழங்குடி யினர், பிற்படுத்தப்பட்டோருக்குப் பயிற்சி அளிப்பதைப்போல எல்லாச் சமூகத்தினருக்கும் அந்தப் பயிற்சி தொடங்கப்படுவதற் கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆதி திராவிடர், பிற் படுத்தப்பட்டோர் அல்லாத வேறு சமுதாயங்களைச் சேர்ந்த வர்கள் யார் விரும்பினாலும் அவர்களுக்கு மாநிலக் கல்லூரி களைப் போல சில கல்லூரிகளில் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப் படுகின்றன.

LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன பதிலி லிருந்து ஆண்டு வாரியாகக் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ் நாட்டிலேயிருந்து ஐ.ஏ.எஸ். தேர்வுக்குச் சென்றவர்கள் எந்த வகையிலும் தேர்வு பெறாத ஒரு நிலை இருப்பது தலை குனிவான காரியமாக இருக்கிறது. ஏற்கெனவே முன்பு கழக அரசு பொறுப்பிலே இருந்தபோது ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற் படுத்தப்பட்டோருக்காகச் சிறப்புப் பயிற்சித் திட்டம் இருந்தது. அதையும் முதல்வர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்திய நாட்டிலே இருக்கிற பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து எதிர்காலத்தில் தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு முன்னுதாரண மாக விளங்குகிற நிலையிலும், முதன்மை பெறுகிற நிலையிலும் நிபுணர் குழு அறிக்கை பெற காலதாமதமாக ஆனாலும்— முதல்வர் அவர்கள் எல்லாம் அறிந்தவர்கள்—ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் சொன்னதைப்போல இந்தக் கல்வி அமைப்பிலேயே, கல்வி சிலபஸிலேயே மாறுதல் செய்தால் தான் ஐ.ஏ.எஸ். தேர்வில் நாம் முதன்மை பெறலாம் என்ற கருத்தும் இருக்கிறது. அவற்றையும் தமிழக அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கல்வியினுடைய தரத்தில் மாறுதல் செய்யப்பட வேண்டுமென்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடம் இல்லை. ஆனால் அதற்காக இங்கிருந்து ஐ.ஏ.எஸ். தேர்வுக்குச் செல்கின்ற மாணவர்கள் அனைவருமே தரக்குறைவானவர்கள் என்று எடுத்துக்கொள்ள இயலாது. ஆனால் தொடர்ச்சியாக தமிழ்நாட்டு மாணவர்கள் வருந்தத்தக்க நிலையிலேயே அங்கே தேர்வு பெறவில்லை என்ற செய்திதான் வந்து கொண்டிருக்கிறது. ரிட்டன் டெஸ்ட்டுக்குப் பிறகு இண்டர்வியூ என்ற நேர்காணல் முறை அங்கே இருக்கின்ற கார ணத்தால் தமிழ்நாட்டு மாணவர்கள் ஒதுக்கப்படுகின்றார்களோ என்று சந்தேகிக்கவும் தோன்றுகிறது. எனவே மத்தியிலே அது பரிசீலிக்கப்பட்டு, ரிட்டன் டெஸ்ட்டோடு அதாவது நுழைவுத் தேர்வு என்கிற வகையிலே ஐ.ஏ.எஸ். தேர்வு முறை இருக்கு மானால் இந்த அவலம் ஏற்படாது என்று நான் கருதுகின்றேன்.

1989 நவம்பர் 1]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நமக்குச் சுதந்திரம் கிடைத்து 42 வருஷம் ஆகிறது. 43-வது வருஷ ஆரம்பத்திலே ஐ.ஏ.எஸ். தரமானது தமிழ்நாட்டிலே குறைவாக இருக்கிறது என்று இந்தக் காலக் கட்டத்திலே சொல்லப்படுகிறது. இதேமாதிரி, எந்த மாகாணத்துக்குப் போனாலும் எல்லா மட்டத்திலும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் எல்லா இடத்திலும் இருக்கிறார்கள். அந்தத் தரம் தமிழ்நாட்டில் குறைந்துவிடும் என்று தெரிந்துதான் கமிட்டி போட்டு அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள். அந்தப் பயிற்சி சரியான முறையில் இல்லையா? அல்லது கல்விக் கொள்கை சரியாக இல்லையா? அதற்குக் காரணம் என்ன என்பதற்கு முதலில் விளக்கம் தேவை. இரண்டாவது, எத்தனை மாணவர்களை அனுப்புவது என்று கேள்வி கேட்டிருக்கிறார், தேர்ச்சி பெறாதது குறிப்பிட்ட சதவிதமா என்று. கல்யாணம்தான் பண்ணி வைப்பார்கள், பிள்ளை பெறுவது எப்படி என்றும் சொல்லிக் கொடுப்பார்களா ? நமது தேர்வில் பர்சண்டேஜ் இல்லையென்று சொன்னால் எப்படி அதைத் தருவது என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். தேர்ச்சி பெறுவதற்கு என்ன வழி? இதற்கு எந்த மதம், எந்த ஜாதி என்று பார்க்கக் கூடாது. எதுவாக இருந்தாலும் பயிற்சி கொடுங்கள். இல்லையானால் கல்வியின் தரம் குறைந்து வருகிறதே அதற்கு என்ன காரணம் என்பதையாவது விளக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் இதற்கு முதலில் ஒரு வினாவுக்கு அளித்த விடையிலேயே இப்போது திரு. தீட்சிதர் அவர்கள் எழுப்பியிருக்கின்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும் விளக்கம் அளித்திருக்கின்றேன். ரிட்டன் டெஸ்ட் முடிந்தவுடன், நேர்காணல் என்ற இண்டர்வியூ என்ற முறை இருக்கின்ற காரணத்தால், இப்படிப்பட்ட சங்கடம் இருக்கிறதோ என்ற ஐயம் உருவாகிறது. எனவே ரிட்டன் டெஸ்ட் முறையிலேயே இந்தத் தேர்வுகள் நடைபெற்று, இண்டர்வியூ என்ற நேர்காணல் முறை இல்லாமல் இருக்குமானால் ஐ.ஏ.எஸ். தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு அதிக இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

(9-10)

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் பயிற்சி கொடுக்கிற நல்ல திட்டம் நமக்கு இருந்த போதிலும் கூட மாணவர்கள் போதிய அளவுக்கு வெற்றி பெற வில்லை என்று சொல்கிற தகவலை வருத்தத்தோடு நமது முதல மைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால் வடபுலத் திலே இருக்கின்ற, லக்னோ, டெல்லி ஆகிய இடங்களில் இருக்கின்ற பல்கலைக் கழகங்கள் ஐ.ஏ.எஸ்.-க்கு என்ன பாடம் வருகிறதோ அந்தப் பாடத் திட்டத்தை முதலிலேயே தெரிந்துகொண்டு அவர் களுடைய பட்டப் படிப்பிற்கும் அந்தப் பாடத்தையே வைத்து விடுகிறார்கள். எனவே அவர்கள் நல்ல பயிற்சி பெற்றுவிடுகி றார்கள்.

இரண்டாவது, எல்லா இடங்களிலும் இந்தக் கல்வித் திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதே நமது ஆசை. சான் றாக நேற்று, ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்கள் பணியமர்த்தப் படுவது என்பது 'வேக்கன்சி' வருகிறபோது செய்யப்படும் என்று கல்வித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நேற்று உண்ணா நோன்பு இருந்தவர்களைச் சென்று சந்தித்துக் கேட்ட போது குடந்தைக் கல்லூரியிலே 15 இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் காமர்ஸ் டிப்பார்ட்மெண்ட் தொடங்கப்படவே இல்லை. என்வே இப்படி பாஸ் பண்ணி வெளியே வருகிற மாணவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வில் சிரமப்படுகிறார்களோ என்று சொல்கிற ஐயம் எனக்கு இருக் கிறது. எனவே ஐ.ஏ.எஸ்.-க்கு இருக்கிற பாடத் திட்டங்களையே சொல்லிக் கொடுக்கிற ஒரு வழிவகை இருக்குமா என்று பார்த் தால் நம்முடைய மாணவர்களை அதிகமாக வெற்றி பெறச் செய்ய லாமே என்ற ஒரு எண்ணம் எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இரண்டு பிரச்சினை களை ஒன்றாகச் சேர்த்து இங்கே எழுப்பினார்கள். ஒன்று ஐ.ஏ.எஸ். தேர்வு பற்றியது. ஐ.ஏ.எஸ். தேர்வில் பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும் நியாயமான பங்கு பெறு வதற்கு வழி செய்வதற்காக முன்னர் அந்தப் பயிற்சி தரும் முறை

1989 நவம்பர் 1]

ஏற்படுத்தப்பட்டது. இருந்தாலும் தகுந்த வெற்றி தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மொத்தமாகக் கிடைக்கவில்லையோ என்பதற்காக வேறு சில உயர்தரமான பயிற்சியை வழங்கக்கூடிய கல்லூரிகளில் ஐ.ஏ.எஸ். தேர்வுக்காகச் சிறப்பாகத் தனிப் பயிற்சி வழங்குவது போன்ற ஒரு திட்டத்திற்காக அண்மையிலே தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அது நடைமுறைக்கு வந்ததற்குப் பிறகுதான் அதன் பயன் தெரியும்.

மற்றொன்று. வடபுலத்தில் இருக்கிற பல்கலைக் கழகங்களிலே ஐ.ஏ.எஸ். தேர்வுக்கென்று ஏதோ சிறப்பான பாடங்களை நடத்துவதுபோல் ஒரு கருத்தை திரு. குமரி அனந்தன் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த ஒரு பாடமும் ஐ.ஏ.எஸ்.-க்கு என்று தனியாக நடத்துவதற்குரிய பாடங்கள் கல்லூரிகளில் கிடையாது. ஆனால் நடத்தப்படுகிற பாடங்களில் தேர்ந்த, ஆற்றல் வாய்ந்தவர்களாக ஆக்குவதுதான் பல்கலைக் கழகங்களினுடைய குறிக்கோள். அதிலே பல்கலைக் கழகங்களினுடைய தரம், கல்லூரிக் கல்வியினுடைய தரம் உயர்வதற்கு முயற்சிக்கப்படுகிறது.

மற்றொன்றும் கேட்டார்கள். ஒப்பந்த ஆசிரியர்கள் உடனடியாக நிரப்பப்படாமல் இடங்கள் காலியாக இருக்கின்றன, பணி தரப்படவில்லை என்று தெரிவித்தார்கள். அது அந்தத் துறை இயக்குநருக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பாடத்திற்குரிய ஒப்பந்த ஆசிரியர்கள் இருந்தால்தான் நியமிக்க முடியும். ஒப்பந்த ஆசிரியர்கள் ஏற்கெனவே வேறு பாடத்திற்கு இருந்தாலும், இப்போது காமர்ஸ்-க்கு ஆசிரியர்கள் வேண்டுமென்றால் உடனே கிடைப்பது இல்லை. எனவே காமர்ஸ் போன்ற பாடங்களுக்கு மறுபடியும் வெளியே இருந்து கூட எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படக்கூடிய நிலையில் கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர் அந்தத் தேர்வை நடத்துவதற்கு முன்வந்திருக்கிறார். அது விரைவில் நடைபெறும். ஏற்கெனவே இருந்த ஒப்பந்த ஆசிரியர்களில் எந்த ஒரு பாடத்திற்கு ஆசிரியர் இல்லையோ அந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தால் உடனடியாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோருக்கு ஐ.ஏ.எஸ். தேர்வுக்கான

பயிற்சியை அளிப்பதில் எந்த அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்? இரண்டாவதாக, மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்களுக்குத் தனியாகப் பயிற்சி அளிக்கின்ற வகையில் இடம் உண்டா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல் 'ரிட்டன் டெஸ்ட்'-லே பாஸ் செய்த பிறகு 'வைவாஓவி' யிலே தமிழ்நாட்டிலே உள்ள மாணவர்களுக்கு இத்தனை பர் சன்ட் என்று ஒதுக்குவதற்கு இந்த அரசு வற்புறுத்துமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப் பட்டோருக்கு இந்தப் பயிற்சி மையங்களில் இடம் அளிப்பது எந்த அடிப்படையில் என்று கேட்டார்கள். அவர்கள் விண்ணப்பம் போடுகின்ற அடிப்படையில்தான் அவர்கள் எடுக்கப்படுகின் றார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்குப் பயிற்சி மையங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். மிகவும் பிற்படுத்தப்பட் டோர் என்கிற பிரிவையே இப்போதுதான் நாம் தொடங்கி இருக் கின்றோம். தேவைப்பட்டால் அதையும் இணைத்துக்கொள்ள லாம். ஆனால் பிற்படுத்தப்பட்டோரிலே மிகவும் பிற்படுத்தப்பட் டோர் அடங்குவார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்டோரிலே பிற் படுத்தப்பட்டோர் அடங்க மாட்டார்கள். ஆனால் பிற்படுத்தப் பட்டோரிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அடங்குவார்கள் என்று நான் கருதுகிறேன். அடங்குவார்கள் என்றால் வேறு பொருளிலே அல்ல; அதிலே இணைவார்கள் என்ற பொருளில் சொல்கிறேன்.

(9-15)

Thiru OSCAR C. NIGLI: Hon. Speaker, Sir, I would just wish to remind the Hon. Members that there is no magic formula for creating I.A.S. Officers. In this context, I would like to point out two things. One thing is there is no desire on the part of the students to opt for I.A.S. because there are better avenues like the Management and so on. Just as our hon. Member pointed out there is lack of awareness on the part of the students to opt for the I.A.S. Examinations. There is no correlation like awareness and desire. Therefore, I would like to remind the Hon. Education Minister to create awareness amongst the students by creating separate cells in each College at the grass root level, just as Nagarpalika Bill was introduced at the grass root level of the Panchayats.

1989 நவம்பர் 1]

Mr. SPEAKER : Mr. Nigli, is it a question?

Thiru OSCAR C. NIGLI : The question is, will the Government come forward to start such a cell in each College to create awareness among the students.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய உணர்வுகள் மதிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1966 ஆம் ஆண்டிலிருந்தும், 1971 ஆம் ஆண்டிலிருந்தும் தமிழகத்திலேயிருந்து ஐ.ஏ.எஸ். தேர்வுக்குச் செல்பவர்களுக்கான பயிற்சி நல்ல முறையில் அளிக்கப்படுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. பல மாணவர்கள், ஐ.ஏ.எஸ். பாடத் திட்டத்தைக் கல்லூரிகளில் எடுத்துப் படித்து மிகச் சிறந்த முறையில் தேர்வு எழுதக் கூடியவர்களும், குறிப்பாக தமிழகத்திலேயிருந்து செல்கிற மாணவர்களும் உண்மையிலேயே தேர்வு செய்யப்படுவதில்லை. அதற்குக் காரணம் டெல்லியில் இருக்கிற சில ஐ.ஏ.எஸ். கோச்சிங் சென்டர்களில் சேர்ந்து அங்கு பயிற்சி பெற்றால்தான் தேர்வு செய்யப்படும் நிலை இருக்கிறது என்கிற எண்ணம் தமிழகத்திலே இன்றையதினம் உருவாகியிருக்கிறது. அத்தகைய ஒரு உணர்வு தமிழகத்தில் நிலவுவது எந்த அளவுக்கு உண்மை? அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னது உண்மையோ அல்லவோ, ஆனால் அதற்குச் சரியான மருந்தாக நான் கருதுவது, நான் ஏற்கெனவே சொன்ன நுழைவுத் தேர்வுதான்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருந்து ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு அனுப்பப்படுகின்றபோது, ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் போன்றவர்கள் அனுப்பப்படுகின்றபோது, பட்டியலில் இருக்கின்ற கிறிஸ்துவப் பெருமக்கள் ஒதுக்கப்படுவதாகச் சொல்லப்படுவதை இந்த அரசு அறியுமா? இனிமேல் இந்தப் பட்டியலில் அவர்களையும் சேர்த்து அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட பயிற்சி மையங்களில் அவர்கள் பயிற்சி பெறவில்லையென்றாலும் கூட யார் வேண்டு மானாலும் அந்தத் தேர்வுக்குச் செல்லலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொழி தெரியாத ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகள் நிறைய பேர் இருப்பதால் பொதுமக்கள் அவர்களோடு தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்க ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைத் தேர்வு செய்கின்ற போது மொழிவாரியாக ஒதுக்கீடு செய்ய அரசு கோருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழி வழி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கோருவது ஒரு நல்ல கருத்து, அதை அரசு பரிசீலிக்கும்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறும்போது தமிழகத்திலிருந்து ஐ.ஏ.எஸ். தேர்வுக்குச் செல்பவர்களில் பெரும் பகுதியினர் தேர்வு ஆகாமல் விடுபட்டுப் போய்விடுகிறார்கள். அதற்கு நேர்முகக் காணல்முறை ஒரு காரணமாக இருக்குமோ என்கின்ற ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், தமிழகத்தில் இருந்து செல்லக்கூடிய மாணவர்கள் மத்திய அரசின் மொழிக் கொள்கை காரணமாகத் தேர்வு செய்யப்படாமல் போய் விடுவார்களோ என்கிற அச்சம்கூட இருப்பதால், அதையும் சேர்த்து இந்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். தேர்வை எல்லா மாநில மொழி களிலும் எழுத உரிமையுண்டு. ஆனால் ஒரே ஒரு சிக்கல், வினாத் தாள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் மட்டும்தான் இருக்கும். விடை எழுதுகிற தாளில் எந்த மொழியில் வேண்டுமானாலும் எழுதலாம்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வுக்கு மட்டுமல்லாமல், நேர்முகக் காணலிலும்கூட ஐ.ஏ.எஸ். பதவிக்கான நேர்முகத் தேர்வுக்குச் செல்பவர்கள் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் மட்டும்தான் பதில் அளிக்க வேண்டிய கட்டாயம் இன்றையதினம் இருக்கிறது.

1989 நவம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சிறிய விளக்கம். யார் எந்த மொழியில் தேர்வு எழுதுகிறார்களோ, அவர்கள் அந்த மொழியிலேயே நேர் காணலின்போதும் விடை சொல்லலாம்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை இருப்பதாகத் தெரிய வில்லை. அவரவர் தாய்மொழியிலேயே தேர்வு எழுதுவதற்கும், நேர்முகக் காணலின்போது தாய்மொழியிலேயே விடை அளிக்கும் வகையிலும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே அவரவர் தாய் மொழியிலேயே தேர்வு எழுதுவதற்கும், வெற்றி பெற்றவர்கள், நேர் காணலின்போது தாய்மொழியிலேயே விடை அளிப்ப தற்கும், பணியாற்றுவதற்கும் வழிவகை உள்ளது. எடுத்துக் காட்டாக என்னுடைய மாணவர் திரு. இரா. பாலகிருஷ்ணன் தமிழிலேயே தேர்வு எழுதி, தமிழிலேயே நேர் காணலிலும் பங்கு கொண்டு வெற்றி பெற்று, தற்போது ஒரிசா மாநிலத்தி லுள்ள கட்டாக்கில் துணை மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணி யாற்றிக்கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, பேராசிரியர் தமிழ்க்குடிமகனின் மகனும் தமிழிலேயே ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்று, தற்போது திருச்சியிலுள்ள துப்பாக்கித் தொழிற் சாலையில் பணியாற்றுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(9 20)

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, நேர் காணல் முறையைத் தவிர்த்து, வெறும் எழுத்து முறைத் தேர்வு மூலம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். போன்ற பணிகளுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதில் எனக்குச் சிறிய கருத்து மாறுபாடு உண்டு. என்ன என்று சொன்னால், 'பெர்சனாலிட்டி' என்கின்ற முக்கியமான ஆளுகையை, எழுத்துத் தேர்வு மூலம் கணக்கிட முடியாது. அதற் காக ஒரு மாற்று ஆலோசனையை அரசு பரிசீலிக்குமா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது, ஜனத்தொகை அடிப்படையிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மாநில வாரியாக மத்திய அரசு ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு எழுப்புமா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னது ஒரு கருத்து. அதுவே முடிவான கருத்தல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதும் ஒரு நல்ல கருத்து. அதையும் ஆராயலாம்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் பேசும்போது ஓரல் இண்டர்வியூவில்தான் அதிகமான தமிழக மாணவர்கள் தோல்வி அடைவதாக ஒரு அச்சத்தைச் சொன்னார்கள். ஆகவே, நான் அறிந்துகொள்ள விரும்புவது, தமிழகத்திலிருந்து பிற்பட்ட சமுதாயம், பார்வார்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் காஸ்ட் ஆகிய சமுதாயங்களிலிருந்து கழிந்த ஆண்டில் எத்தனை மாணவர்கள் ரிட்டன் டெஸ்ட் முடித்துச் சென்றார்கள், ஓரல் டெஸ்டிலே எத்தனை பேர்கள் வெற்றி பெற்றார்கள் என்பதுதான். அந்தக் கணக்கு அரசிடத்தில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னது, பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்றவர்கள் தேர்வு பெறவில்லை, ஒருவர் இருவர்தான் தேர்வு பெற்றிருக்கிறார்கள், அதுவும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என்று சொன்னேன். ஆனால் அதுவன்னியில், ஐ.ஏ.எஸ். தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 1985 ஆம் ஆண்டு 2 பேரும், 1986 ஆம் ஆண்டு 6 பேரும், 1988 ஆம் ஆண்டு 5 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் ஓய்வூதியம்.

* 2254 திரு. எஸ். டேனியல்ராஜ்:

திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் பென்ஷன் தொகை உயர்த்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

1—8—1989 முதல் சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் ஓய்வூதியத்தினை மாதம் ரூ. 250-லிருந்து ரூ. 350 என்று மாநில அரசு உயர்த்தியுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னது ஒரு கருத்து. அதுவே முடிவான கருத்தல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதும் ஒரு நல்ல கருத்து. அதையும் ஆராயலாம்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் பேசும்போது ஓரல் இண்டர்வியூவில்தான் அதிகமான தமிழக மாணவர்கள் தோல்வி அடைவதாக ஒரு அச்சத்தைச் சொன்னார்கள். ஆகவே, நான் அறிந்துகொள்ள விரும்புவது, தமிழகத்திலிருந்து பிற்பட்ட சமுதாயம், பார்வார்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் காஸ்ட் ஆகிய சமுதாயங்களிலிருந்து கழிந்த ஆண்டில் எத்தனை மாணவர்கள் ரிட்டன் டெஸ்ட் முடித்துச் சென்றார்கள், ஓரல் டெஸ்டிலே எத்தனை பேர்கள் வெற்றி பெற்றார்கள் என்பதுதான். அந்தக் கணக்கு அரசிடத்தில் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னது, பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்றவர்கள் தேர்வு பெறவில்லை, ஒருவர் இருவர்தான் தேர்வு பெற்றிருக்கிறார்கள், அதுவும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என்று சொன்னேன். ஆனால் அதுவன்னியில், ஐ.ஏ.எஸ். தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 1985 ஆம் ஆண்டு 2 பேரும், 1986 ஆம் ஆண்டு 6 பேரும், 1988 ஆம் ஆண்டு 5 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் ஓய்வூதியம்.

* 2254 திரு. எஸ். டேனியல்ராஜ்:

திரு. எஸ். டி. உகம்சந்த்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் பென்ஷன் தொகை உயர்த்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

1—8—1989 முதல் சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் ஓய்வூதியத்தினை மாதம் ரூ. 250-லிருந்து ரூ. 350 என்று மாநில அரசு உயர்த்தியுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1989 நவம்பர் 1]

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களுடைய பென்ஷன் தொகையைக் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்கள். பாராட்டுகிறேன். இருந்தாலும்கூட ஏறி வரும் விலைவாசிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தத் தொகை போதுமான தொகை என்று நாம் கருத முடியாது. ஆகவே இந்த ஓய்வூதியத்தை 500 ரூபாயாக உயர்த்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் மத்திய அரசின் பென்ஷன் தொகையை வாங்குகிறவர்கள் மாநில அரசின் பென்ஷன் தொகையாக 100 ரூபாய்தான் வாங்குகிறார்கள். எனவே மத்திய அரசின் பென்ஷன் தொகை வாங்குகிறவர்களுக்கும், மாநில அரசு பென்ஷன் தொகை வாங்குகிறவர்களைப்போல வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போதுள்ள நிதி நிலையில் 250 ரூபாயை 350 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியதே பெரிய காரியம். ஆனால் ஆரம்ப காலத்திலே 50 ரூபாயாகத்தான் இது தொடங்கப்பட்டது. இன்றைக்கு 350 ரூபாய் என்கின்ற அளவிலே இது உயர்ந்திருக் கிறது. மத்திய அரசு வழங்குகின்ற ஓய்வூதியம், அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு மாநில அரசு ஓய்வூதியத்தைக் குறைத்துத் தருகிறதென்ற ஒரு குறையைச் சொன்னார்கள். அது குறையல்ல. ஏனென்றால் மத்திய அரசின் ஓய்வூதியம் பெறுகின்ற வர்களுக்கு மாநில அரசின் ஓய்வூதியம் தேவையே இல்லை. இருந் தாலும் அவர்களைச் சிறப்பிக்க வேண்டுமென்பதற்காக மாநில அரசு அந்தத் தொகையை அவர்களுக்கு அளித்துக்கொண்டிருக் கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, நம்முடைய நாட்டினுடைய விடுதலைக்காகப் பாடுபட்ட பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இன்னும் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த பென்ஷன் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த பென்ஷன் பெறுகிறவர்கள் மறைந்துவிட்ட பிறகு, அவர்கள் குடும்பங்களுக்கு அந்த பென்ஷன் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, இப்போது அந்த முறையில்லை. ஆனால் குறிப்பிட்ட ஒரு சில தியாகிகளுடைய குடும்பங்களுக்கு, அவர்களுடைய மறைவிற்குப் பிறகும்கூட, அந்தக் குடும்பப் பாதுகாப்பிற்காக, இந்தத் தொகை வழங்கப்படுகிறது.

(9-25)

திரு. கே. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குக் கிடைக்கக் கூடிய பென்ஷன் இன்றையதினம் இருக்கிற விலைவாசி அடிப்படையில் பார்க்கிறபோது போதவில்லை என்ற கருத்து பல இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களிடத்திலும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் கொடுத்துவிட்டார்கள். பென்ஷன் வாங்க முடியாத—உண்மையான விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் தியாகிகளுக்கு—அவர்கள் சிறையில் இருந்ததற்காக சர்டிபிகேட் கொடுப்பதற்கான ரெக்கார்டுகளே இல்லை. அவைகளெல்லாம் 'டெஸ்ட்ராய்' பண்ணப்பட்டுவிட்டன அல்லது கொளுத்தப்பட்டுவிட்டன என்று சொல்லுகிறார்கள். அதற்கு கோ-பிரிசனர்ஸ் சர்டிபிகேட் கொடுத்தால் பென்ஷன் கொடுக்கலாம் என்ற ஒரு முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் இப்போது அந்த முறையும் செல்லுபடியாகமாட்டேன் என்கிறது. என்னோடு சிறையில் இருந்த ஒருவர்—மலாய் நாட்டிலிருந்து இங்கு நாடு கடத்தப்பட்ட ஒருவர்—இறந்த பிறகு அவருடைய மனைவி பென்ஷன் கேட்டு விண்ணப்பிக்க மனு செய்தும்கூட கோவை சிறையிலிருந்து சர்ட்டிபிகேட் கிடைக்காமல்—மறைந்த எங்கள் தலைவர் திரு. பி. இராமமூர்த்தி அவர்களோடும் அவர் சிறையில் இருந்தார்—அவர் சர்டிபிகேட் கொடுத்தும் அதையும் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். எனவே இதற்கு அரசு ஒரு வழிவகை கண்டு, இவ்வாறு கைதியாக இருந்தபோது உடன் இருந்தவர்கள் கோ-பிரிசன்ஸ் சர்ட்டிபிகேட் கொடுத்தால் அதை ஒப்புக்கொண்டு பென்ஷன் கொடுக்கும்படி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு யோசனையை இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து, முதலமைச்சராக

1989 நவம்பர் 1]

எம்.ஜி.ஆர். இருந்த காலத்தில், 1—4—1980 அன்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. "சிறைச் சான்றிதழ் இல்லாத நேர்வில், மனுதாரரோடு சிறையில் இருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சக கைதிச் சான்றிதழ்களை ஏற்கலாம்" என்பது அந்த ஆணை. ஆனால், அந்த ஆணை துர்வினியோகப்படுத்தப் பட்டு, அதன் காரணமாக ஏராளமான போலிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, அது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, அந்த முறையைப் பின்பற்றுவதிலே ஒரு தயக்கம் ஏற்பட்டிருக்கின்றது. இருந்தாலும்கூட, சக கைதிகளாக இருந்தவர்கள்—இப்போது நம்முடைய நண்பர் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டவர்களைப் போன்றவர்கள்—அத்தகையவர்கள்—சந்தேகத்திற்கு எள்ளளவும் இடம் இல்லாத வகையில் உள்ளவர்கள் விடுதலைப் போராட்டத்திலே கலந்துகொண்டு, இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிற பெரியவர்கள்—அவர்கள் தருகிற இதுபோன்ற சான்றிதழ்கள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கும் ஓய்வூதியங்கள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் என்னென்ன? அவற்றின் மூலம் பயனடைந்தோர் விவரம் என்ன என்பனவற்றை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் தொடக்க வினாவுக்கு விடையளித்ததைப்போல், ரூ. 250-லிருந்து ரூ. 350-ஆக தியாகிகளுடைய ஓய்வூதியம் உயர்த்தப்பட்டுள்ளது. அதுவன்னியில், மத்திய மாநில அரசுகளின் ஓய்வூதியம் பெறுகிறவர்களைப் பொறுத்தவரையில்—அவர்கள் மத்திய அரசிலிருந்து ஓய்வூதியம் பெற்றாலும், மாநில அரசின் மூலமாக ஓய்வூதியம் பெற்றாலும், அந்தத் தியாகிகள் இறந்து விட்டால், அவர்களுடைய இறுதிச் சடங்கிற்காக உடனடியாக ரூ. 1,000 வழங்க இப்போது இந்த அரசு உத்திரவிட்டுள்ளது. மேலும் இறந்த தியாகிகளுக்கு மரியாதை செய்யும் வகையில். வட்ட ஆட்சியர் பதவிக்குக் குறையாத ஒரு அரசு அலுவலர் இறந்தவருக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்களுக்கு வருமானச் சான்றிதம் வழங்கப்படும்போது, விடுதலைப் போராட்ட வீரர்களின் ஓய்

ஊதியம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படக்கூடாது என்ற அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, அவ்வாறே அண்மையில் ஆணையிடப்பட்டிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வூதியத்தை 100 ரூபாய் உயர்த்திக் கொடுத்ததற்கு நன்றி. ஆனால் அந்த விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் இருப்பவர்களுக்கு ஓய்வூதியத்தை ரூ. 500 என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுத்த வேண்டுமென்பதோடு, அவர்கள் இறந்த பிறகு அவர்களுடைய மனைவிகளுக்கு ஓய்வூதியம் கொடுக்கவும் அந்தக் கணவன் மனைவிக்கு ஒரே ஒரு பெண் குழந்தை கல்யாணம் ஆகாமல் இருந்தால் அவர் இருக்கும் வரையாவது ஓய்வூதியம் தரவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருக்கமான யோசனையைத் திருமதி பொன்னம்மாள் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதை உடனடியாகப் புறக்கணிக்கிற எண்ணம் கொண்டதல்ல இந்த அரசு. அதை நிச்சயமாக இதய சுத்தியோடு யோசிக்கும். ஆனால் ஒன்று சொன்னார்கள், "விரல் விட்டு எண்ணக் கூடியவர்களுக்குத் தான் இது அளிக்கப்படுகிறது" என்று. 1967 ஆம் ஆண்டுவரை சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குரிய ஓய்வூதியம் 1,254 பேர்களுக்குத்தான் வழங்கப்பட்டது. பிறகு தி.மு.க. ஆட்சியிலும் அதற்குப் பிறகு அண்ணா தி.மு.க. ஆட்சியிலும் அந்தத் தொகை பெருகி இன்றைக்கு 9,750 பேர்களுக்கு வழங்கப்படுகிறது. 9,750-ஐ அம்மையார் அவர்கள் விரல்விட்டு எண்ணுவார்களா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். *(சிரிப்பு)*

(9-30)

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்கள் இந்தத் தொகையைப் பெறுவதற்காக மனுச் செய்கிறார்கள். அந்த மனுவைப் பரிசீலனை செய்து முடிவு எடுப்பதற்கே நீண்ட காலம் ஆகிறது. எனவே எப்போது அந்தத் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்படு

989 நவம்பர் 1]

கிறதோ, அப்போதுதான் வழங்கப்படுகிறது. அவர்கள், மனுச் செய்த காலத்திலேயிருந்தே அது கிடைக்க வேண்டுமென்று அரசுக்கு முறையீடு செய்து இருக்கிறார்களே, அந்த முறையிலே அவர்கள் எப்போது விண்ணப்பித்தார்களோ அந்த விண்ணப்ப தேதியிலிருந்தே கிடைப்பதற்குரிய முறையிலே அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அது சில நேரங்களில் தகுதியற்றவர்களுக்கும் கிடைத்துவிடக்கூடும் என்ற காரணத்தினால்தான் அந்த மனுக்கள் ஆராயப்படவேண்டியிருக்கிறது. ஆராயாமலே எல்லோருக்கும் அதை அள்ளிக் கொடுத்துவிட இயலாது என்ற காரணத்தினாலேதான் சிறிது காலமாவது அது குறித்து ஆராய்ந்து அதற்குப் பிறகு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்குவதுபோல, மொழிக்காகவும், மாநிலத்தினுடைய எல்லைக்காகவும் போராடி உயிர் நீத்த அந்த உத்தமத் தியாகிகளுக்கு மத்திய அரசாங்கம் ஏதாவது நிதி வழங்க முன்வருமா? அப்படி ஏதாவது தமிழக அரசு முறையிட்டு மைய அரசு ஏதாவது மறுத்து இருக்கிறதா? அப்படி இல்லையென்றால் மாநில அரசு அந்தக் கொள்கையை மேற்கொண்டு உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய அரசு அது போன்ற ஒரு முயற்சியிலே ஈடுபடவில்லை. ஆனால் மாநில அரசு மொழி நலம் காப்பதற்கும், எல்லை காப்பதற்கும் பாடுபட்டவர்களுக்கு 'மொழிக் காவலர், எல்லைக்காகப் பாடுபட்டோர்' என்ற வகையில் நிதி உதவித் திட்டம் என்ற பெயரில் மாதந்தோறும் 350 ரூபாய் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படுவது போல் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு 1—10—1989 முதல் ஆயிரம் பேர் கூடுதலாக இப்பயனைப் பெறவிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, ஆயிரம் பேர் பயன்படுகின்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவித்தது மிக மகிழ்ச்சிக்குரியது. இன்று நவம்பர்

[1989 நவம்பர் 1

1-ஆம் தேதி, 1956-ஆம் ஆண்டு திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த பகுதிகள் தாய்த் தமிழகத்தோடு இணைந்த நாள் இன்று. அன்று மொழிப் போருக்காகப் பாடுபட்டு திருவிதாங்கூர் தமிழர்களிலே இன்று நாஞ்சில் நாட்டுத் தமிழர்களாக இருக்கின்றவர்களிலே பலருக்குத் தாமிரப் பட்டயங்கள் வழங்கப்பட்டன. இருப்பினும் கூட அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ஊதியம் சிலருக்கு இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. ஏற்கெனவே வழங்கப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்றும், இது வரை வழங்கப்படாமல் இருக்கின்றவர்களுக்கு வழங்குவதற்குரிய முயற்சியை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அந்தத் திட்டமும் உடனடியாகப் பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு நண்பர் குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இன்று நாஞ்சில் நாட்டிற்காக அந்தப் பகுதியைத் தமிழகத்தோடு சேர்க்க வேண்டும் என்பதற்காகப் போராடிய, வெற்றி பெற்ற நாள். இந்த நாளில் அவருடைய கேள்விக்கு நான் தருகின்ற விளக்கம், முன்பு நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது நண்பர் பொன்னப்ப நாடார் அவர்களும், மற்றவர்களும் விடுத்த அழைப்பினை ஏற்று அந்தத் தியாகிகளுக்காக நடைபெற்ற ஒரு திருநாளில்—திங்கள் சந்தை என்று கருதுகின்றேன், அந்த ஊரில் நடைபெற்ற அந்த விழாவில் அந்தத் தியாகிகளுக்கு எல்லாம் மானியங்கள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவர்களுடைய தியாகத்தைப் போற்றுவதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டன. திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். இந்த அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு இந்தப் பிரச்சினைகளை என்றைக்கும் அணுகுவது இல்லை என்பது மிக நன்றாகத் தெரியும். அண்மையில் கூட நாமக்கல் கவிஞருடைய தபால் தலை மைய அரசின் சார்பாக வெளியிடப்பட்டபோது இங்குள்ள பல மாடிக் கட்டிடங்களுக்கு நாமக்கல் கவிஞர் மாளிகை என்கின்ற பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே பாலி சு. நெல்லையப்பர் அவர்களுடைய செல்வி திருமதி பூங்கோதை அம்மாள் அவர்கள் மிகக் கஷ்ட நிலையிலே இருப்பதாக ஒரு கடிதம் எழுதினார்கள். மாண்புமிகு கம்பு

னிஸ்டு கட்சியினுடைய மாநிலத் தலைவர் நல்லசிவன் அவர்கள் தான் அதற்குப் பரிந்துரை செய்து இருந்தார்கள். உடனடியாக பாலி சு. நெல்லையப்பர் அவர்களுடைய செல்வி திருமதி பூங்கோதை அம்மாள் அவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக ரூபாய் 500 வழங்க இந்த அரசு ஆணையிட்டு வழங்கப்படுகிறது. எனவே அறிவிக்கப்பட்டு ஒருவேளை எல்லை காக்கும் போராட்டத்தில், நாஞ்சில் நாட்டைக் காக்கும் போராட்டத்தில் தியாகம் செய்தவர்களுக்கு அந்தத் தொகை தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறதா என்ற தகவல் இல்லை. அது உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால், தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசு அங்கீகாரம் பெறாத நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள்.

* 2235. **திரு. சோ. பால்ராஜ்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அங்கீகாரம் பெறாத அனைத்து நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளை அங்கீகாரம் செய்யும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

இக்கருத்துரு அரசின் ஆய்வில் இருக்கின்றது.

(9 35)

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு நர்சரி பள்ளியிலே இருக்கின்றவர்கள் ஐந்தாவது வரை படித்துவிட்டால் அங்கீகாரம் பெறாத காரணத்தால் அவர்களை ஆறாவது படிப்புக்குச் செல்கின்றபொழுது அங்கிருக்கின்ற பள்ளிகளில் இன்றைக்குப் பரீட்சை வைத்து அவர்களைச் சேர்க்கின்றார்கள். ஐந்தாவது வரை படித்துவிட்டு, பாஸ் செய்துவிட்டு, மறுபடியும் ஆறாவது போகும்பொழுது, அங்கீகாரம் இல்லாத காரணத்தால் அவர்களுக்குப் பள்ளியில் பரீட்சை வைக்கின்றபொழுது சிலபேர்கள் பெயில் ஆகிவிடுகிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளியில் படிக்கின்றவர்களை ஆறாவது படிக்கச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

னிஸ்டு கட்சியினுடைய மாநிலத் தலைவர் நல்லசிவன் அவர்கள் தான் அதற்குப் பரிந்துரை செய்து இருந்தார்கள். உடனடியாக பாலி சு. நெல்லையப்பர் அவர்களுடைய செல்வி திருமதி பூங்கோதை அம்மாள் அவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக ரூபாய் 500 வழங்க இந்த அரசு ஆணையிட்டு வழங்கப்படுகிறது. எனவே அறிவிக்கப்பட்டு ஒருவேளை எல்லை காக்கும் போராட்டத்தில், நாஞ்சில் நாட்டைக் காக்கும் போராட்டத்தில் தியாகம் செய்தவர்களுக்கு அந்தத் தொகை தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறதா என்ற தகவல் இல்லை. அது உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால், தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசு அங்கீகாரம் பெறாத நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள்.

* 2235. **திரு. சோ. பால்ராஜ்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அங்கீகாரம் பெறாத அனைத்து நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளை அங்கீகாரம் செய்யும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

இக்கருத்துரு அரசின் ஆய்வில் இருக்கின்றது.

(9 35)

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு நர்சரி பள்ளியிலே இருக்கின்றவர்கள் ஐந்தாவது வரை படித்துவிட்டால் அங்கீகாரம் பெறாத காரணத்தால் அவர்களை ஆறாவது படிப்புக்குச் செல்கின்றபொழுது அங்கிருக்கின்ற பள்ளிகளில் இன்றைக்குப் பரீட்சை வைத்து அவர்களைச் சேர்க்கின்றார்கள். ஐந்தாவது வரை படித்துவிட்டு. பாஸ் செய்துவிட்டு, மறுபடியும் ஆறாவது போகும்பொழுது. அங்கீகாரம் இல்லாத காரணத்தால் அவர்களுக்குப் பள்ளியில் பரீட்சை வைக்கின்றபொழுது சிலபேர்கள் பெயில் ஆகிவிடுகிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளியில் படிக்கின்றவர்களை ஆறாவது படிக்கச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளாக இருந்தால் கூட, இன்னொரு புதிய பள்ளிக்கூடத்திலே மேல் வகுப்பிலே சேர வேண்டுமானால் தேர்வு நடத்துகிற பழக்கம் பல பள்ளிக்கூடங் களிலே நடைமுறையிலே இருக்கிறது. ஒரே பள்ளிக்கூடத்தி னுடைய துணைப் பள்ளிக்கூடத்திலே படித்தால்கூட தேர்வு நடத்தி எடுக்கின்ற முறை சென்னையிலே சில பள்ளிக்கூடங் களிலே இருக்கிறது. அது, அந்தந்தப் பள்ளிக்கூடத்தில் விண் ணப்பிக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக் கின்ற காரணத்தால், சேர்த்துக் கொள்ளப்படக்கூடிய எண் ணிக்கை குறைவாக இருக்கின்றபொழுது தேர்வு நடத்தி, சிறந்த மாணவர்களை எடுக்கின்ற பழக்கம் பல இடங்களிலே இருப்ப தைத் தவறு என்று நான் கருதவில்லை. மற்றுமொன்று, அங்கீ கரிக்கப்படாத பள்ளிக்கூடங்களிலே படித்த மாணவர்களைச் சேர்க்கக்கூடாது என்று எந்தத் தடையும் கிடையாது. எனவே, தேர்வு நடத்தி சேர்ப்பது தவறு அல்ல என்று நான் கருது கிறேன்

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இது மூலக் கேள்வி யிலிருந்து கொஞ்சம் விலகி வருகிறது. இப்பொழுது டிரெயினிங் ஸ்கூல் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம்—கல்வி இலாக்கா கடுமை யான நிபந்தனைகளை விதித்திருந்தது. அந்த நிபந்தனை களைப்பற்றிக் கவலைப்படாமல் சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் யார் யார் அப்படி நடத்தி வந்தார்கள் என்ப தைப் பார்த்தால், எந்தவொரு தகுதியும் இல்லாமல் பலயிடங் களிலே டிரெயினிங் ஸ்கூல் நடத்தப்பட்டு, அநியாயமான தொகை வசூலிக்கப்படுகிறது. அதைக் காவல் துறையின் மூலம் நடவ டிக்கை எடுக்க கல்வி இலாக்கா முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் முறை தவறாகப் பலயிடங்களிலே நடைபெறுகிற காரணத்தால் அரசு அவற்றை அங்கீகரிக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் என்று ஒரு ஆறு பள்ளிக்கூடங்கள் அங்கீகரிக்கப்பட்டு—அதிலேகூட இரண்டு

1989 நவம்பர் 1]

மூன்று பள்ளிக்கூடங்கள் அவ்வளவு தகுதியுடையதாக இல்லை என்பது பின்னர் காணப்பட்டு, அதற்கும்கூட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் எந்தவொரு பள்ளிக்கூடத்திலேயும், தாங்கள் அவர்களிடத்திலே நிதி கொடுத்து சேர வேண்டிய நிலைமையிருப்பதாகப் புகார் வருமானால், அந்தப் பள்ளிக்கூடம் அங்கீகரிக்கப்படாத பள்ளிக்கூடமாக இருந்தால் அந்தப் பள்ளிக் கூடத்தில் ஏராளமான நிதி கொடுத்து சேர்கிறோம் என்று திட்ட வட்டமான புகார் வருமானால் காவல் துறைக்கு அனுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்க முடியும். மற்று மொன்று, அங்கீகரிக்கப்படாத பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற, பயிற்சி பெற்றதாகச் சொல்லிக்கொண்டு தேர்வு எழுத முனைகிற வர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்குவது இல்லை. ஆனால் நீதிமன்றம் மூலமாக அங்கே பயிற்சி பெற்றுவிட்டதாகத் தாங்கள் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு, அந்த மாணவர் களுக்கு நீதிமன்ற உத்தரவு காரணமாகத் தேர்வு எழுத அனுமதிக் கப்படுகிறது. அந்தத் தேர்வுக்குப் பின்னாலேகூட அவர்களுக்கு வழங்கப்படுகிற சர்டிபிகேட்—அவைகள் அங்கீகரிக்கப்படாத பள்ளியில் படித்துத் தேறியவர்கள் என்ற குறிப்போடுதான் வழங்கப்படுகிறது.

திருமதி பாப்பா உமாநாத்: தலைவரவர்களே, நம்முடைய தமிழகத்தில் ஏராளமான நர்சரி பள்ளிகள் இன்றைக்குத் தோன்றிக்கொண்டு இருக்கின்றன. ஆனால் அந்த நர்சரிப் பள்ளிகள் அந்தக் கல்வியை வர்த்தகமாக்கி வருவதை அரசு அறியும் என்று நான் நினைக்கிறேன். இன்றைக்கு அதிகமாக்கப் பட்டிருக்கக்கூடிய அந்த நன்கொடை என்ற பெயரால் வசூலிக்கப் படுவதைத் தடுப்பதற்கு அரசு அடிக்கடி சொல்லியும்கூட இன்றும் நடைபெறுகிறதே, அதைத் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கை உண்டா என்பதையும் அல்லது அரசே ஏற்பதற்கு முயலுமா என் பதையும் அறிய விரும்புகிறேன்.

(9 40)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான நர்சரி பள்ளிகள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டு அந்தந்த வட்டா ரத்திலுள்ள மக்களுடைய தேவைகள், விருப்பங்கள், ஆதரவு ஆகியவற்றை வைத்து அவை வளர்ந்து கொண்டிருக்கின்றன.

அவற்றையெல்லாம் அரசாங்கம் எடுக்க வேண்டுமானால், உள்ள படியே அரசாங்கத்தின் பொதுநோக்கத்தில் கிராமப் பகுதி கல்வி வளர்ச்சியில் சில ஆண்டுகளாக ஏற்பட்டு வருகிற முன்னேற்றத் திற்காக ஒதுக்கவேண்டிய நிதிக்கே போதுமான நிதி கிடைக்காத தால் இனி வருங்காலத்தில்தான் ஒதுக்க வேண்டுமென்ற அவசியத் திலே இருக்கிறபோது, நாடெங்கும் இருக்கக்கூடிய பல்லாயிரம் தனியாருடைய சிறுசிறு பள்ளிகளையும் அரசாங்கம் ஏற்று முறைப்படி நடத்துவது என்பது இயலாத காரியம். இருந்தாலும் அவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் மூலமாக ஒரு கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அவற்றை முறைப்படுத்த, ஒழுங்கு படுத்த, வரன்முறைப்படுத்த வழி செய்ய முடியுமா? அதற்காக ஏதாவது சட்டம் கொண்டு வரலாமா என்று அரசு ஆய்வு செய்து வருகிறது.

திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 25,000-க்கும் மேற்பட்ட நர்சரி பள்ளிகள் இயங்கி வருகின்றன. பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் அவற்றில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள். நன்கொடை அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு ஒருபுறம் இருந்தாலும் எல்லா பள்ளிகளிலும் அப்படிப்பட்ட குறைபாடு இருக்க வாய்ப்பில்லை. நான்கூட ஒரு நர்சரி பள்ளியை நடத்திக்கொண்டு வருகிறேன். அதிலே பிள்ளைகளை அனுமதிக்கும்போது எந்த நன்கொடையும் வசூலிப்பதில்லை. குறைந்த கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது. இதைப்போல பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள்கூட நடத்திக் கொண்டு வருகிறார்கள். பொது நன்மையை முன்னிட்டு அவை களில் நன்கொடை அதிகம் வசூல் செய்யப்படுவதில்லை. இவை களை முறைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நர்சரி பள்ளிகள் சங்கத்தைச் சார்ந்தவர்கள் நம்முடைய தமிழக அரசை அணுகி இருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஒரு வரைமுறை ஏற்படுத்த வேண்டும். அதன்மூலமாக அரசாங்கத்திற்கு வருமானமும் கிடைக்கும். எனவே, இந்த கல்வி ஆண்டிற்குள் வரைமுறை சட்டங்கள் அம லுக்கு கொண்டு வரப்பட இருக்கின்றனவா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

1989 நவம்பர் 1]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னர் கூறிய விடையிலேயே அம்மையாருடைய வினாவிற்கும் விடை இருக்கிறது. அது ஆய்விலே இருக்கிறது. இப்படிப்பட்டவர்களையெல்லாம் எப்படி கட்டுப்படுத்துவது என்று தெரியாமல்தான் அரசாங்கம் தவித்துக் கொண்டிருக்கிறது. (சிரிப்பு).

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நர்சரி பள்ளிகளை அரசே ஏற்று நடத்துவதில் இருக்கிற சிரமங்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும், ஏற்கனவே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, இன்றைக்கு மத்திய தர குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு தங்களுடைய பிள்ளைகளை நர்சரி பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டுமென்ற ஆர்வம் மேலோங்கி வருகிற நிலையில், அவர்களிடமிருந்து அதிகமாக பணம் கறக்கப்படாமல் இருப்பதற்காக அரசாங்கம் பல்வேறு பகுதிகளில் தங்களுடைய பாலர் பள்ளிகளை, நர்சரி பள்ளிகளை உருவாக்குவதற்கு ஒரு முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதை அரசாங்கத்தினுடைய கொள்கையாகச் சொல்லாமல், என்னுடைய அனுபவ உணர்வாகச் சொல்கிறேன். இருப்பதை ஒழுங்குபடுத்துவதற்கு நான் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன். நடப்பவைகளை செம்மையாக நடத்தி விட்டுத்தான் புதிய பொறுப்பைத் தாங்கிக்கொள்ள முடியும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு சில நர்சரி பள்ளிகளை நடத்துபவர்கள் விதிவிலக்காக இருந்தாலும்கூட, பொதுவாக தமிழ்நாட்டிலே நர்சரி பள்ளிகள் என்று இருப்பவை ஒரு இண்டஸ்ட்ரி போல, ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்வதைப்போல, வருமானத்தை மட்டுமே மையமாக வைத்து நடத்தப்படுபவையாகத்தான் 100-க்கு 99 இருக்கின்றன. இதுதான் யதார்த்தமான உண்மை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே திருமதி எஸ். பி. சற்குணம் அவர்களின் பள்ளிக்கு விதிவிலக்கு உண்டா? (சிரிப்பு).

திரு. மு. இராமநாதன் : அதுபற்றி கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஆய்வு குழுவினர்தான் முடிவெடுக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஆகவே, இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது பாமர மக்கள், நடுத்தர மக்களுக்கு அங்கீகாரம் உள்ள பள்ளியா, அங்கீகாரமற்ற பள்ளியா என்ற விவரம் தெரியாத காரணத்தால், அங்கே ஏதோ உயர்ந்த கல்வி கிடைக்கிறது என்ற ஒரு மயக்கத்தில் அந்த கல்விக்கூடங்களை நாடிச் சென்று, பின்னால் உயர் கல்வியைப் பெறப் போகும்போது அங்கே வாய்ப்பு இல்லாமல் தவிக்கின்ற நிலை இருக்கிறது. அதையாவது கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் வழிவகையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(9-45)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இது குறித்துத்தான் ஆய்வு செய்யப்படுகிறது. ஆனால் அந்தப் பள்ளிக்கூடங்களினுடைய நிர்வாகங்கள் தனியார் கையிலே இருக்கிறபோது, அந்த நிர்வாகத்திலே ஏற்படக்கூடிய குறைகளை அரசாங்கம் நேரடியாகக் களைய வாய்ப்பு கிடையாது. ஏதேனும் புகார்கள் வருமானால்தான், அதுவும் அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய விதிமுறைகளுக்கு மாறாக இப்படிப்பட்ட அநீதி நடைபெற்றது என்று சொன்னால்தான், அவை பற்றி நடவடிக்கை எடுக்க முடியும். மற்றொன்று அரசாங்கத்தின் சார்பிலும் மாநகராட்சி, நகராட்சி மன்றம், இவை சார்பாகவும் தொடங்கப்பட்ட பள்ளிகள் ஏராளமாக இருப்பதால், அவற்றை இன்னும் தரம் உயர்த்துகிறபோதுதான் இந்தச் சிக்கல் தீரும் என்று நான் நம்புகிறேன்.

திரு. எம். மோசஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குமரி மாவட்டத்திலே உள்ள ஆரம்பப் பள்ளிகள் எல்லாம் பல ஆண்டுக் காலமாக தனியார் கையிலேயும், தனியார் நிறுவனங்களிடத்திலேயும் இருந்து, அவற்றை இப்போது அரசாங்கம் ஏற்று இருக்கிறது. ஆனால் அந்தக் கட்டிடங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. நீங்கள் ஒதுக்கியிருக்கின்ற நிதி, அவற்றைச் செப்பனிடுவதற்குப் போதுமானதாக

இல்லாமல் பற்றாக்குறையாக இருப்பதால், அநேகக் கட்டிடங்கள் அடுத்த மழையில் விழுமோ, அடுத்த காற்றில் விழுமோ, பிள்ளைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற நிலையிருக்கிறது. அநேக பள்ளிகளிலே பிள்ளைகள் மரத்தடியிலே பாடங்களைக் கற்றுக்கொண்டு வருகிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ? அது குறித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலைமை இன்னும் பல மாவட்டங்களிலே கூட இருக்கின்றன. புயலும், மழையும் வராமல் இருக்கவேண்டும் என்றுதான் கல்வி அமைச்சர் வேண்டிக்கொள்ள முடியும். ஆனால் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பாக, அப்படிப்பட்ட பாழடைந்த கட்டிடங்களை அவை இடிந்துவிடும் என்ற சந்தேகத்திற்கு இடமாக இருந்தால், அங்கு வகுப்புகளை நடத்தக்கூடாது என்று இந்தத் துறையின் சார்பாக, முதலில் பிள்ளைகளினுடைய பாதுகாப்பு கருதி அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. அடுத்து கட்டிடங்கள் கட்டுவதற்கு, கடந்த காலத்தில் தொடர் முயற்சி இல்லாமல் போய்விட்டதன் காரணமாக ஒரு பெரிய முயற்சி, ஒரு பெரிய நடவடிக்கை தேவைப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரட்டக்கூடிய நிதி வசதியைப் பொறுத்து, வருகிற கல்வி ஆண்டிலாவது, இதில் முழு கவனம் செலுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடந்து கொண்டிருக்கிற நர்சரி, பிரைமரி பள்ளிகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசு அங்கீகாரம் பெற்ற பிறகுதான், நர்சரி, பிரைமரி பள்ளிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற உத்தரவும், தடையும் விதிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஏராளமாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், அவற்றை நாம் இப்போது குறுக்கிட்டு நிறுத்துவது என்பது பொதுமக்களுக்கு ஏற்பு உடையதாக இருக்குமா என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. புதிதாகத் தொடங்குவதற்கு விதிமுறைகளை அமைப்பது மூலம் வேண்டுமானால் செய்து பார்க்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS

அப்போதுங்கூட விதிமுறைகள் மீறப்படுவது ஏராளமாக இருக்கும் என்ற சந்தேகத்தின் காரணமாகத்தான் எப்படி இதை அணுகுவது என்பது ஆராயப்படுகிறது.

குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கு அனுமதி.

*3390 திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில், பெண்களையும் அனுமதிக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

குமாரபாளையம் ஆசிரியர் கல்லூரியில் பி.எட். வகுப்பில் மகளிர் சேர்க்கப்படுவதில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர் திரு. சீனிவாசன் கேள்விக்கு, கோர்ட்டிலேயிருந்து ஆணை யிட்ட பிறகு, அவர்களை நாங்கள் அனுமதிக்கிறோம், சர்ட்டிபிகேட் கொடுக்கும்போது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தீட்சிதர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். உங்களைப் போன்ற முன்வரிசை யிலே இருப்பவர்கள், வினாவிற்குத் தொடர்பானவற்றைக் கேட்டால்தான் மற்றவர்கள் பின்பற்றுவார்கள். மூன்று வினாக்கள் ஏற்கெனவே 48 மணித்துளிகளை விழுங்கியிருக்கின்றன. இன்னும் 17 வினாக்கள் இருக்கின்றன என்பதைத் தாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அடுத்து வினா எண் 2186.

காரைக்குடியைத் தலைநகரமாகக் கொண்டு தனி மாவட்டம்.

*2186 திரு. ராம நாராயணன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காரைக்குடியை தலைநகராகக் கொண்டு தனி மாவட்டம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

அப்போதுங்கூட விதிமுறைகள் மீறப்படுவது ஏராளமாக இருக்கும் என்ற சந்தேகத்தின் காரணமாகத்தான் எப்படி இதை அணுகுவது என்பது ஆராயப்படுகிறது.

குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கு அனுமதி.

*3390 திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில், பெண்களையும் அனுமதிக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே,

குமாரபாளையம் ஆசிரியர் கல்லூரியில் பி.எட். வகுப்பில் மகளிர் சேர்க்கப்படுவதில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர் களே, ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப் பினர் திரு. சீனிவாசன் கேள்விக்கு, கோர்ட்டிலேயிருந்து ஆணை யிட்ட பிறகு, அவர்களை நாங்கள் அனுமதிக்கிறோம், சர்ட்டிபி கேட் கொடுக்கும்போது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தீட்சிதர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். உங்களைப் போன்ற முன்வரிசை யிலே இருப்பவர்கள், வினாவிற்குத் தொடர்பானவற்றைக் கேட் டால்தான் மற்றவர்கள் பின்பற்றுவார்கள். மூன்று வினாக்கள் ஏற்கெனவே 48 மணித்துளிகளை விழுங்கியிருக்கின்றன. இன்னும் 17 வினாக்கள் இருக்கின்றன என்பதைத் தாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அடுத்து வினா எண் 2186.

காரைக்குடியைத் தலைநகரமாகக் கொண்டு தனி மாவட்டம்.

*2186 திரு. ராம நாராயணன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காரைக்குடியை தலைநகராகக் கொண்டு தனி மாவட்டம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

அப்போதுங்கூட விதிமுறைகள் மீறப்படுவது ஏராளமாக இருக்கும் என்ற சந்தேகத்தின் காரணமாகத்தான் எப்படி இதை அணுகுவது என்பது ஆராயப்படுகிறது.

குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கு அனுமதி.

** 3390* **திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில், பெண்களையும் அனுமதிக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

குமாரபாளையம் ஆசிரியர் கல்லூரியில் பி.எட். வகுப்பில் மகளிர் சேர்க்கப்படுவதில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர் திரு. சீனிவாசன் கேள்விக்கு, கோர்ட்டிலேயிருந்து ஆணையிட்ட பிறகு, அவர்களை நாங்கள் அனுமதிக்கிறோம், சர்ட்டிபிகேட் கொடுக்கும்போது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தீட்சிதர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். உங்களைப் போன்ற முன்வரிசையிலே இருப்பவர்கள், வினாவிற்குத் தொடர்பானவற்றைக் கேட்டால்தான் மற்றவர்கள் பின்பற்றுவார்கள். மூன்று வினாக்கள் ஏற்கெனவே 48 மணித்துளிகளை விழுங்கியிருக்கின்றன. இன்னும் 17 வினாக்கள் இருக்கின்றன என்பதைத் தாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அடுத்து வினா எண் 2186.

காரைக்குடியைத் தலைநகரமாகக் கொண்டு தனி மாவட்டம்.

*** 2186 திரு. ராம நாராயணன் :**

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூங்கா நகர்த் தொகுதி மாத்திரமல்ல. சென்னையில் உள்ள பல்வேறு தொகுதிகளில் உள்ள குடிசைமாற்று வாரிய வீடுகள் பழுதடைந்திருக்கின்றன. நானும் குடிசை மாற்று வாரியத்தின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருக் கிறேன். அமைச்சரிடத்திலும், வாரியத் தலைவரிடமும் பல முறை பழுதுபார்க்கிற பிரச்சினை பற்றி எடுத்துச் சொல்கிற போது நிதியாதாரம் போதவில்லை என்று எங்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசினுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சொல்லி இதற்கான நிதி யாதாரத்தைப் பெருக்குகிற முயற்சிகளில் நமது அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய கருத்து நிச்சயமாகப் பரிசீலனை செய்யப்படும். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன்—பல ஆண்டுக்காலமாக பரா மரிப்பு செய்யப்படாமலே இருந்த பழுதடைந்த கட்டிடங்களை எல்லாம்—105 குடியிருப்புகள் பழுதடைந்திருப்பதாகக் கணக் கிடப்பட்டு, ஒட்டுமொத்தமாக ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீர்படுத்துகிற பணி தொடரப்பட்டு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நிதியாதாரத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசு, குடிசை மேம்பாட்டுப் பணிக்காக பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்கு தலா 50 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. ஆனால் தமிழகத்தில் சென்னையில் மட்டும் 1417 குடிசைப் பகுதிகள் இன்றையதினம் இருக்கின்றன. இந்தப் பகுதிகளுக்கு—எந்த நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முயற்சியால் மதிப்பிற்குரிய திரு. சால்வே அவர்களின் தலைமையில் இயங்குகின்ற நிதிக்குழுவை தமிழகத் திற்கு வரவழைத்து அவர்களை அத்தனை குடிசைப் பகுதி களுக்கும் நேரில் அழைத்துச் சென்று பார்வையிடச் செய்தோம்

1989 நவம்பர் 1]

(10-25)

அவர்கள் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிதி இன்னும் கிடைக்க வில்லை. அந்த 50 கோடி ரூபாய் கொடுத்தால் இந்தக் குடிசை மாற்று வாரியத்தில் இன்னும் நல்ல பணிகளைச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, குடிசையிலே வாழ்கின்ற மக்களுக்கு கோபுரம் போல வீடுகளை அவர்களை அங்கே குடியமர்த்துவதற்காக கட்டிக்கொண்டிருக்கிறோம். மேலும் குடிசைப் பகுதிகளிலே அடிப்படை வசதிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். மேலும் நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதில் என்னுடைய வயிற்றிலே பால் வார்த்தது போல இருக்கிறது. ஆகவே, இந்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய்க்கு மேல் குடிசைப் பகுதிகளைப் பராமரிப்பதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாக இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே, குறிப்பாக சென்னையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்தான் 1972 ஆம் ஆண்டிலே முதன் முதலாக குடிசை மாற்று வாரியத்தை அமைத்தார்கள். தற்போது டி. எஸ். மூர்த்தி நகர், வியாசர்பாடி போன்ற பகுதிகளில் உள்ள குடிசைமாற்று வாரிய வீடுகள் எல்லாம் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றிற்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது? அதுவன்னியில் குடிசை மாற்று வாரியமே ஆழ் குழாய் கிணறுகள், குடிநீர் வழங்குகின்ற நிலையங்கள், கழிவு நீர் போக்கு நிலையங்கள் போன்ற பலவற்றை அமைத்திருக்கிறது. அவற்றிலும் மிகவும் மோசமான சூழ்நிலை இருக்கிறது. அவற்றிற்கும் பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்பணிகளையும் ஏற்று செயல்படுத்துகின்ற செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா? மேலும் நிதிநிலை பற்றி . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடி பகுதியில் கட்டிடம் பழுது பார்ப்பதற்காக 13·77 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அப்பணியும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகு புதிதாக சென்னை மாநகரில் எத்தனை இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மாடி வீடுகள் கட்டப்படுகின்றன? அதோடு குடியிருப்புக்குப் பட்டா வழங்குகின்ற விஷயத்தில் ஒரு நெறிமுறை காலா காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. அதாவது 3 சென்டுக்குக் குறைவாக பட்டா வழங்குவதில்லை என்ற நெறிமுறை இருக்கிறது. ஆனால் குடிசைப் பகுதிகளில் 3 சென்ட் பகுதியிலேயே இரண்டு, மூன்று வீடுகள் இருக்கின்றன. எனவே குடிசைப் பகுதிகளில் பட்டா வழங்குவதைப் பொறுத்தவரையில் புதிய நெறிமுறைகளை வகுத்து அதன் அடிப்படையில் அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளை அவர்களுக்கே பட்டா போட்டு வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக புதிதாக 9 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் 2 ஆயிரத்து 664 குடியிருப்புகளை, மாடி வீடுகளைக் கட்டுவதற்கான பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பட்டா வழங்குகின்ற திட்டத்தின் அடிப்படையில் உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி பற்றாக்குறையை போக்குவதற்காக முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள அரங்கநாதபுரத்தில் இருக்கின்ற குடிசை மாற்று வாரிய வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. குடிநீர் வண்டிகளை அங்கே கொண்டு வருவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கிறது. அதனால் மக்கள்

1989 நவம்பர் 1]

மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செலுத்தும் கவனத்தில் ஒரு பகுதியை என்னுடைய பகுதிக்கும் செலுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையைப் பொறுத்து இந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை மாநகரம் முழுவதும் உள்ள குடியிருப்புக்களைப் பழுதுபார்க்க ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய எழும்பூர் தொகுதியில் உள்ள சந்தோஷ் நகர், எம்.எஸ். நகர் ஆகிய இரண்டு பகுதிகளிலுமுள்ள குடியிருப்புக்களைப் பழுதுபார்க்க எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது? அத்துடன் என்னுடைய தொகுதியிலும் புதிதாக மாடி வீடுகள் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளைப் பழுதுபார்க்கின்ற பணியைப் பொறுத்தவரையில் 2 இடங்களில் 12 வேலைகள் 10 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புதிதாக வீடுகள் கட்டுகின்ற வினாவைப் பொறுத்தவரையில் தனி வினா எழுப்ப வேண்டும்.

(10-30)

திரு. சா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லுகின்ற பதிலிலிருந்து, மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கினால்தான் முழுத் திட்டத்தையும் செயற்படுத்த முடியுமென்பது தெரிகிறது. ஆனால் மத்திய அரசு இப்போது உதவி செய்யுமா என்பது சந்தேகத்திற்கிடமான நிலையில் இருக்கின்ற காரணத்தால், மாநில அரசே முன் வந்து, மேலும் நிதியை ஒதுக்கி, குடிசைப் பகுதிகளைச் சீர்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமை சம்பந்தமாக மாண்புமிகு முதல்வரவர்களுடன் பேசி, நல்ல முடிவுகள் விரைவில் எடுக்கப்படும்.

[1989 நவம்பர் 1

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆண்டுகளாக சரிவரப் பராமரிக்கப் படாமல், குடிசைப் பகுதிகள் எல்லாம் இடிந்து விழக்கூடிய சூழ் நிலை இருப்பதைக் கடந்த ஆலோசனைக் கூட்டத்திலே அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்த காரணத்தால் கூடுதல் நிதியாக ஏறக்குறைய 3 கோடி ரூபாயை அவசரமாக அரசாங்கத் திடமிருந்து பெற்றுத் தருவதாக ஆலோசனைக் குழுவில் அமைச்சர் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அந்த 3 கோடி ரூபாய் நிதியை, இங்கேயே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் களிடத்தில் கலந்து பேசி, உடனடியாகப் பெற்றுத் தர முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பணிகள் முதலிலே செய்ய வேண்டுமென்பதைக் கண்டறிந்து, அந்த வேலைகளுக்கு முன் னுரிமை கொடுக்கும் வகையில், விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் பேசி, முடிவுகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இங்கேயே முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, நிதிநிலை பற்றி அறிவிப்பாரா என்று கேட்டிருக்கிறார். இங்கே பைனான்ஸ் செக்ரட்டரி வர இயலாது. இந்த இடத் திற்குள்ளே பைனான்ஸ் செக்ரட்டரி வர இயலாது

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்காக ஒரு குறிப்பிட்ட சதவிகிதத் தொகை ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப் படுவதாக நான் அறிகிறேன். அதுமாதிரியாக குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுது பார்க்க, அதனுடைய மொத்த மதிப் பீட்டிலே இவ்வளவு தொகை என்று ஒவ்வோர் ஆண்டும் ஒதுக் கீடு செய்யும் நடைமுறை இருந்து வருகிறதா? அப்படி இல்லை என்றால், பொதுவாக இந்தக் கட்டிடங்களைப் பழுது பார்ப்பது என்பதை அவ்வப்போது செய்யவில்லையென்றால், பின்னால் அதிகமான தொகை இதற்காகச் செலவாகுமே, எனவே ஒவ் வோர் ஆண்டும் அதற்காக ஒரு தொகையை ஒதுக்கி, அவ்வப் போது வரக்கூடிய பழுதுகளை சரி பார்ப்பதற்கான ஏற்பாடு களை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் குடிசை மாற்று வாரியம் உருவாக்கப் பட்டது. இந்த வாரியக் கட்டிடங்கள் பல ஆண்டுக்காலமாக பராமரிப்பு செய்யப் படவில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாக சிறுசிறு பணிகள் தான் நடைபெற்றிருக்கின்றன. இந்த அரசு வந்ததற்குப் பிறகு தான் ஒட்டுமொத்தமாகப் பழுது பார்க்கும் பணி மதிப்பீடு செய்யப்பட்டு, இன்றையதினம் ஒரு கோடியே அறுபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. கே. ரமணி, திரு. கோ. வீரையன் ஆகியோர் தமிழகத்தில் அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலைக் கடைகளில் விநியோக முறை சரியில்லாமையால் அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றம் என்னும் பொருள் குறித்து விவாதிக்க இப்பேரவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இப்பொருள் எவ்வாறு அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக ரேஷன் கடைகளிலே இதற்கு முன்னாலே வழங்கப்பட்டதுபோல குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் அதிகபட்சம் 20 கிலோ அரிசி

[1989 நவம்பர் 1

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் குடிசை மாற்று வாரியம் உருவாக்கப் பட்டது. இந்த வாரியக் கட்டிடங்கள் பல ஆண்டுக்காலமாக பராமரிப்பு செய்யப் படவில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாக சிறுசிறு பணிகள் தான் நடைபெற்றிருக்கின்றன. இந்த அரசு வந்ததற்குப் பிறகு தான் ஒட்டுமொத்தமாகப் பழுது பார்க்கும் பணி மதிப்பீடு செய்யப்பட்டு, இன்றையதினம் ஒரு கோடியே அறுபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. கே. ரமணி, திரு. கோ. வீரையன் ஆகியோர் தமிழகத்தில் அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலைக் கடைகளில் விநியோக முறை சரியில்லாமையால் அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றம் என்னும் பொருள் குறித்து விவாதிக்க இப்பேரவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இப்பொருள் எவ்வாறு அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக ரேஷன் கடைகளிலே இதற்கு முன்னாலே வழங்கப்பட்டதுபோல குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் அதிகபட்சம் 20 கிலோ அரிசி

என்று வழங்கி வந்ததை வழங்காத காரணத்தாலும், வெளிச் சந்தையில் அரிசியினுடைய விலை ஒரு கிலோ சுமார் 6 ரூபாய்க்கு மேலே 8 ரூபாய் வரை விற்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதாலும், உணவுப் பொருள்கள் பற்றாக்குறை, அரிசி விலை ஏற்றம், அரிசி போதுமான அளவுக்குக் கிடைக்காத நிலைமை ஆகியவற்றால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்கும், தொல்லைக்கும் உள்ளாகியிருக்கிறார்கள். எனவே இவற்றைப் பற்றி விவாதிக்கத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கான காரணங்கள் என்ன என்பதையும், அரசு எந்த அளவிலே சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது குறித்தும் நான் சுருக்கமாக விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மார்ச்சு மாதம், நிதிநிலை அறிக்கை சட்ட

(10-35)

மன்றத்திலே வைக்கப்பட்டபோது அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "1987-88 ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி சுமார் 58 லட்சம் டன்னாக இருந்தது என்றும், இந்த ஆண்டு அதாவது 1988-89 இல் அரிசி உற்பத்தியின் அளவு சுமார் 57 லட்சம் டன்களாக இருக்கும் என்றும், உணவு உற்பத்தியில் குறை ஏற்படாது என்றும்" மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்கள். அதாவது சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் உற்பத்தியிலுள்ள வித்தியாசம் ஏறக்குறைய 1 லட்சம் டன்தான். அதாவது ஏறக்குறைய அதே அளவுதான் உற்பத்தியாகி இருக்கிறது. சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் சுமார் 57 லட்சம் டன் உற்பத்தியாகியிருக்கிறது.

கொள்முதலைப் பொறுத்தவரை, ஒவ்வொரு ஆண்டும் அரசு கொள்முதல் செய்ய வேண்டிய அளவைக் குறிப்பிட்டு,—அதுவும் உணவு நிலைமை—பாரா 17 இல் நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது—நாம் இந்த ஆண்டும் அரசு கொள்முதல் திட்ட இலக்கான 7 லட்சம் டன் அளவை அடைவோம் என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதாவது இந்த ஆண்டுக்கு 7 லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டும், அதைக்கொள்முதல் செய்து விடுவோம் என்றும் நிதிநிலை அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருப்பதை நான் என்னுடைய முன்னுரையாகக் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 நவம்பர் 1] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? தமிழ்நாட்டில் சராசரியாக சுமார் 85,000 குடும்ப அட்டைகள் என்று எடுத்துக்கொண்டாலும் அவற்றிற்கு மாதம் அதிகபட்சமாக 20 கிலோ என்று கொடுப்பதாக வைத்துக்கொண்டால் கூட ஒரு மாதத்திற்கு 80,000 டன் அரிசி பொதுமக்களுடைய விநியோகத்திற்காகத் தேவைப்படலாம். அதைப் போலவே சத்துணவுத் திட்டத்திற்கு மாதம் சுமார் 15,000-லிருந்து 20,000 டன்வரை தேவைப்படலாம். ஆக 90,000 டன்னிலிருந்து அல்லது அதிகப்பட்சமாகப் போனால் 1 லட்சம் டன்னாகவும், குறைந்தபட்சமாக 80,000 டன் அரிசியும் மாதாமாதம் பொது மக்களுக்கும், சத்துணவுத் திட்டத்திற்குமாகச் சேர்ந்து தேவைப்படுகிறது. நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதைப் போல் கணக்குப் பார்த்தால், 7 லட்சம் டன் அரிசியை இந்த அரசு கொள்முதல் செய்திருக்குமானால், மத்திய அரசு இப்போது தருவதாகச் சொல்லப்படுகிற மாதம் ஒன்றுக்கு 50,000 டன் அரிசியையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், ஆண்டுக்கு 6 இலட்சம் டன் அவர்களிடமிருந்து நமக்குக் கிடைக்கிறது. ஆக 7 லட்சம் டன் கொள்முதல் அரிசி பிளஸ் 6 லட்சம் டன் மத்திய அரசு ஒதுக்கீடு என்று இவற்றைச் சேர்த்தால் 13 லட்சம் டன் அரிசி ஆண்டுதோறும் கிடைக்கிறது. ஆனால் அதிகபட்சமாக நமக்கு ஆண்டு ஒன்றுக்குத் தேவைப்படுவதோ 12 லட்சம் டன்தான். நிலைமை இப்படி இருக்கிறபோது மாதம் ஒன்றுக்கு கார்டுக்கு 20 கிலோ வரை—அதாவது போதுமான அளவு ரேஷன் கடைகளிலே ஏன் வழங்க முடியவில்லை? அரசு அறிவித்ததைப்போல் 7 லட்சம் டன் அரசின் உச்சபட்ச கொள்முதல் அளவை ஏன் எட்ட முடியவில்லை? அதிலே அரசு ஏன் கவனம் செலுத்தவில்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் வாயிலாக நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாதத்தில் 5 கிலோ அரிசியை சில நேரங்களில் இனாமாகத் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படி குடும்ப அட்டைகளுக்கு 5 கிலோ அரிசியை இனாமாகக் கொடுப்பதோடு, அந்த மாதத்திற்கு வழங்கப்படுகிற ரேஷன் அரிசியின் அளவும் கொடுக்கப்படாமல் நிறுத்தப்படுகிறது. இனாமாக எந்தெந்த மாதத்தில் 5 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறதோ அந்த இனாம் அரிசி மட்டும்தான் வழங்கப்

படுகிறதே தவிர, அதிகபட்சமாக 20 கிலோவாக ரேஷன் அரிசி அளவு அதிகரித்துக் கொடுக்கப்படுவதில்லை. இதனாலே என்ன நன்மை என்று பார்த்தால்—5 கிலோ அரிசி இனாம் என்று பார்த்தால்—ஒரு கிலோவிற்கு 2 ரூபாய் வித்தியாசம் என்று வைத்துப் பார்த்தாலும் 10 ரூபாய்தான் அவர்களுக்குச் சகாய மாகக் கிடைக்கிறது. ஆனால் 12 கிலோவை அவர்கள் மாதாமாதம் வாங்கினால், கிடைக்கிற நன்மை இப்போது கிடைப்பதில்லை. காரணம் 7 கிலோவை அவர்கள் இனாமாக 5 கிலோ வாங்கும் மாதங்களிலே வெளியே வாங்க வேண்டியிருக்கிறது. 7 கிலோ அரிசியை வெளியே வாங்கினால் அதன் விலை 42 ரூபாய் ஆகிறது. 12 கிலோவை ரேஷன் கடைகளில் வாங்கினால் 24 ரூபாய்தான் அவர்களுக்கு ஆகும். இதனால் இலவச அரிசி கொடுப்பதால் ஏழைகளுக்கு நன்மை இல்லை. அதற்குப் பதிலாக மாதாமாதம் உரிய விலையில் தமிழக அரசு ரேஷன் கடைகளில் குறைந்தபட்சம் 12 கிலோ அரிசியை அல்லது அதிக பட்சமாக 20 கிலோ அரிசியைக் கொடுக்குமானால் அதனால் ஏழை எளிய மக்களுக்குப் பலன் ஏற்படும். இலவச அரிசியைப் பெறுவதைவிட இதன் மூலமாக ஏழை எளிய குடும்பங்கள் பெரிதும் பயன் அடைவார்கள்.

இன்னொன்று, நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போல் மத்திய அரசு மாதாமாதம் 50,000 டன் அரிசியை வழங்கி வருவதைப் பார்க்கிறோம். இதிலே ஏதோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் மாதம் 1 லட்சம் அரிசியைக் கொடுத்து வந்ததைப் போலவும், தி.மு.க. ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னாலே அதை நிறுத்தி விட்டதைப் போலவும் செய்திகள் பரப்பப்படுகின்றன. நான்கூட உணவுத்துறை அமைச்சராக இருந்திருக்கிறேன். தமிழ்நாட்டிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலமான 11 ஆண்டு காலத்தில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அரிசி விலை மிகவும் குறைவாக இருந்தது என்கிற உண்மையை நாடு அறியும்.

(10-40)

பக்கத்திலே தெலுங்கு தேசம் ஆட்சி செய்கின்ற ஆந்திரமாக இருந்தாலும் சரி, கர்நாடகமாக இருந்தாலும் சரி, மேற்கு வங் காளமாக இருந்தாலும் சரி, எந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, தமிழ்நாட்டிலே தான் அரிசி விலை மிகக்

1989 நவம்பர் 1] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

குறைவு. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கையிலே மட்டும் அன்றைக்குக் காமதேனுவை வைத்துக்கொண்டு, அதற்கு வேண்டிய அரிசியைப் பெற்று வழங்கிக் கொண்டிருக்கவில்லை. அரசினுடைய அணுகுமுறையால் சரியான அளவு கொள்முதல் செய்ததால் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக அந்த நேரத்திலே அதிகரித்துக் கொடுத்து, நெல் அரிசி கொள்முதல் செய்த காரணத்தினாலே அன்றைக்கு நிலைமையைச் சமாளிக்க முடிந்தது. வறட்சி வந்த நேரத்திலேயும் சரி, அல்லது வெள்ளம் போன்றவை பாதித்த நேரத்திலேயும் சரி, எல்லா நேரத்திலேயும் அரிசித் தட்டுப்பாடு தமிழகத்திலே இல்லாமல் இருந்தது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னவோ தெரியவில்லை, வெளியே எல்லோரும் சொல்வதைப் போல தி.மு.க. அரசுக்கும், அரிசிப் பற்றாக்குறைக்கும் சம்பந்தம் உண்டு என்று சொல்வது போல, இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலே அரிசிப் பற்றாக்குறையும் தொடர்ந்து உங்களுக்குத் தொல்லையாக, ஆட்சிக்குத் தொல்லையாக, அதே நேரத்திலே பொது மக்களுக்கும் தொல்லையாக இருக்கின்ற நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது. இதிலே கொள்முதல் செய்ய வேண்டிய நேரத்திலே சரியான கவனம் செலுத்தவில்லை என்று நான் சொல்வதற்குக் காரணம், உணவுத் துறையால், உணவு அமைச்சர் அவர்களால் திடீரென்று 3 மாதத்திற்கு முன்னாலே, 'லெவி பூர்ணமாக நீக்கப்படுகிறது' என்று ஒரு அறிவிப்பு வந்தது. அதற்குப் பிறகு ஒன்று அல்லது இரண்டு மாதம் கழித்து இன்னொரு அறிவிப்பு 50 சதவீதமாக லெவி கொண்டுவரப்படுகிறது என்று அறிவிப்பு வந்தது. அதற்குப் பிறகு விவசாயிகளுக்குப் பின்னாலே இருக்கின்ற வெளிச் சந்தையில் இருக்கிற வியாபாரிகளை எல்லாம் அழைத்து ஒரு கூட்டம் நடத்தி, அந்தக் கூட்டத்தின் முடிவாக, லெவி 50 சதவிதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது என்று அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது. நான் கேட்பது, ஏன் இந்தத் தடுமாற்றம்? அரசின் சார்பிலே லெவி அளவை அதிகரித்து வியாபாரிகளிடத்திலிருந்து அதிகம் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக லெவியைக் குறைத்ததினுடைய நோக்கம் என்ன? ஏன் குறைக்கப்பட்டது? நீங்கள் பட்ஜெட்டிலே குறிப்பிட்டதைப் போல போதுமான அளவு 7 லட்சம் டன் டார்ஜெட்

டாக இருக்கும்போது தேவையான அளவு கொள்முதல் ஆவதற்கு முன்னாலேயே லெவி அளவு ஏன் குறைக்கப்பட்டது? இப்படி அரசினுடைய தவறான அணுகுமுறையால், சரியாகக் கவனம் செலுத்தி கொள்முதல் செய்யாததால் இப்போது அரிசி போதுமான அளவு ரேஷன் கடைகளிலே வழங்கப்படவில்லை. நான் விசாரித்தபோது 5 கிலோ, 6 கிலோதான் மாதாமாதம் மொத்தமாகக் கொடுக்கப்படுகிறது. மாதாமாதம் ரேஷன் கடைகளிலே போதுமான அளவுக்கு அரிசி கொடுக்காத காரணத்தினாலேதான் வெளிச் சந்தையிலே அரிசியின் விலை அதிகமாக ஏறி இருக்கிறது. அதுதான் அதற்குக் காரணம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களோ அல்லது அதிகாரிகளோ டில்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்து, உணவுக் கார்ப்பரேஷன் அதிகாரிகளைச் சந்தித்து, உணவு அமைச்சரைச் சந்தித்து வலியுறுத்தி இருக்கலாம். எனக்குத் தெரிய ஒரு தடவை முதலமைச்சர் அவர்கள் சென்று வந்து இருக்கிறார்கள். வேலை நிமித்தம் முதலமைச்சர் அவர்கள் செல்லவில்லை என்றாலும், சம்பந்தப்பட்ட உணவு அமைச்சரையாவது ஒரு தடவைக்கு இரண்டு தடவை அனுப்பி அவர்களோடு பேசி அரிசி அதிகமாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். இதில் என்னவோ கௌரவப் பிரச்சினை பார்த்துக்கொண்டு, நாம் என்ன கேட்பது, அவர்களே தர வேண்டியது தானே என்கின்ற அணுகுமுறையோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் சரியான அணுகுமுறை இல்லாத காரணத்தினாலே மத்திய அமைச்சரே இங்கே வந்து ஒரு கூட்டத்தை நடத்தி அதற்குப் பின்னால் மத்திய அமைச்சர் "தமிழ்நாட்டில் போதுமான அளவு அரிசி உற்பத்தி இருக்கிறது : கொள்முதல் சரியாகச் செய்யப்படவில்லை ; வேறு மாநிலங்களுக்கு, கேரளா போன்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாட்டில் உற்பத்தி ஆகிற அரிசி கடத்தப்படுகிறது" என்ற தகவலை இங்கே பத்திரிகையாளர்களிடத்திலே சொல்லி, அந்தச் செய்தியும் பத்திரிகைகளிலே வந்து இருக்கிறது. வெளி மாநிலங்களுக்குப் போகிற அரிசியைத் தடுக்காத நிலை, தமிழ்நாட்டிலே கொள்முதல் செய்யக்கூடிய அளவுக்கு, வேண்டிய அளவுக்கு விவசாயிகளை உற்சாகப்படுத்தி அதிகமாக அவர்களுக்கு ஏதாவது பணம் கொடுத்து அவர்களிடத்தில் கொள்

முதல் செய்யாத நிலைமை—இவைதான் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற அரிசி தட்டுப்பாட்டிற்கு மிகப் பெரிய காரணங்கள் ஆகும்.

இன்னொன்று, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் "டில்லிக்குப்போய் பாராளுமன்றத்தின் முன் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்" என்று அறிவித்தார்கள். முதலமைச்சர் அவர்கள், "தேவையானால் நானே இருப்பேன்" என்று அறிவித் தார்கள். அதற்குப் பின்னாலே பத்திரிகையாளர்கள் இருவரையும் வைத்துக் கேட்டபோது, முதலமைச்சர் அவர்கள் "அதுபோன்று திட்டம் எதுவும் இல்லை" என்று சொன்னார்கள். எனக்கு என்ன சந்தேகம் என்றால், பத்திரிகைகளிலே பார்க்கிறேன், செய்திகளைப் பார்க்கிறேன், நான் அறிந்தவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடவே உணவு அமைச்சர் அவர்கள் எல்லா நேரத்திலேயும் உடன் இருக்கக்கூடியவர். அவர் இல்லாமல் எந்தப் புகைப்படமும் பத்திரிகையில் வருவ தில்லை. 24 மணி நேரத்திலே தூங்குகிற நேரத்தைத் தவிர பாக்கி நேரத்தில் கூடவே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட உணவு அமைச்சர் எப்படி முதலமைச்சர் அவர்களைக் கலக்காமல் 'நான் உண்ணாவிரதம் இருப்பேன்' என்று அறிவித்தார்? ஒரு வேளை முதலமைச்சரே அறிவிக்கச் சொல்லி கடைசியிலே உணவு அமைச்சரைப் பலியிட்டு விட்டாரா? 'நீங்கள் சொல்வது போலச் சொல்லுங்கள்' என்று சொல்லி, பின்னாலே உண்ணா விரதம் இருக்க வேண்டாம் என்கிற காரணத்தினாலே மாற்றிக் கொண்டு உணவு அமைச்சர் பலி கடா ஆக்கப்பட்டாரா அல்லது இருவரும் தமிழ் நாட்டில் உள்ள உணவுப் பிரச்சினை குறித்து பேசவே இல்லையா? நிச்சயமாகப் பேசாமல் இருந்திருக்க முடியாது. இதில் இரண்டில் ஏதாவது ஒன்றுதான் இருந்திருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே நான் உங்களை உண்ணா விரதம் இருந்துதான் ஆக வேண்டுமென்று சொல்லவில்லை.

(10-45)

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது அன்றைக்கு ராவ் பீரேந்திர சிங் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தார். தமிழ்நாட்டிலே சென்ட்ரல் பூலுக்கு நீங்கள் அரிசி தரவில்லை, அதனாலே

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 நவம்பர் 1

தரமாட்டோம் என்றார் அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். உண்ணாவிரதம் இருந்தார். பிறகு பாரதப் பிரதமர் ஒத்துக்கொண்டு அரிசி கொடுத்தார்.

உண்ணாவிரதம் இருந்துதான் ஆக வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. உண்ணாவிரதம் இருப்பதற்குப் பயமாக இருந்தால், தாஜா செய்தாவது, சமாதானம் செய்தாவது, சென்று பார்த்தாவது, பிரதமரைக் கன்வின்ஸ் செய்தாவது நீங்கள் அரிசியை போதுமான அளவிற்குத் தமிழ் நாட்டிற்குப் பெற்றிருக்க வேண்டாமா? அதிலே ஏன் சுணக்கம், காலதாமதம்? மத்திய அரசு தரவில்லை என்று அரிசியை அரசியலாக்க நினைப்பது தான் அரசினுடைய அறிவிப்புகளிலேயிருந்து தெரிகிறதே தவிர அந்தப் பிரச்சினைக்கு நிவாரணம் பெற்று பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்ற சரியான அணுகுமுறை அதிலே இல்லை என்றுதான் எங்களுக்கெல்லாம் தோன்றுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு கடைசியாக, மற்ற மாநிலங்களிலேயிருந்து நீங்கள் அரிசி வாங்குவதற்கு முயற்சித்தீர்கள். அதிலே, ஆந்திரத்திலேயிருந்து சுமார் மூன்று இலட்சம் டன்கள் அரிசி வாங்குவதற்கு அனுமதி பெற்று ஏறத்தாழ இரண்டு, இரண்டே முக்கால் இலட்சம் டன் அரிசி இதுவரை வந்திருப்பதாக நான் கேள்வி படுகிறேன். அது குறித்து, சட்ட மன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் ஒரு குற்றச்சாட்டை அரசின் மேல் சொன்னார்கள். தனக்கு வந்த தகவல்களின் அடிப்படையிலே, அவர்களுக்குக் கிடைத்த தந்தியினுடைய நகலையும் நான் இங்கே மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தந்தியை ஏதோ வேதப்புத்தகம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதிலே உண்மையிருக்கிறதா இல்லையா என்பதை அவர்கள் கண்டறிய வேண்டுமென்பதற்காக அந்தத் தந்தியினுடைய இரண்டு நகல்களையும், ஆந்திராவிலேயிருந்து அரிசி வாங்குவதிலே சுமார் பத்து இலட்சம் டன் வாங்குவதிலே இருபது இலட்சம் ரூபாய் வரை தவறு நடந்திருக்கிறது, ஆகவே, மொத்தம் ஆறு கோடிக்குத் தவறு நடந்திருக்கிறது என்ற தகவலும், அந்த அரிசி தரமற்ற அரிசி, நல்ல அரிசி இல்லை,

1989 நவம்பர் 1] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அதனாலே பொதுமக்கள் வாங்கிச் சாப்பிடுகின்றபொழுது உடல் நலம் பாதிக்கப்படும் என்ற தகவலும் அந்தச் செய்தியிலே வந் திருக்கிறது. அதை வைத்து அவர் ஒரு தகவலை வெளியிட்டார்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பொறுப்புள்ள ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இந்த அவையிலே அல்ல, வெளியில் இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டை முதலமைச்சர் மீதும், உணவு அமைச்சர் மீதும் சுமத்தி, பத்திரிகையிலே அறிக்கை விடுத்தார். அப்படி அறிக்கை விடுத்த பிறகு அதற் கான மறுப்பு அறிக்கை என் சார்பிலும், உணவு அமைச்சர் சார்பிலும் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மறுப்பை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. மீண்டும், தவறு நடந்ததாகவே அவர்கள் சுட்டிக்காட்டி மறுபடியும் ஒரு அறிக்கை விடுத்தார்கள். ஆகவே, அரசின் சார்பில், அமைச்சர்கள் சார்பில், முதலமைச்சர் சார்பில் மறுப்பு விடுக்கப்பட்ட பிறகும், தான் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு சரியானது; தன்னிடத்திலே ஆதாரம் உள்ளது என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒருவேளை என்னுடைய நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அந்த ஆதாரங்களைப் பெற்று வந்திருப்பார்களேயானால் அந்த ஆதாரங்களை—தந்தியை அல்ல, வேறு ஆதாரங்களை—சொல்வார்களேயானால் அதைப் பற்றி அரசு சிந்திக்கத் தயாராக இருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நடந்தது என்பதை விளக்க வேண்டியது அரசினுடைய பொறுப்பாகும். எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தியதும், முதலமைச்சரவர்கள் மறுப்பு சொன்னதும், அதை யொட்டிய செய்திகள் வழக்குமன்றத்திற்குப் போயிருப்பதும். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உடனடியாக வழக்கு மன்றத்திற்குச் செல்லவில்லை. நாங்கள் மறுப்பு அளித்த பிறகும், அந்த மறுப்புத் தவறானது என்று சொன்ன பிறகுதான் நாங்கள் நிரபராதிகள் என்பதை நிலைநாட்டிக் கொள்வதற்கு வழக்கு மன்றம் செல்வதைத் தவிர வேறு என்ன வழியிருக்கிறது என்பதை நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்கள்தான் எனக்கு விளக்க வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் எடுத்துக் கூற விரும்பு வது, இந்த அரசினுடைய அணுகுமுறைக்காக, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு கருத்தை அல்லது குற்றச்சாட்டைச் சொல்

கிறபொழுது, கடந்த காலங்களிலேகூட இப்படிப் பல குற்றச் சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன, அதற்கு உடனடியாக அரசின் சார்பிலே சில நேரங்களிலே வழக்கு உண்டு; சில நேரங் களிலே வழக்கு இல்லாமல்கூட பல செய்திகள் வெளியிலேயும் சரி, சட்டமன்றத்திலேயும் சரி பேசப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வது ஒருவகையிலே சரி. கடந்த காலத்தில் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது இதுபோன்ற குற்றச்சாட்டுகளை நான் பொதுக்கூட்டங்களிலே பேசியிருக்கிறேன். சட்டமன்றத்திலே சொன்னேன். அப் பொழுது முதலமைச்சராக இருந்தவர், சட்டமன்றத்திலே சொன்னால் நான் வழக்குமன்றம் செல்ல முடியாது; எனவே, வெளியிலே பொதுக்கூட்டத்திலே சொல்லுங்கள் என்று சொன்னார். நான் பொதுக்கூட்டத்திலேயே சொன்னேன். சொன்ன பிறகு, என் மீது அந்தக் குற்றச்சாட்டின் மீது வழக்கு போடப்பட்டது. ஆனால் போடப்பட்ட வழக்கை அரசின் சார்பிலேயே மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர்களே திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அதுவும் நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரியும் என்றே நான் நம்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிக் கடந்த காலத்திலே நடைபெற்றதை நீங்களே கண்டித்து, பல நேரங்களிலே உங்கள் மீது வழக்கு போட்டதைக் கண்டித்து நீங்கள் சட்டமன்றத்திலேயும் வெளியிலேயும் பேசியி ருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன இந்தக் கருத்தின் மீது மட்டுமல்ல; இதுபோலத்தான் போடியிலேகூட ஒரு கருத்தைச் சொன்னார். அங்கு நடந்த வன்முறைக்கு அமைச்சர்கள் காரணம் என்ற உடனே மாண்புமிகு அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் அவர்கள் அதன் மேலே ஒரு வழக்கு போட்டார். எனவே, இப்படி எதிர்க்கட்சித் தலைவர் மீது தொடர்ந்து வழக்குகளைப் போட்டு பயமுறுத்து வதன் வாயிலாகவோ, அச்சுறுத்துவதன் வாயிலாகவோ ஒரு தவறான அணுகுமுறையை அரசு கடைப்பிடிப்பது சரிதானா என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன். அது ஒன்று.

1989 நவம்பர் 1] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இன்னொன்று செய்தி குறித்ததாகும். நீங்கள் டெண்டர் மூலமாக வாங்கியது பற்றி அரசின் சார்பிலே மறுப்பு வந்ததே தவிர, புள்ளிவிவரங்களோடு, ஆதாரங்களோடு சரியாக அந்தச் செய்திகள் வெளியே வரவில்லை. அதை இந்த மன்றத்திற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஆந்திராவிலிருந்து வாங்குகிற போது எத்தனை பார்ட்டீஸ் அதிலே கலந்து கொண்டார்கள்? டெண்டர் பற்றி எங்களுக்கு கிடைத்த தகவல் ரூ. 335-க்கு கிடைத்திருக்க வேண்டும் என்று அந்த தந்தியிலே கொடுக்கப்பட் டிருக்கிறது. வேறு வேறு விலைகளில் ரூ. 393, ரூ. 399.50 ரூ. 399 என்று மூன்று விலைகளில் வாங்கப்பட்டிருக்கிறது. எத்தனைபேர் டெண்டரில் பார்ட்டிசிபேட் பண்ணினார்கள்? நெகோசியேஷன் யார் நடத்தியது? என்ன விலைக்கு பைனலைஸ் செய்யப்பட்டது? என்ற தகவல்களையெல்லாம் அரசின் சார்பிலே நீங்கள் தர வேண்டும். அதன் மூலமாக, ஏற்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகளுக்குப் பரிகாரம் காணவேண்டுமே தவிர, வழக்கு மூலமாக நீங்கள் பரிகாரம் காணக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, இப்போது ஏற்பட்டிருக்கிற உணவுத் தட்டுப்பாடு, அரிசி விலையேற்றம், வெளியே பொதுமக்கள் அவதி ஆகியவை இந்த அரசாங்கத்திற்குச் சரியான அணுகுமுறை இல்லாத காரணத்தால், போதிய அளவு, வாங்க வேண்டிய நேரத்தில் சரியாகக் கொள்முதல் செய்யாத காரணத்தாலே, ரேஷன் கடை களில் போதுமான அளவிற்கு அரிசி கொடுக்காத காரணத்தாலே, இவ்வளவு சிரமங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றைக் களை வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது குறித்து மேலும் விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. கே. ரமணி :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உணவுப் பிரச்சினை மக்கள் மத்தியிலே மிக முக்கியமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. விலைவாசி ஏற்றம் சகிக்க முடியாத நிலைக்கு வந்திருக்கிறது. இதற்குப் பிரதான காரணம் என்று பார்த்தால், தமிழ்நாட்டில் அரிசியை சர்க்கார் கொள்முதல் செய்து, மார்க்கெட்டில் என்ன விலைக்குக் கொள் முதல் செய்கிறார்களோ அந்த விலையைப் பூராவும் ஈடுகட்டுகிற

முறையில் விலையை ஏற்றி கார்டு ஹோல்டர்ஸ்-க்கு அரிசி விநியோகம் பண்ணுவது என்பது சாத்தியம் அல்ல என்பது நாடு பூராவும் தெரியும். இந்தியாவில் ஒரு அருமையான விநியோகத் திட்டத்தை இன்றைக்கு நடைமுறைக்குக் கொண்டு வந்து, விலை வாசி ஏற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் சகலமும் செய்தி ருக்கிறோம் என்று பகிரங்கமாக அறிக்கைகள் விடுவது, கூட்டங் களில் சொல்வது போன்ற காரியங்களை நமது நாட்டினுடைய பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி அவர்கள் அனுதினமும் செய்து கொண்டிருக்கிறார். அந்த விநியோகத் திட்டம் இன்றைக்குச் சீர்குலைந்து கொண்டிருக்கிறது என்பது நம்முடைய அனுபவம். அதனுடைய விளைவுதான் இது.

நமக்குக் கிடைக்கவேண்டிய 80,000 டன் அரிசியைப் பொறுத் தவரையில் முன்பு கொடுத்தார்களா, கொடுக்கவில்லையா என்ப தல்ல பிரச்சினை. 80,000 டன் முன்பு கொடுக்கப்பட்டிருக் கிறது. அதற்கு மேலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது. இங்கே ஜனாதிபதி ஆட்சி இருக்கிறபோது எத்தனை ஆயிரம் டன் அரிசி கொடுத் தார்கள் என்ற கணக்கைப் பார்த்தாலே தெரியும். எனவே. அது கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் அப்படிக் கொடுக்கப்படாமல் இருந்து. தேவை இருக்கிறது என்று ஒரு மாநில அரசு சொல்லும்போது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டியது மத்திய அரசினுடைய கடமை. காரணம் இது ஸ்டாச்சுடரி ரேஷனிங்காக இல்லாவிட்டாலும், விலைவாசியைத் தடுத்து, பட்டினி கோட்டிற்குக் கீழேயிருக்கிற மக்களுக்குக் குறைந்தபட்சம் அவர்களின் சாப்பாட்டிற்கு உத்தர வாதம் செய்யும்படியான விநியோகத் திட்டம் வேண்டும். இதைப் பொறுப்பெடுத்து செய்ய வேண்டியது மத்திய அரசினுடைய கடமை. மாநில அரசினுடைய கஜானாவில் எத்தனை ஆயிரம் கோடி பணம் பூராவும் விலைக்கு வாங்கிக் கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களே கணக்குப் பார்க்க முடியும். எனவே, அவர்களுடைய பொறுப்பை அவர்கள் தட்டிக் கழிக்கக் கூடாது. இதுமாதிரிதான் வேறு கட்சிகளுடைய அரசாங்கம் இருக்கிற மாநிலங்களில் இதே முறையை கையாண் டால் அப்போதுதான் நாம் சொல்கிறோம். அரிசியிலே கல் கலக்கிறமாதிரி அரிசியில் அரசியல் கலக்கிறார்கள் என்று சொல் கிறோம். மேற்கு வங்கத்தில் அதுதான் நடந்திருக்கிறது.

1989 நவம்பர் 1] [திரு. கே. ரமணி]

கோளாவில் அதுதான் நடந்திருக்கிறது. உணவு அமைச்சர்கள் இதே சென்னை மாநகரத்தில் அத்தனைபேரும் கூடி கலந்து பேசி, அவர்கள் ஒரு பகிரங்க அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குப் பாராளுமன்றத்திலே பதில் சொல்லியிருக்கலாம். அல்லது சொல்வது உண்மையில்லை என்று அதை மறுத்திருக் கலாம். அந்த இரண்டும் நடக்கவில்லை. 80,000 டன் அரிசி கொடுப்பது முடக்கப்பட்டிருக்கிறது. 40,000 டன்னாக அது ஆக்கப்பட்டிருக்கிறது. இது நியாயமல்ல. தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்கிற ஓரவஞ்சனை என்றுதான் நாம் சொல்ல முடியும்.

அதுமாதிரிதான் சர்க்கரை. சர்க்கரை இல்லையென்பது உண்மையா ? சர்க்கரை பதுக்கப்பட்டிருக்கிறது. உத்திரப் பிரதேசத்திலும் மகாராஷ்டிரத்திலும் இருக்கிற சர்க்கரை முதலாளிகளுடைய அரசியல்தான் வேலை செய்கிறது. அவர்கள் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் இலாபம் சம்பாதிக்கிற வகை யில் சர்க்கரை விலையைத் தூக்கி விடுவதற்காக நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சிதான் சர்க்கரை விலையை உச்ச மட்டத்திற்குக் கொண்டு வந்துவிட்டது. இங்கே நமக்கு 33 ஆயிரம் டன் சர்க்கரை வேண்டும் என்று நமது உணவு அமைச்சர் அவர்கள் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே தேவைப் படுவது 33 ஆயிரம் டன்கள். ஆகவே சர்க்கரை மீண்டும் பதுக்கப்பட்டு, சர்க்கரையில் பெரும் முதலாளிகளுடைய அரசியல் புகுத்தப்பட்டு, அதற்கு மத்திய சர்க்கார் வக்காலத்து வாங்குவத னுடைய விளைவு, இன்றைக்குச் சர்க்கரை இல்லாமல் போய் விட்டது. ஆகவேதான் 33 ஆயிரம் டன்னாவது சர்க்கரை நமக்கு கிடைத்தாகவேண்டும்.

அதேமாதிரி பாமாயில். பாமாயில் மே மாதத்திலிருந்து சப்ளை கிடையாது. நான் பத்திரிகையில் படித்தேன். இந்த அரசு

(10-55)

இறக்குமதி செய்ய எங்களுக்காவது அனுமதி கொடுங்கள். வெளி நாட்டிலிருந்து என்று கேட்டிருப்பதாக பாமாயில் பெட்ரோல் மண்ணெண்ணெய் போன்றவற்றை நாம் இறக்குமதி பண்ண முடியாது. அது மத்திய சர்க்கார் கையிலே இருக்கிறது. அரசி யலை அதிலே கலக்கவில்லை என்றால், விட்டுவிடலாமே. உங்கள்

[திரு. கே. ரமணி] [1989 நவம்பர் 1

கையிலே பணம் இருந்தால், நீங்கள் இறக்குமதி பண்ணுங்கள் என்று சொல்லலாம். அப்படிச் சொல்லவில்லை. இறக்குமதிக்கு அனுமதி இல்லை என்று சொல்கிறார்கள். மே மாதத்தி லிருந்து கார்டு ஹோல்டர்களுக்கு பாமாயிலே இல்லை. கோவை யிலே இருக்கும்படியான மாவட்ட சப்ளை ஆபீசரைக் கேட்டேன், அவர்கள் சொன்னார்கள், 150, 200 கிலோ லிட்டர்கள்தான் கொடுக்கப்படுகிறது, அது, சத்துணவுக் கூடத்திலே தாளிப்பதற் குச் சரியாகப் போய்விட்டது. அதைக் கொடுத்தாகவேண்டும் என்றும், இல்லை என்றால், அந்தக் குழந்தைகளுக்கு சத்துணவு இல்லை என்றும் சொன்னார்கள். அப்படி என்றால் பாமாயிலே இல்லை. அறவே நிறுத்திவிட்டார்கள். தீபாவளிக்கு ஸ்பெச லாக ஒரு கிலோ. அது நிரந்தரமாகக் கொடுக்கக்கூடிய சப்ளை அல்ல. ஸ்பெசல். அது அத்தோடு தீர்ந்துவிட்டது. ஆனால் பாண்டிச்சேரியிலே 4 கிலோவைக் கொடுக்கிறார்கள். அங்கே 4 கிலோ கொடுக்க முடிகிறது. ஆனால் இங்கே 1 கிலோ. அப்படி யானால், தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராக அவ்வளவு விரோதமான நடவடிக்கையை மத்திய சர்க்கார் ஏன் எடுக்கிறது என்பதுதான் நமக்குப் புரியவில்லை. இதை நீங்கள் அரசியலாக ஆக்கக் கூடாது என்று நாம் கேட்கிறோம். இது உணவுப் பிரச்சினை ஆகவே பாமாயில் விஷயம் அப்படிப் போய் இருக்கிறது. இது இரண்டும் மிகவும் முக்கியமானது. சர்க்கரை விஷயமும் அப்படித்தான். அதனால்தான் கள்ள மார்க்கெட்டிலே 13 ரூபாய்க்கு 1 கிலோ சர்க்கரை விற்கப்பட்டிருக்கிறது, கோவை மாநகரத்திலே. இந்த அரசாங்கம் தலையிட்டு, முதலாளிகளிடத் திலே சொல்லி, ஆயிரம் டன் சர்க்கரையை வாங்கி, கொஞ்சம் விலையைக் குறைத்து விற்றார்கள். அந்த விலை கூட, மத்திய சர்க்கார் கணக்குப் பிரகாரம், அதைக்கூட இங்கே குறைத்துப் போட்டார்கள் என்று குறை கூறலாம். அவர்கள் என்ன விலை சொல்கிறார்கள் என்றால், 9½ யிலேயிருந்து 10½ ரூபாய் வரைக்கும் விற்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்போது தான் லாபம் அந்த முதலாளிகள் நினைத்தது கிடைக்கும் என்று அர்த்தம். இங்கே அதைவிடக் கொஞ்சம் கம்மியாக நீங்கள் விற்றீர்கள். அப்படியானால் அவர்களுக்கு இதுவும் கூட பிடிக் காது. ஆகவே இப்படிப்பட்ட, தமிழக மக்களுக்கு எதிரான வஞ்சனையான செயல் வேறு அரசியல் நோக்கத்தோடு செய் திருக்கவேண்டுமே தவிர, இல்லாவிட்டால், இந்த நிலை வராது.

1989 நவம்பர் 1] [திரு. கே. ரமணி]

(குறுக்கீடு). தலைவர் அவர்களே, நான் தலையிடவில்லை. மத்திய சர்க்கார் சப்ளை செய்யக் கடமைப்பட்டவர்கள். It is not statutory rationing (குறுக்கீடு). அந்த வார்த்தை அன்பார்லிமெண்டரி அல்ல. (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன்: ஓர வஞ்சனை என்பது "அன்பார்லிமென்டரி" வார்த்தை அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஒன்றும் unparliamentary அல்ல. அது நல்ல சொல்தான். (குறுக்கீடு). இலக்கியத்திலே ஓரவஞ்சனை என்பது நல்ல சொல்தான்.

திரு. கே. ரமணி: இன்-டைரக்ட் மீனிங்கிலே வேண்டாம். பகிரங்கமாக, ஓப்பனாகப் பேசுகிறேன், நான். அதுமாதிரி நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடு). ஆகவே, இது ஓரவஞ்சனை தான். இல்லாவிட்டால், நேரடியான வஞ்சனைதான். (குறுக்கீடு). இதை இரண்டு விதத்திலே சொல்லலாம். அவர்கள் மறுப்புச் சொல்லிவிட்டார்கள். ஆகவே, தலைவர் அவர்களே, நமக்கு 80 ஆயிரம் டன் அரிசி குறைந்தபட்சம், 33 ஆயிரம் டன் சர்க்கரை குறைந்தபட்சம், பாமாயில் 13,500 டன் குறைந்த பட்சம் இவற்றைக் கொடுக்கவேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. அதற்கு ஆகிற செலவை, இந்திய நாட்டிலுள்ள மக்கள் கொடுத்திருக்கிற வரிப் பணத்திலிருந்து, அந்த கஜானாவிலிருந்து செலவு செய்யவேண்டும். இப்போது 40 ஆயிரம் டன் என்பது, 50 ஆயிரம் டன் என்று ஆகியிருக்கிறது. அதற்கு நமது மாண்புமிகு உறுப்பினர், இங்கேயிருக்கிற நமது முன்னாள் சபாநாயகர் திரு. பாண்டியன் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டிலே கேஸ் போட்டு, அந்த கேஸ் விசாரணையின்போது, இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சொன்னபோது, கவனிக்கிறோம் என்று சொல்லித்தான், 10 ஆயிரம் டன் அதிகமாக வந்திருக்கிறது என்பது எனக்குக் கிடைத்துள்ள செய்தி. இது உண்மையா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும். அப்படித்தான் 50 ஆயிரம் டன் வந்திருக்கிறது.

மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திருநாவுக்கரசு அவர்கள் உணவு அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் பல விஷயங்களை, முன்னாலே இருந்

துதை எல்லாம் கரெக்டாகச் சொன்னார்கள். பிரச்சினை என்ன வென்றால், மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதா, இல்லையா? முதலமைச்சரே போய் உண்ணாவிரதம் இருக்கவேண்டிய நிர்பந்தம் வருகிறது என்று சொன்னால் இது சின்ன விஷயமா? தமிழகத்திலே இருக்கக்கூடிய 5 கோடி மக்களுடைய இதயங்கள் துடித்த பிறகுதானே அந்த உண்ணாவிரதத்திற்குப் போகவேண்டி வந்தது. ஆகவே இப்போது இங்கேயிருக்கிற முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதத்திற்குப் போகவேண்டும் என்றார்கள். அவர்கள் போகக்கூடாது என்பதல்ல. ஏன் என்றால், அமைச்சரவையே போய் உண்ணாவிரதம் இருந்திருக்கிறதே, அங்கே பாராளுமன்றத்தின்முன் பல மாநிலங்களிலேயிருந்து. மத்திய சர்க்காருடைய பார்லிமெண்டு கேட்டுக்கு முன்னாலே உண்ணா விரதம் இருந்திருக்கிறது மந்திரிசபைகள். அப்படி எல்லாம் நடக்கிறது. ஆகவே உண்ணாவிரதம் இருப்பதில் மந்திரிகள்

(11-00)

மட்டும் தான் இருக்கிறார்களா? இல்லை. ஜனங்களும் இருக் கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அரிசி போதவில்லை, மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. பாமாயில் கிடைக்கவில்லை. சர்க்கரை விலை ஏற்றம் ஆகியிருக் கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று மக்கள் கிளம்பி இருக் கிறார்கள். அதனால் தான் மத்திய அரசுக்கு நாம் எடுத்துச் சொல்ல வேண்டும் இந்த நிலை சரியில்லை. இது மாற்றப்பட வேண்டும். அரசியலை அரசியலாக சந்தித்துப் போராடுங்கள். எத்தனை சக்தியோடு வேண்டுமானாலும் போராடுங்கள், ஆனால் மக்களுடைய வயிற்றில் அடிக்கக்கூடிய முறையிலே ஓரவஞ்சனை யாக காரியங்களைச் செய்யக் கூடாது. அதுதான் அரசியல் ஆக்குவது. நாம் அதை அரசியல் ஆக்கவில்லை. நாம் அந்த மடிவிற்குள் போகவில்லை. அதனால் தான் இவை நமக்கு கிடைக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். 40 ஆயிரம் டன் கொடுத்தால் 4,80,000 டன் வருடத்துக்கு. ஆனால் 50 ஆயிரம் டன், 6 லட்சம் டன் எந்தக் காலத்திலே இங்கே காப்பாட்டது வருஷத்திற்கு. இப்போது இவ்வரசு வந்தபிறகு அப்படி சப்ளை கிடைத்திருக்கிறதா? கிடைக்கவில்லை.

1989 நவம்பர் 1] [திரு. கே. ரமணி]

மதிப்பிற்குரிய திருநாவுக்கரசு அவர்கள் இதைக் கவனித்தால் தெரியும். இங்கே நமக்கு 6 லட்சம் டன் கிடைக்கவில்லை. இப்போதுதான், இந்தப் பிரச்சினை இவ்வளவு தீவிரமாக கிளம்பி யதற்குப் பிறகுதான் 50 ஆயிரம் டன் கொடுப்பதாக சொல்லப் பட்டு இருக்கிறது. சொல்லியது நடைமுறைக்கு வந்ததா? கோடவுனிலே வந்து சேர்ந்தாச்சா? அரிசி நமக்கு சப்ளை ஆச்சா? என்று எனக்குத் தெரியாது. ஆனால் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவு தான். ஆகவே இந்த முறை சரியில்லை. அதை மாற்ற வேண்டும். அதை மாற்றவில்லை என்று சொன்னால், இந்தப் பொருள்கள், இந்த மிகமிக அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதற்காகவே லட்சோபலட்சம் மக்கள் போராடவேண்டி இருக்கிறது. நாங்கள் இதை எதிர்த்து ஒரு லட்சம் தொண்டர்கள் மறியல் செய்து, நான் உள்பட நடுரோட்டில் போய் உட்கார்ந்து மக்களுக்கு இந்த விஷயத்தை தெரிவிப்பதற்காக அவர்களுடைய இதயத் துடிப்பை, நாங்கள் அவர்களோடு சேர்ந்திருக்கின்றவர்கள் என்ற முறையிலே நாங்கள் உட்கார்ந்து சத்தியாக்கிரகம் பண்ண வேண்டி வந்தது. 'நண்டு கொழுத்தால் வளையில் இருக்காது' என்பது பழமொழி. நாங்கள் கொழுத்து தெருவுக்கு போக வில்லை. மக்களுக்கு சரிவர உணவு கிடைக்கவேண்டும் என்ப தற்காக நாங்கள் போனோம். அப்படிப்பட்ட போராட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் நடத்த வேண்டியிருக்கிறோம். நாடு முழுவதும் நடத்த வேண்டியிருக்கிறது. ஆந்திராவிலே அதிகப் படி உற்பத்தி. அவர்களிடத்திலே 15 லட்சம் டன்னுக்கு மேலே மிச்சம் இருக்கிற அந்த அரிசி மற்ற பல மாகாணங்களுக்கு போகிறது. அப்படிப்பட்ட மதிப்பிற்குரிய என்.டி.ஆர்.—ராமா ராவ்—அவர்களுடைய அரசுக்கு என்ன அனுபவம்? அங்கேயும் அவர்கள் நியாய விலைக் கடைகளில் கொடுப்பதற்கு, 200 கோடி 300 கோடி செலவு செய்து விலையைக் குறைத்து கொடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே மத்திய அரசாங்கத்தினுடைய தாக்குதல் அங்கேயும் இருக்கிறது. அப்படியானால் மேற்கு வங்காளத்திலே, ஆந்திரா விலே கேரளாவிலே தமிழ்நாட்டிலே இப்படி இது நடக்கிறது என்று சொன்னால் இது அப்பட்டமான பகல் போன்ற உண்மை. இந்த உண்மையை மத்திய அரசு உணர வேண்டும். அதற்காக ஒரே ஒரு வேண்டுகோளை நான் அரசாங்கத்தின் முன் வைக்க விரும்புகிறேன். நாளையதினம் இந்த சபை கலைகிறது.

ஆகவே நாம் அத்தனை பேரும் சேர்ந்து, மதிப்பிற்குரிய திரு. திருநாவுக்கரசு அவர்களுடைய கட்சி உள்பட, திரு. குமரி அனந்தன் உள்பட நாம் அத்தனை பேரும் சேர்ந்து, நான் சொன்ன அந்தக் கணக்கிலே நமக்கு அரிசியும், பாமாயிலும் சர்க்கரையும் கிடைக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கத்திடம் கேட்டு நாம் ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நாளையே போட்டு, நாம் அனுப்பி கேட்போம் என்று சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, நாளையே சபை கலைகிறது என்று மதிப்பிற்குரிய ரமணி அவர்கள் பேசிய போது சொன்னார்களே, ஏன் கலைகிறது. உண்மையிலேயே கலைகிறதா ? அப்படியானால் டிஸ்ஸல்யூஷனா ? என்ன அது ? ஏன் சொல்லுகிறார்கள் ? கலைகிறது என்றால் என்ன அர்த்தம் ? சபாநாயகர் அவர்களே அதற்கு விளக்கம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நாளை பொறுத்து பார்ப்போம். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கலைகிறதா இல்லையா என்ற ரகசியம் எல்லாம் நண்பர் குமரி அனந்தன் அவர்களுக்குத்தான் தெரியும். ஆனால் கலையாது என்கிற உறுதி எல்லோருக்கும் உண்டு. பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே—அலுவல் ஆய்வுக் குழுவில் அன்று நாம் விவாதித்து எடுத்த முடிவின்படி நாளை இந்தக் கூட்டத் தொடருக்குக் கடைசி நாள். தற்காலிகமாக.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலைப்பது, கலைவது என்பது பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். மத்திய அரசாங்கம் அரிசி கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முன்னாள் சபாநாயகர் அவர்கள் வாதிட்டார்கள் என்று சொன்னார். அதே நேரத்திலே நீதிபதி அவர்கள் கேட்கிறார்கள். ஏன் அப்படி என்றால் மாநில அரசே இந்த வழக்கை தொடுக்கவில்லை என்று கேட்டபோது, அதே முன்னாள் சபாநாயகர் அந்த நீதிமன்றத்திலே சொன்னார், 'மாநில அரசு பயந்துக் கொண்டு கேட்கவில்லை' என்று அவர் சொன்னார். இந்த மாநில அரசு

1989 நவம்பர் 1] [திரு. குமரி அனந்தன்]

பயப்படுகிறது, என்பதை உச்ச நீதிமன்றத்திலே ரெக்கார்டு செய்து நம் அனைவருக்கும் பெருமை தேடித்தந்திருக்கிறார்களா என்பதை சிந்திக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார்களா என்று சிந்திக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். அஞ்சிக் கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம் என்று நீதிமன்றத்திலேயே அவர் சொல்லியிருக்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். 15 லட்சம் டன் அரிசி மீதம் இருக்கிறது ஆந்திராவிலே என்றார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் கவனிக்க வேண்டும். ஏதாவது ஒன்றிரண்டு செய்தியைச் சொல்லலாமே தவிர, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நீங்களே பேசக் கூடாது.

(11-05)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய பிரச்சனையில் நண்பர் பாண்டியன் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் என்ன சொன்னார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவருக்கு சொல்லிக் கொள்கின்றேன். எவ்வளவு தகராறுகள், அரசியல் மாச்சரியங்கள், கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் கூட நிர்வாகத்திலே மத்திய அரசோடு மாநில அரசு மோதிக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை நான் பலமுறை சொல்லி வந்திருக்கிறேன். அஞ்சுவதாக அவர் சொன்னார் என்பதை வைத்துக்கொண்டு அழுத்தம் திருத்தமாக திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே அஞ்சுகிறதா, அஞ்சுகிறதா என்று கேட்டார்கள். அவருடைய பாணியிலே சொல்வதானால் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பது இல்லையே. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, 'உச்சி மீது வான் இடிந்து வீழுகின்றபோதிலும்' என்பதை உச்ச நீதிமன்றத்திலே போய்ச் சொல்லியிருக்கலாமே என்பது தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்பதையும் கொஞ்சம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கு குறித்து அங்கே தொடரும்போது அவர்கள் ஏன் அரசாங்கம் வரவில்லை என்ற கேள்வியை எதற்காக கேட்டார்கள்

என்றால் அரசாங்கம் அங்கே வந்திருக்குமேயானால் 3 இலட்சம் டன் கிடைத்திருக்கும். அதுதான், வேறொன்றும் இல்லை. கொஞ்சம் சக்தி வேண்டும். அரசாங்கம் வந்திருந்தால் 3,20,000 டன் அரியர்ஸ் கிடைத்திருக்கும். நான் சொன்ன வார்த்தை ஆர்ட்டிகிள் 356 என்று தான் சொன்னேன். இது கேஷுவல் தான். இதற்கெல்லாம் ரெக்கார்டு கிடையாது. இன்னும் அங்கே பேசியதை எல்லாம் சொன்னோம் என்றால் எல்லோருக்கும் பாதகம் உண்டு. அதாவது இது கேஷுவல் ரெஃப்பரன்ஸ், இட் வில் நாட் பி ரெக்கார்டட். இன்னொன்று. மத்திய அரசாங்கம் அங்கே தாக்கல் செய்த கவுண்டர் பைலில்—நான் படிக்கிறேன். அதாவது தமிழ்நாட்டில் அரிசி இல்லை என்று அவர்களுக்குத் தெரியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது ரேஷன் கடைகளில் அரிசி இல்லை என்பது அவர்களுடைய கவனத்திற்கே வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னொன்று கோளாவில் ஓணத்திற்கும், வங்காளத்தில் பூஜைக்கும் 25,000 டன் அவர்கள் வழங்கியதை கௌண்டரில் சொல்லி இருக்கிறார்கள். இதையும் சொன்னேன். எங்களுக்கு தீபாவளி வருகிறது என்பதைச் சொன்னேன். இதெல்லாம் ரெக்கார்டில் கிடையாது. இன்னொன்று, இது 18—9—1988-ம் தேதி அன்று அனுமதி பெறப்பெற்று அங்கே தாக்கல் செய்யப்பட்டது. இதை இருசாரார், இங்கே இருக்கின்ற ஆளுகின்ற கட்சியும் போராடுகின்றது. மத்தியிலே இருக்கக்கூடிய ஆளுகின்ற கட்சியும் போராடுகிறது. என்னைப் பொறுத்தவரையில் எனக்கே தெரியவில்லை என்ற காரணத்தினால் தான் நான் அங்கே போனேன். அங்கே போன பிறகு தான் இந்த விவகாரத்தை எல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். வேறு ஒன்றும் அல்ல. ஆகவே சொன்ன வார்த்தை பெரிய வார்த்தை அல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் திருநாவுக்கரசு அவர்களும், மாண்புமிகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் ரமணி அவர்களும் கொண்டுவந்த இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அரசின் சார்பில் சில கருத்துக்களை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் சொல்கின்ற நேரத்தில்—தமிழகத்தில்

1989 நவம்பர் 1] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அத்தியாவசியப் பொருள்கள் நியாயவிலைக் கடையில் விநியோக முறையில் ஏற்பட்ட குளறுபடியால் அரிசி மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம் சம்பந்தமாக இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்து இருக்கிறார்கள். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அவர் கருத்துக்களை வழங்குகின்ற நேரத்தில்—அண்ணா தி.மு.க. ஆட்சியிலே இருந்தபொழுது 20 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது என்றும் இப்பொழுது அது வழங்கப்பட வில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். 10 ஆண்டுக் காலம் . . .

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே ரொம்ப கான்சன்ட்ரேட் பண்ண வேண்டாம். நான் முதலிலே சொன்னேன். அதிகபட்சம் 20 கிலோ, குறைந்த பட்சம் 12 கிலோ என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அவருடைய வாக்குப்படியே கூட அதிகபட்சம் 20 கிலோ, குறைந்த பட்சம் 12 கிலோ கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நான் இந்த மன்றத்திற்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணா தி.மு.க. ஆட்சியிலே இருந்த எந்த காலத்திலேயும் 20 கிலோ அரிசி தமிழகத்திலே குடும்ப கார்டுகளுக்கு வழங்கப்பட வில்லை என்பதை உணவு அமைச்சர் என்ற பொறுப்புணர்ச்சி யோடு இந்த அவையிலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். இன்னும் சொல்லப்போனால் 1983 ஆம் ஆண்டு தமிழ கத்திலே வறட்சி இருந்தபொழுது அன்று இருந்த அரசு 6 கிலோ அரிசிதான் கொடுத்திருக்கிறது என்பதற்கான விவரங்களும் என் னிடத்திலே இருக்கின்றன. ஆகவே எந்த அரசாக இருந்தாலும் வறட்சி, இயற்கை, மழை பொய்த்ததன் காரணமாக நாட்டிலே பல்வேறு சூழ்நிலைகள் ஏற்படுகின்ற நேரத்தில்—ஒவ்வொரு அர சாங்கமும்—உணவுப் பிரச்சினையிலே முடிந்த வரையிலே கவனம்

(11-10)

செலுத்துகிறது. எனவே இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சம் 12 கிலோ அரிசி கொடுப் பதிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது. அதைப்போலவே கொள்முதலிலே, ஏதோ இந்த அரசாங்கம் கொள்முதல் செய்யவே தவறிவிட்டது என்றும், அதிலும் பட்ஜெட் நேரத்தின்போது நம் முடைய முதலமைச்சர் சொன்ன கருத்தைச் சொல்லி.

நீங்கள் 7 இலட்சம் டன் கொள்முதல் ஆகும் என்று சொன்னீர்களே, ஏன் செய்யவில்லை என்று சொன்னார்கள். ஏழு இலட்சம் டன் கொள்முதல் செய்வதாகச் சொன்னோம். ஆனால் 6 இலட்சத்து 80 ஆயிரம் டன்—6.80 இலட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படியிருந்தும் ஏன் பொது விநியோகத்திற்கு அரிசி கிடைக்கவில்லை என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். நமக்கு ஒரு மாதத்திற்குத் தேவைப்படுகிற அரிசி, சத்துணவிற்கும் சேர்ந்து ஒரு இலட்சத்து 65 ஆயிரம் டன், மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு சொன்னதைப்போல ஒரு இலட்சம் அல்ல. ஒரு இலட்சத்து 65 ஆயிரம் டன் அரிசி தேவை.

அதைப்போலவே, இப்போது நாம் அந்த அரிசி கொடுக்க வேண்டும் என்று முயற்சி எடுக்கின்ற நேரத்தில், நாம் கொள்முதல் செய்த 6.8 இலட்சம் டன் அரிசியும், மாதம் ஒன்றிற்கு 40 ஆயிரம் டன், மத்திய அரசாங்கம் வழங்கிக் கொண்டிருக்கின்ற அந்த அரிசியும் சேர்த்துப் பார்த்தால், 10 மாதத்தில் அது நான்கு இலட்சம் டன் அரிசியும் ஆக. 10.8 இலட்சம் டன் அரிசிதான் நம்மிடத்திலே கையிருப்பு இருக்க முடியும். ஆனால், அந்த அரிசி போதாத காரணத்தினாலே வெளி மார்க்கெட்டிலே வாங்குவதற்கு மத்திய அரசாங்கத்திடம் அனுமதி பெற்று 3 இலட்சம் டன் அரிசி வாங்க முயற்சித்து, இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட டன் அரிசியை ஆந்திராவிலிருந்து நாம் இப்போது வாங்கியிருக்கின்றோம்.

அதைப்போலவே, இங்கே மத்திய அரசாங்கம் கொடுத்துக் கொண்டிருந்த 80,000 டன் அரிசியை 40 ஆயிரம் டன்னாகக் குறைத்து விட்டார்கள், அதை ஏன் நீங்கள் இந்தியப் பிரதமரைச் சந்தித்து முதலமைச்சரோ, உணவு அமைச்சரோ போய்க் கேட்கக்கூடாது என்று எல்லாம் சொன்னார்கள். எங்களுக்குக் கௌரவப் பிரச்சினை கிடையாது. முதலமைச்சரோ அல்லது இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்களோ, ஏதோ பிரதமரிடத்திலே போய்க் கேட்பது அவமானம் என்றோ அல்லது மரியாதைக் குறைவு என்றோ அல்லது நாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்றோ நினைக்கக்கூடியவர்கள் இங்கே யாரும் இல்லை.

1989 நவம்பர் 1] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

முதலமைச்சரவர்கள் முதலமைச்சர் பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடனேயே டெல்லிக்குச் சென்றார்கள். அப்படிச் சென்று நேராகவே 31—1—1989 அன்று அவர்கள் ஒரு கடிதம் கொடுத்தார்கள். அதைப்போலவே 11—3—1989 அன்று பிரதமரைச் சந்தித்து அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். கடிதம் கொடுத்தார்கள். பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். நானும் டெல்லிக்குச் சென்றேன். 6—2—1989 இல் ஒரு கடிதம் எழுதினேன். 5—7—1989 இல் நடைபெற்ற உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே உணவு அமைச்சரை நேரிலே சந்தித்துக் கேட்டேன். பல முறை டெல்லிக்குச் சென்று உணவு அமைச்சரைக் கேட்டேன். பார்ப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய உணவுத் துறை இலாக்காவும் பல கடிதங்கள் எழுதியது. ஆனால் எந்தவிதமான பயனும் இல்லை. எனவேதான் நாங்கள் கேட்டும், கேட்டும் பயனில்லாத ஒரு சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு முன்னாள் சபாநாயகர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்ததற்குப் பிறகு இந்த மாதம் 10,000 டன், உச்ச நீதிமன்றம் சொன்னதற்குப் பிறகு மத்திய அரசாங்கம் அரிசியை வழங்கியிருக்கிறது. எனவே, நான் இந்த நேரத்திலே இந்த அரசு சார்பிலே திரு. பி. எச். பாண்டியன் அவர்களுக்கு, ஒரு உரிமைக்காகப் போராடியதற்ககாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லெவியிலே என்ன குழப்பம் என்று கேட்டார்கள். ஏன் இடையிலே நிறுத்திவிட்டீர்கள், லெவி ரத்துச் செய்துவிட்டீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் வந்து புதிதாக எதையுமே ரத்துச் செய்யவில்லை. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, ஆளுநருடைய ஆட்சிக் காலத்திலே என்ன நடைமுறை இருந்ததோ அதே நடைமுறைதான் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது. எப்போதும் சம்பா அறுவடை முடிந்ததற்குப் பிறகு ஆகஸ்ட் மாதம் 1 ஆம் தேதியிலிருந்தோ அல்லது 15 ஆம் தேதியிலிருந்தோ தற்காலிகமாக அந்த லெவி கொள்முதல் நிறுத்தி வைக்கப்படுவது வழக்கம். அதன்படி 15 நாள் நிறுத்திவைத்தோம். மறுபடியும் அறுவடை, குறுவை ஆரம்பமானவுடனே 1—9—1989-லேயிருந்து லெவி கொள்முதல் அமல்படுத்தப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, 50 சதவிகிதமாக இருந்ததை ஏன் 30 சதவிகிதமாக நீங்கள் குறைத்தீர்கள் என்று கேட்டார்கள். நெல் கொள்முதலைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு, அதற்கு

முந்தைய ஆண்டு, படிப்படியாக என்ன இலக்கு வைத்திருக் கிறோமோ அந்த இலக்கை எட்ட முடியவில்லை. வியாபாரிகள் பலமுறை இந்த அரசாங்கத்திடம் அணுகி அதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். 50 சதவிகிதமாக இருக்கின்ற காரணத்தினாலே நாங்கள் லெவி கொடுக்க முடிய வில்லை. எனவே, அதை 30 சதவிகிதமாகக் குறையுங்கள்; குறைந்தபட்சம் 'டிரேடர்ஸ் லெவி' 2.5 இலட்சம் டன் நாங்களே கொள்முதல் செய்து தருகிறோம் என்று சொன்னதன் பேரிலே தான் ஆண்டுக்கு 50,000 டன், 60,000 டன் நெல் கொள்முதல் ஆவதற்குப் பதிலாக 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் கொள்முதல் அவர்களாகவே கொடுப்பதாகச் சொல்கிறார்களே என்பதை— ஏறக்குறைய 150-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்துகொண்ட அந்த மாநாட்டில், நம்முடைய தலைமைச் செயலாளரும் மற்ற அதிகாரிகளும் கலந்துகொண்ட அந்த மாநாட்டில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த முடிவினை எடுத்தார்கள். அதன் மூலம் அதிகமான நெல் கொள்முதல் ஆவதற்கான வாய்ப்பு இருக் கின்ற காரணத்தால் தான் அதை நாம் செய்து இருக்கிறோம்.

(11-15)

அதைப்போலத் தான் மத்திய அமைச்சர் இங்கே வந்து இருந் தார்; ஏதோ சொன்னார் என்று சொன்னார். மத்திய அமைச்சர் எங்களைத் தான் முதலில் சந்தித்தார். உள்ளபடியே பாராட்டி னார். இந்த அரசு பப்ளிக் டிஸ்டிரிபுஷன் சிஸ்டத்தை இவ்வளவு சிறப்பாக செய்கிறதே என்று எங்களை வைத்துக்கொண்டு அல்ல 20 அதிகாரிகளை வைத்துக்கொண்டு பாராட்டினார்கள். பிறகு என்ன நினைத்தாரோ வெளியே போனதற்குப் பிறகு பத்திரிகை நிருபர்களிடத்திலே கேரளாவுக்கு ஏதோ அரிசி கடத்தி விட்ட தாக சொல்லியிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் சொன்னார் என்று எனக்கு தெரியாது. ஆனால் கேரளாவுக்கு இந்த அரசுக்கு தெரிந்து நாங்கள் யாரையும் நெல் கடத்துவதற்கு அனுமதிக்க வில்லை என்பதோடு அப்படி கடத்த முயற்சி செய்தவர்களின் லாரி பறிமுதல் செய்யப்பட்டு வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்ணாவிரதம் பற்றி சொன்னார்கள். முதலமைச்சரோடு இருக்கிறவர், படம் எல்லாம் வருகிறது, அவருக்குத் தெரியாமலா உண்ணாவிரதம் என்று சொன்னார்கள்... நான் ஏதோ அமைச்ச

ராகிவிட்ட காரணத்தால் முதலமைச்சரோடு இருக்கவில்லை; அவருக்குக் கஷ்டம் வந்த நேரத்திலும் அவரோடு இருந்திருக்கிறேன். அவர் மகிழ்ச்சியோடு இருந்த நேரத்திலும் அவரோடு இருந்திருக்கிறேன்; எனவே அவருக்குத் தெரியாமல் ஒன்றும் செய்துவிடவில்லை. ஆகஸ்டு மாதம் 17 ஆம் தேதி காங்கிரஸ் அல்லாத உணவு அமைச்சர்கள் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் மேற்கு வங்கத்திலிருந்து வந்த உணவு அமைச்சர், கேரள உணவு அமைச்சர் இவர்கள் எல்லாம் கூடி மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக டெல்லியில் போய் உண்ணாவிரதம் இருக்கலாம் என்ற ஒரு முடிவு எடுத்தார்கள். அன்றையதினம் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னையில் இல்லை; அவர் நெல்லையில் சுற்றுப் பயணத்தில் இருந்தார்கள். அதனால்தான் நான்கூட அவரோடு அன்றையதினம் போக முடியவில்லை. எனவே அப்படி அவர் சென்றிருந்த நேரத்தில் முடிவு எடுக்கப்பட்டது. அவர் வந்ததற்குப் பிறகு, இந்தக் கருத்து சொன்னதற்குப் பிறகு அப்படித் தேவைப்பட்டால் நானே உண்ணாவிரதம் இருப்பேன் என்று சொன்னார்களே தவிர அவருக்குத் தெரியக்கூடாது என்பது அல்ல. நாடகம் நடத்த வேண்டிய அவசியமும் எங்களுக்கு ஏற்படவில்லை.

அதைப்போல எதிர்க்கட்சித் தலைவர் ஒரு குற்றச் சாட்டு சொன்னதைப் பற்றியும், அதற்காக வழக்கு போட்டதைப் பற்றியும் எல்லாம் இங்கே சொன்னார்கள். நான் அதைப்பற்றி இங்கே விவரமாக சொல்ல விரும்பவில்லை. நாங்கள் எல்லாம் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் சொன்னதற்காக கிட்டத்தட்ட 15 முறை வழக்கு அல்ல, கைது செய்யப்பட்டிருக்கிறோம், அப்படி நாங்கள் குற்றச்சாட்டுகள் சொல்லுகிறோம் என்பதற்காகவே 292 கேப்பிட்டல் ஏ என்ற ஒரு சட்டத்தையே, கிரிமினல் சட்டத்தையே திருத்தி 15 நாளுக்கு ஒரு முறை கைது செய்து மறுபடியும் வெளியே வந்த உடனே ஒரு அமைச்சரை வைத்து ஒரு புகார் மனு கொடுக்கச் சொல்லி, மறுபடியும் கைது செய்து இப்படி 15 வழக்குகள் போடப்பட்டு சிறைச்சாலையில் இருந்து இருக்கிறோம். குற்றச்சாட்டுகள் சொல்லுகின்ற நேரத்தில் ஆதாரம் இருந்து சொல்வார்களானால் அவர்கள் நீதிமன்றத்தில் சந்திப்பதற்கு எந்தவிதமான அச்சமும் தேவையில்லை. அப்படி

நிரூபிக்கப்பட்டால் நாங்கள் எந்த தண்டனைக்கும் தயாராக இருக்கிறோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தெளிவுக்காகவும், பொது மக்களுடைய தெளிவுக்காகவும் இந்த 3 லட்சம் டன்கள் வாங்கியதில் அந்த விவகாரத்தைப் பற்றி யார், யார் என்ன டெண்டர் போட்டு இருக்கிறார்கள்; என்ன விலைக்கு பைனலைஸ் செய்தார்கள் என்ற ஒரு அறிக்கையை சபையில் வைத்தால் நல்லது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மட்டும் அல்ல, எந்த அவையிலும் வைக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. ஒன்றை சொல்லுகிறேன், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தவர், ஏதோ ஆந்திராவில் இருந்து அரிசி வாங்கி விட்ட காரணத்தால் ஊழல், கோடிக்கணக்கில் லஞ்சம் என்று சொல்லுவது எளிது. அவர் உணவு அமைச்சராக இருந்த காரணத்தால் அவருக்கு தெரிந்து இருக்க வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என்பது ஒரு தனி நிறுவனம். அதாவது எந்த மாநிலத்திலிருந்து அரிசி வாங்கினாலும் அமைச்சருக்கு அந்தக் கோப்பு வராது; முதலமைச்சருக்கும் கோப்பு வராது. அதற்கு என்று ஒரு கமிட்டி அ.தி.மு.க. ஆட்சியில் எந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டு இருந்ததோ அதே கமிட்டிதான் இன்னமும் இருக்கிறது. நாங்கள் அந்தக் கமிட்டியைக் கூட மாற்றவில்லை. நம்முடைய தலைமைச் செயலாளர் தான் அதற்குத் தலைவர்; நிதித்துறை செயலாளர், உணவுத் துறை செயலாளர், நுகர்பொருள் வாணிபக்கழகத் தலைவர், சிவில் சப்ளைசினுடைய ஆணையர் ஆகிய அத்தனை பேரும் சேர்ந்தது ஒரு குழு. எனவே அந்தக் குழு தான் டெண்டரை வரவழைத்து பரிசீலிக்கிறது; முடிவு எடுக்கிறது. அந்த டெண்டர் கமிட்டி எடுக்கின்ற முடிவிலே அரசாங்கம் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த நேரத்திலும் சரி, ஆளுநர் ஆட்சி நேரத்திலும் சரி, எங்களுடைய ஆட்சி காலத்தில் எப்போதும் தலையிடாது என்பதை மட்டும் நான் உறுதியாக இந்த நேரத்தில் தெரிவிக்க முடியும். எனவே அப்படி நடக்காத ஒன்றைக் கற்பனையாக யாரோ தந்தி கொடுத்தார்கள் என்று பேசிய காரணத்தால் தான்

1989 நவம்பர் 1] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

வழக்குத் தொடர்ந்து இருக்கிறோமே தவிர எதிர்க்கட்சித் தலைவரைப் பழி வாங்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. அது மட்டும் அல்ல, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உரு வாக்கப்பட்ட எந்த சூழ்நிலையையும் இன்னும் நாங்கள் மாற்ற வில்லை. 21,134 நியாயவிலைக் கடைகள் அப்படியே இருந்து கொண்டு இருக்கின்றன. அந்தக் கடைகள் மூலம்தான் இந்த உணவுப் பொருட்களை வழங்குகிறோம். ஒரு கோடியே 29 லட்சம் குடும்பக் கார்டுகள் கொடுத்தீர்கள்; அந்தக் கார்டு களுக்குத் தான் இந்த உணவுப் பொருட்களையும் கொடுக் கிறோம். ஆனால் இன்றுள்ள சூழ்நிலையிலே, அரிசி

(11—20)

கிடைக்காத சூழ்நிலையிலேயும் 3 இலட்சம் டன் அரிசியை ஒரு பக்கத்திலே வாங்கி 12 கிலோ அரிசி கொடுக்கின்ற நேரத்தில் மத்திய அரசாங்கம் திடீரென்று நாங்கள் ஆட்சிக்கு வருவதற்குள், 1989 ஜனவரி 27 ஆம் தேதி நாங்கள் பதவி ஏற்கிறோம் என்றால், இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் 25 ஆம் தேதி டாக்டர் கலைஞர் அவர்களை முதல்வராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அன்றைய தினம் மத்திய அரசாங்கம் அரிசி விலையை உயர்த்தவேண்டுமென்று இந்தியா பூராவும் ஒரு உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவில் எந்த அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று சொன்னதென்றால், சாதாரண ரகம் இப்போது 1.75 காசுக்கு கொடுத்துக் கொண் டிருக்கிறோமே அதை 2.44 காசு என்றும்; சன்ன ரகம் இப்போது 2.24 காசுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோமே அதை 3.04 காசு என்றும்; மிகச் சன்ன ரகம் 2.75 காசுக்கு கொடுக்கிறோமே அதை 3.25 காசு என்று உயர்த்தவேண்டுமென்று அன்று மத்திய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது கோட்டைக்கு வந்து உட் கார்ந்த உடனேயே. நிருபர்களெல்லாம் முதல்வர் அவர்களைச் சந்தித்து கேட்டார்கள், மத்திய அரசாங்கம் விலையை உயர்த்தி யிருக்கிறதே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று. முதல்வர் அவர்கள், கொஞ்சமும், எதைப்பற்றியும் யோசிக்காமல் உடனே சொன்னார், மத்திய அரசாங்கம் விலையை உயர்த்தி யிருந்தாலும் மாநில அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த விலையை அமல் படுத்தாது; பழைய விலைக்கேதான் அரிசியைத் தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுக்கும் என்று. அப்படிச் சொன்னதை இன்று வரையிலும் அமல்படுத்தக் கூடிய

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1989 நவம்பர் 1

ஒரே ஒரு ஆட்சி இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற ஆட்சிதான் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டொன்றுக்கு 280 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது என்றாலும், பர வாயில்லை, நாட்டிலே இருக்கக்கூடிய ஏழையெளியவர்களுக்காக இந்த விலை உயர்வை அமல்படுத்த வேண்டாம் என்று இந்த அரசு முடிவு எடுத்தது. அதைப்போலவே, 5 கிலோ அரிசி இலவசமாக ஆண்டுக்கு 5 முறை கொடுக்கின்ற காரணத்தினாலே மீதி 7 கிலோவை கொடுப்பதில்லை என்றும் சொன்னார்கள். நான் பணி வன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை எந்த இடத்திலேயும் இல்லை. எங்கோ ஓரிரு இடங்களில் குறைகள் இருந்திருக்கலாம். ஆனல் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே அதிகபட்சம் 12 கிலோ அரிசி கொடுக் கிறோம். 5 கிலோ போக, மிச்சம் 7 கிலோ அரிசியை நாட்டு மக்கள் வாங்கியிருக்கிறார்கள். நானே பல ரேஷன் கடைகளுக்குச் சென்று சோதனை போட்டு பார்த்திருக்கிறேன். கடந்த மாதம் கூட கும்பகோணத்திற்கு போய் பார்த்தபோது 5 கிலோ அரிசியும் வாங்கியிருக்கிறார்கள். 7 கிலோ அரிசியையும் காசு கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். எனவே அந்தக் குற்றச்சாட்டுக்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இந்த மன்றத்திற்கு சில விவரங்களைச் சொல்வது நல்லது என்று கருதுகிறேன். இன்றையதினம் அரிசியை நம்மாலே அப்படி அதிக விலை கொடுத்துகூட ஆந்திராவிலேயிருந்து வாங்கி விட முடிகிறது. ஆனால் சர்க்கரையை நம்மாலே அப்படி வாங்க முடியாது. நமக்குத் தேவைப்படுகின்ற சர்க்கரையோ 31 ஆயிரம் டன். ஆனால் நமக்குக் கொடுக்கின்ற சர்க்கரையினுடைய அளவோ 22,547 டன். ஏறக்குறைய 70 சதவீதம் சர்க்கரைதான் மத்திய அரசாங்கத்தினாலே கொடுக்கப்படுகிறது. ஒரு தனி நபருக்கு 425 கிராம்தான் கொடுக்க முடியும் என்று மத்திய அரசாங்கம் சொல்லுகிறது. ஆனால் இதற்கு முன்பிருந்த அரசு தமிழகத்திலே ஒரு நபருக்கு 500 கிராம் கொடுத்துக்கொண்டு வந்தது. எனவே நாமும் அதை குறைக்காமல் 500 கிராம் கொடுக்கிறோம். ஆனால் டெல்லியிலே இருக்கக்கூடியவர்களுக்கு, ஒரு நபருக்கு 800 கிராம் கொடுக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் வலியுறுத்தினோம்.

1989 நவம்பர் 1] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

டெல்லியிலே இருக்கக்கூடிய புண்ணியவான்களுக்கு 800 கிராம் கொடுக்கிறீர்களே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய நாங்கள் என்ன பாவம் செய்தோம் ; எங்களுக்கும் அந்த 800 கிராம் கொடுக்கக் கூடாதா என்று கேட்டபோது, சர்க்கரை இல்லை என்று சொன்னார்கள். அதற்குப்பிறகு, எங்களுக்கு 425 கிராம் என்ற அடிப்படையிலே தேவைப்படுகின்ற அந்தச் சர்க்கரையையாவது கொடுங்கள் என்று கேட்டால் அதையும் முழுமையாகக் கொடுக்க வில்லை. அதனால்தான் ஒரு பக்கத்திலே சர்க்கரையை முறையாக விநியோகிக்க முடியவில்லை. இதை நம்முடைய முதல்வர் அவர்கள் பரிசீலித்து 30 சதவீதம் மக்களுக்கு ஒவ்வொரு மாதமும் கடைசியில் சர்க்கரை கிடைக்கவில்லை என்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தால் அதிகபட்சம் 2 கிலோ சர்க்கரையை ஒரு குடும்பத்திற்கு வழங்கலாம் என்றும் அதன்மூலம் எல்லா குடும்பத்திற்கும் சர்க்கரையே இல்லை என்ற நிலையைப் போக்க லாம் என்றும் முடிவு எடுத்து அதை நாங்கள் அமல் படுத்தியிருக் கிறோம். ஆனால் திடீரென்று அக்டோபர் மாதத்திலே சர்க்கரை யினுடைய விலை, மார்க்கெட்டிலே அதிகமாக உயர ஆரம்பித்தது. 8 ரூபாய், 9 ரூபாய், 10 ரூபாய் என்று உயர்ந்துகொண்டே போயிற்று. இந்தியாவிலேயே பல மாநிலங்களிலே 15 ரூபாய், 16 ரூபாய் என்றுகூட சர்க்கரையினுடைய விலை உயர்ந்தது. அந்த நேரத்திலே இந்தியாவிலேயே எந்த மாநிலமும் சிந்திக்காத சூழ் நிலையில் இந்த நாட்டினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் உடனடியாக எங்களையெல்லாம் அழைத்து இந்தச் சர்க்கரை விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆலை அதிபர்களை அழைத்துப் பேசுங்கள், எந்தக் காரணத்தைக் கொண்டும் 7½ ரூபாய்க்கு மேல் விற்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். உடனே ஆலை அதிபர் களையும், கூட்டுறவு சர்க்கரை ஆலை அதிபர்களையும் அழைத்துப் பேசி, அப்படிப் பேசுகின்ற நேரத்திலே, உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது ; நீங்கள் மிகக் குறைந்த விலையிலே ஏன் எங்களை சர்க்கரை கேட்கிறீர்கள் என்று அவர்கள் கேட்டு நிலையில் ஒரு பக்கத்திலே நிதானமாகப் பேசி, இன்னொரு பக்கத் திலே கொஞ்சம் அதிகாரத்தை எடுத்துச் சொல்லி அதற்குப் பிறகு மொத்தமாக 10 ஆயிரம் டன் சர்க்கரை அளவிற்கு ஒரு மாதத்திற்கு 7½ ரூபாய் அளவிலே கூட்டுறவு அங்காடிகள் மூல மாக, சிந்தாமணி போன்ற நுகர்பொருள் வாணிபக்கழகத்தி னுடைய அங்காடிகள் மூலமாக விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்

(11-25)

பட்டு இன்றுமுதல் சென்னை போன்ற பெரிய நகரங்களிலே நம்முடைய மொபைல் வேன்களில்—அதாவது 20 வேன்களை வழங்கி, சென்னை நகரில் தெருவுக்குத் தெரு ஏழரை ரூபாய் சர்க்கரை இன்றையதினம் விற்கப்பட்டு வருகிறது. நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன், இந்தியாவிலேயே இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்து வருகிற சர்க்கார் இல்லை என்பது மட்டுமல்ல, இந்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்தவுடன் ஆந்திர மாநில உணவு அமைச்சர், கேரள மாநில உணவு அமைச்சர், நிர்மல் கோஷ் என்கிற மேற்கு வங்க மாநில உணவு அமைச்சர், அரியானா மாநில முதலமைச்சர் இவர்கள் எல்லாம் சேர்ந்து, எப்படி உங்களால் ஏழரை ரூபாய்க்குச் சர்க்கரை கொடுக்க முடிகிறது என்று கேட்டார்கள். கூட்டுறவு அங்காடிகள் மூலம் கொடுக்கப் படுகிறது என்ற விளக்கத்தைச் சொன்னேன். அதுமட்டுமல்ல, காங்கிரஸ் உறுப்பினர்கள் பாராட்டுவார்கள்—அவர்களுடைய கட்சி ஆள்கிற பாண்டிச்சேரி மாநில முதலமைச்சர் மதிப்பிற்குரிய ஃபரூக் அவர்களை நேரில் சந்தித்தபோது, எப்படி உங்களால் ஏழரை ரூபாய்க்குச் சர்க்கரை கொடுக்க முடிகிறது என்று கேட்ட போது, கூட்டுறவு அங்காடிகள் மூலம் சர்க்கரை கொடுக்கிறோம் என்று சொன்னவுடன், அவர் தமிழ்நாட்டைப் பின்பற்றி—அவர் ஒருவர்தான் பாண்டிச்சேரி மாநிலத்தில் ஏழரை ரூபாய்க்கு இந்த மாதம் சர்க்கரையை வழங்குகிறார்.

அது மட்டுமல்ல, நாங்கள் நடவடிக்கை எடுத்தவுடனேயே இங்கே வந்த மத்திய உணவு அமைச்சர் மாண்புமிகு சுக்ராம் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களை சந்தித்தார், செய்தியாளர்களைச் சந்தித்தார், அதிகாரிகளைச் சந்தித்தார், மனமாற பாராட்டினார். இப்படி எல்லா மாநில முதல் அமைச்சர்களும், இந்த நடவடிக்கையை எடுத்திருந்தால், என்னுடைய பளு எவ்வளவோ குறைந்திருக்கும், அப்படி அவர்கள் எடுக்காத காரணத்தால் இன்றையதினம் இந்தியா முழுவதும் சர்க்கரை விலை அதிகமாக விற்க வேண்டிய நிலை இருக்கிறது என்று சொல்லிவிட்டு, ஆனால் மத்திய அரசு நிர்ணயித்திருக்கின்ற ரூ. 8.50லிருந்து ரூ. 9.00-க்கு மேல் விற்கக் கூடாது என்று ஒரு உத்தரவும் பிறப்பித்தார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இப்போது தமிழ்நாட்டில் ஐந்தேகால் ரூபாய்க்கு ஒரு சர்க்கரை, ரேஷன் கடைகள் மூலம்; கூட்டுறவு அங்காடிகளில் ரூ. 7.50-க்கு ஒரு சர்க்கரை; இன்னொரு பக்கத்தில் மத்திய அரசு நாணயத்த ரூ. 8.50-லிருந்து ரூ. 9.00 வரை விற்கக்கூடிய சர்க்கரை, இந்த மூன்று முறைகளில் சர்க்கரை வினியோகம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

அதைப்போலவே, மண்ணெண்ணெய். நமக்குத் தேவைப் படுவது 88 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மண்ணெண்ணெயை நாம் என்ன செய்ய முடியும்? மாநில சர்க்கார் உற்பத்தி செய்ய முடியுமா? ஆனால் நம்முடைய தேவையோ 88 ஆயிரம் கிலோ லிட்டர். ஆனால் மத்திய அரசு நமக்குக் கொடுப்பதோ 66 ஆயிரம் கிலோ லிட்டர்தான். 75 சதவீதம் தான் நம்முடைய தேவையில் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் டெல்லிக்குச் சென்றபோதும் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சரைச் சந்தித்துக் கூறியிருக்கிறேன். அமைச்சர்களை நேரில் பார்த்து மனு கொடுத்தேன். என்னைப் பார்த்து காங்கிரஸ் அல்லாத உணவு அமைச்சர்கள் எல்லாம் மனு கொடுத்தார்கள். ஆனால் அதற்கு இதுவரை எந்தவிதமான பதிலும் வரவில்லை.

அதைப்போலவே, சமையல் எண்ணெய். இந்த சமையல் எண்ணெயைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்வது நல்லது என்பதற்காகச் சொல்கிறேன். நமக்கு மாதத் தேவை ஒரு குடும்ப அட்டைதாரருக்கு ஒரு லிட்டர் பாமாயில் தருவதாக இருந்தாலும்கூட 13 ஆயிரம் டன் பாமாயில் தேவை. தேர்தல் நடந்த ஜனவரி மாதத்தில் 10 ஆயிரம் டன் பாமாயில் தமிழகத்திற்கு ஒதுக்கினார்கள். தி.மு.க., ஆட்சிக்கு வந்தது. உடனே பிப்ரவரி மாதம் 3,500 டன்னாக அதைக் குறைத்தார்கள். பிறகு ஏப்ரல், மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் பாமாயில் கொடுக்கவில்லை. அதற்குப் பிறகு செப்டம்பர் மாதத்திலே 1,250 டன் பாமாயில் ஒதுக்கினார்கள். மறுபடியும் இந்த மாதம் 1,250 டன் ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய தேவையில் 10 சதவீதம்கூட பாமாயில் நமக்குக் கிடைக்கவில்லை.

உடனே இதற்கு என்ன செய்யலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளோடு கலந்து பேசி, என்.டி.டி.பி. என்ற குஜராத் மாநில நேஷனல் டயரி டெவலப்மெண்ட் போர்டு என்ற அமைப்பிலிருந்து, கேட்கலாம் என்று கருதி; குஜராத் மாநிலத்தில் அதிகமாக வேர்க்கடலை விளைந்திருக்கிற காரணத்தால், கடலை எண்ணெயை அங்கிருந்து வாங்கலாமா பாருங்கள் என்று சொன்னார்கள். தலைமைச் செயலாளரும் அதிகாரிகளும் அவர்களிடம் பேசினார்கள். எங்களால் தமிழ்நாட்டிற்குக் கொடுக்க முடியாது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். வேறு வழியில்லாத காரணத்தால், தமிழ்நாட்டில் இருக்கின்ற எண்ணெய் வியாபாரிகளை—சுதந்திரம் பெற்ற பிறகு முதன் முதலாக ஒரு அரசாங்கம் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன், எல்லா எண்ணெய் வியாபாரிகளையும்—கோட்டைக்கு அழைத்துப் பேசி தமிழ்நாட்டுக்கு உங்களால் முடிந்த உதவியைச் செய்யுங்கள் என்று சொன்னதற்குப் பிறகு அந்த வியாபாரிகள் மிகப் பெருந்தன்மையோடு 1 கிலோ 31 ரூபாய் என்று விற்றுக் கொண்டிருந்ததை நாங்கள் குறைத்துக் காட்டுகிறோம் என்று சொல்லி, கர்நாடக மாநிலத்திற்குப் போய், கொள்முதல் செய்து இப்போது 25 ரூபாய்க்கு தமிழகம் எங்கும் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

(11-30)

இந்தச் சூழ்நிலையிலேதான் மத்திய அரசினிடத்திலே நாங்கள், உங்களால் இறக்குமதி செய்ய முடியாவிட்டால் போகிறது. இறக்குமதி செய்வதற்கு எங்களுக்காவது அனுமதியைக் கொடுங்கள் என்று சொன்னோம். அப்போது மத்திய அமைச்சர் அவர்கள் இதிலே 'ஃபாரின் எக்சேஞ்ச் இன்வால்வ்' ஆகி இருக்கின்ற காரணத்தால் அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இந்தச் செய்திகள் வெளிவந்தவுடனே மலேசியாவில் இருக்கக்கூடிய ஒரு எண்ணெய் வியாபாரி தமிழ்நாட்டின்மீது பற்று உள்ளவராகவும், தமிழ்நாட்டிலே இருக்கிற ஆட்சியின்மீது பற்று உள்ளவராகவும் இருந்த காரணத்தால் அவர் இங்கே வந்து தமிழ்நாட்டுக்கு மட்டும் வேண்டுமானால் நாங்கள் 'ரூபீ பேமெண்ட்'-லே பாமாயிலைச் சப்ளை செய்கிறோம், அதுகுறித்து நீங்கள் மத்திய அரசுக்கு எழுதி அனுமதி பெற்றுத் தாருங்கள் என்று சொன்னார்கள். அந்தக் கடிதம்

1989 நவம்பர் 1] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

குறித்து உடனடியாக டெலக்ஸ் செய்தி கொடுத்து மத்திய அரசி னடததிடுலெ, 'ஃபாரின் எக்சேஞ்ச் இன்வாலவ்' ஆகாமலே 'ரூப் பேமென்டிலேயே' எண்ணெயை கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள், அதற்காவது அனுமதி தாருங்கள் என்று நாங்கள் கேட்டோம். அதற்கும் இதுவரையில் எந்தவிதமான பதிலும் வரவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்த அரசு இயங்கிக் கொண்டிருக்கிறதே தவிர நடவடிக்கைகள் எடுக் காமல் இல்லை.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் இன்னும் ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஒரு மூன்று நான்கு திங்கள்களுக்கு முன்னால் கொஞ்சம் அரிசி விலை உயர்ந் திருந்தது என்பதை நான் மறுக்கவில்லை. இயற்கை பொய்த் ததால், வறட்சி காரணமாக அரிசியின் விலை உயர்ந்து இருந்தது. ஆனால் குறுவை சாகுபடி ஆனதற்குப் பிறகு தமிழ்நாட்டில் மற்ற மாநிலங்களைவிட, காங்கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலங் களைவிட, கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற கேரளாவைவிட விலை குறைந்திருக்கிறது என்பதற்கு நான் ஒரு புள்ளிவிவரத் தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரண ரகம் அதாவது ஹம்சா என்ற வகை 10—10—1988-ல் 447 ரூபாய் ஒரு குவிண் டாலுக்கு என்று விற்றது இங்கே கடந்த ஆண்டு. இப்போது 9—10—1989 முதல் 429 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் தஞ்சைத் தரணியில் 380 ரூபாய் அளவுக்கு அங்கே அரிசியினுடைய விலை குறைந்திருக்கிறது. ஆனால் கர்நாடகாவில் 670 ரூபாய் கடந்த ஆண்டு விற்றதற்கு மாறாக இப்போது ஒரு குவிண்டால் 675 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறது. கேரளாவில் கடந்த ஆண்டு 465 ரூபாய்க்கு விற்றதற்கு மாறாக இப்போது 520 ரூபாய்க்கு விற்றுக்கொண்டி ருக்கிறது. மகாராஷ்ராவில் 480 ரூபாய் என்று கடந்த ஆண்டு விற்றதற்கு மாறாக 560 ரூபாய்க்கு இப்போது விற்றுக்கொண்டி ருக்கிறது. ஆக விலைவாசிகளை எடுத்துக்கொண்டால்கூட இன்றையதினம் தமிழ்நாட்டில் அரிசியின் விலையும் கட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை இங்கே நான் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த விலைவாசி ஏற்றம் தி.மு.க. ஆட்சி வந்த 8 மாதங்களிலே ஏற்பட்டிருப்பது போன்று ஒரு மாயையை தமிழ்நாட்டில் சிலர் உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

அவர்களுக்கு நான் சொல்கிறேன், மத்திய அரசு கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரத்திலிருந்து நான் சொல்கிறேன். 1985-ல் இருந்து 1989 வரை எந்த அளவுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது என்று கேட்டால் 40 சதவீதம் உயர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் அல்ல, அகில இந்திய அளவில் உயர்ந்திருக்கிறது. கோதுமையின் விலை 28 சதவீதம் உயர்ந்து இருக்கிறது. வனஸ்பதியின் விலை 70 சதவீதம் உயர்ந்திருக்கிறது. சர்க்கரை 51 சதவீதம் உயர்ந்திருக்கிறது. காய்கறி 97 சதவீதம் உயர்ந்திருக்கிறது. அச்சடிக்கும் காகிதங்களின் விலை 87 சதவீதம் உயர்ந்திருக்கிறது. துணிமணிகள் 35 சதவீதம் உயர்ந்திருக்கிறது. பருப்பு வகைகள் 46 சதவீதம் உயர்ந்திருக்கிறது. பாலின் விலை 52 சதவீதம் உயர்ந்திருக்கிறது. அகில இந்திய அளவிலே இந்த உயர்வுகள் இருக்கிறதே தவிர தமிழ்நாட்டில் இந்த விலைவாசி உயர்ந்திருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை.

இன்னும் சொல்கிறேன். ஏன் இப்படி விலைவாசி உயர்கிறது? ஏதோ மாநில அரசினுடைய கொள்கையினால் அல்ல என்பதை பத்திரிகையிலே இப்போதுகூட 14 ரூபாய்க்கு பம்பாயில் சர்க்கரை விற்பதாக செய்தி வந்திருக்கிறது. இந்து பத்திரிகையில் கடந்த மாதம் 23 ஆம் தேதி ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது.

"......... The Planners and the Central Government and, of course the consumers thought there would be a pronounced declaration in the inflation rate as a result of the smart recovery that agricultural production had made in 1988-89, followed by a further rise in output in 1989-90. Such calculations have gone away because of wrongly conceived policies and a sharp increase in the consumption of various products at home and abroad".

இன்னும் சொல்ல வேண்டுமென்றால் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவருகிறேன். அதே இந்துப் பத்திரிகை கடந்த மாதம் 6-ம் தேதி ஒரு தலையங்கம் எழுதி இருக்கிறது. அரிசி, சர்க்கரை, எண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம் என்று எழுதுகிற அந்தத் தலையங்கத்தில் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். சமையல் எண்ணெயினுடைய விலை நம்ப முடியாத அளவுக்கு அதிகமாகி இருக்கிறது; நம்ப முடியாது என்றால் உற்பத்தி உச்ச அளவை எட்டியிருப்பதாக நுகர்வோர் காதில்

1989 நவம்பர் 1] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அடிக்கடி கூறப்பட்டு வந்தது; அண்மையில் சர்க்கரை விலை பூதாகரமாக உயர்ந்து தேயிலை விலையும் உயர்ந்து வருகிறது.

(11-35)

சமையல் எண்ணெயைப் பொறுத்தவரையில் எப்போதுமே பற்றாக்குறை இருந்துவரும் பொருள் அது. எண்ணெய் வித்துக்கள் விளைச்சல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதல்லவா. அந்த எதிர்பார்ப்பு கைகூட, அதன் பயனாய் விலைவாசி குறைகிறதா என்பதைக் கண்டறிவதற்குக் கூட காத்திராமலும் எண்ணெய் இறக்குமதிகள் குறைக்கப்பட்டது தான் இதற்குக் காரணம். நிலைமையை மதிப்பிட்டு அறிவதற்கு வேண்டிய விவேகமும் இல்லாமல் போனது காரணமா அல்லது அளவுக்கு மீறி அவசரப்பட்டது காரணமா அல்லது மார்க்கெட் நிலவரத்தை ஆட்டிப் படைக்க வேண்டுமென்ற ஆர்வம் காரணமா? இதற்கு முன்னர் எப்போதுமே கண்டிராத அளவுக்கு இப்போது எண்ணெய் விலை உச்ச அளவுக்கு ஏறியிருக்கிறது என்றால் அரசியல் வர்த்தக அமைப்புகள் எண்ணெய் வித்துக்களையும், எண்ணெயையும் கொள்முதல் செய்யும் விஷயத்தில் தவறான அணுகுமுறைகளை வகுத்துக்கொண்டு செயல்பட்டிருப்பது தான், அதற்கு பெரிதும் துணை புரிந்திருக்கிறது என்பது தான் உண்மையாகும். சன்ன ரக உணவுத் தானியங்கள், சமையல் எண்ணெய்கள், சர்க்கரை ஆகியவற்றை அதிகம் ஒதுக்க வேண்டுமென்று மாநில அரசுகள்—இங்கே தான் முக்கியம்—கூக்குரல் இடத் தொடங்கிய பிறகு மத்திய உணவு மற்றும் சிவில் சப்ளைஸ் இலாகா விழித்துக் கொண்டது. அதுவரை பரிகார நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. நாடாளுமன்ற தேர்தல் வருவதற்கு ஒருசில வாரங்களுக்கு முன்னால் இந்த அத்தியாவசிய பொருள்களின் விலையை குறைக்கும் பணியை மத்திய அரசு எப்படி செய்து முடிக்கப் போகிறது என்று தெரியவில்லை. சர்க்கரையையும், சமையல் எண்ணெயையும் அவசர அவசரமாக இறக்குமதி செய்வதற்கான முயற்சிகளில் அது இப்போதுதான் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இவை எல்லாம் அரை குறை மனதுடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகும். எதிர்பார்க்கப்படுவதில் பாதி பலன் கூட கிடைக்காது. விவசாய உற்பத்தியும், தொழில் உற்பத்தியும் அதிகரித்து வரும் ஒரு அசாதாரண நிலைமையைக் காண நேரிடுகிறது. நாட்டுக்குள் பண்டங்கள் உபயோகிப்பது அதிகரித்துவிட்டதா? ஏற்றுமதிகள் ஏதோ

பிரமாதமாக அதிகரித்திருப்பதாக செல்லாப்படுகிறதே, அதனால் சில பொருள்கள் விஷயத்தில் பற்றாக்குறையும் விலைவாசி அமைப்பில் கோணல்களும் ஏற்பட்டிருக்கிறதா உணவு தானிய உற்பத்தி, ரொக்க மகசூல்கள், உற்பத்தி ஆகியவை பற்றிய புள்ளி விவரங்கள் நம்ப தகுந்தவைதானா? மத்திய அரசு திட்டவட்டமாக பதில் அளித்து ஆக வேண்டிய முக்கியமான சில கேள்விகள் தான் இவை. அப்போதுதான் நாட்டின் பொருளாதாரம் எந்த திசையில் செலுத்தப்படுகிறது என்பதை பொதுமக்கள் தெரிந்து கொள்ள முடியும். ஆக, இப்படிப்பட்ட ஒரு தலையங்கத்தை 'இந்து' பத்திரிகை எழுதுகிறது என்று சொன்னால் இந்த விலை ஏற்றத்திற்குக் காரணம் யார் என்று நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்னுடைய விளக்கத்திற்கு பிறகு அவையை ஒத்தி வைத்து விவாதிக்க தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு ஒன்றை மட்டும் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த பல ஆண்டுகளில் தமிழ்நாட்டிலே விலைவாசி ஏறுகின்ற நேரத்தில் எல்லாம் அதைக் கண்டித்து பலமுறை சிறை சென்ற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், அமைச்சர்களில் சிலரும் சிறை சென்றவர்களாக இருக்கின்ற காரணத்தாலும் இந்த ஆட்சியில் நிச்சயமாக விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம், விலைவாசி அதிகரிக்க அனுமதிக்க மாட்டோம் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் விரிவான விளக்கத்திற்கு பின் அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

3. தகவல் கோரல்.

(அ) மோகனூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் பிரச்சினை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சர்க்கரையைப் பற்றியும் அதனுடைய விலையைப் பற்றியும் இங்கே மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நான் மோகனூர் சர்க்கரை ஆலையைப் பற்றி சர்க்காருக்கு நினைவுப்படுத்துகின்ற வகையில் வேண்டுகோளாக

பிரமாதமாக அதிகரித்திருப்பதாக செல்லாப்படுகிறதே, அதனால் சில பொருள்கள் விஷயத்தில் பற்றாக்குறையும் விலைவாசி அமைப்பில் கோணல்களும் ஏற்பட்டிருக்கிறதா உணவு தானிய உற்பத்தி, ரொக்க மகசூல்கள், உற்பத்தி ஆகியவை பற்றிய புள்ளி விவரங்கள் நம்ப தகுந்தவைதானா? மத்திய அரசு திட்டவட்டமாக பதில் அளித்து ஆக வேண்டிய முக்கியமான சில கேள்விகள் தான் இவை. அப்போதுதான் நாட்டின் பொருளாதாரம் எந்த திசையில் செலுத்தப்படுகிறது என்பதை பொதுமக்கள் தெரிந்து கொள்ள முடியும். ஆக, இப்படிப்பட்ட ஒரு தலையங்கத்தை 'இந்து' பத்திரிகை எழுதுகிறது என்று சொன்னால் இந்த விலை ஏற்றத்திற்குக் காரணம் யார் என்று நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்னுடைய விளக்கத்திற்கு பிறகு அவையை ஒத்தி வைத்து விவாதிக்க தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு ஒன்றை மட்டும் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த பல ஆண்டுகளில் தமிழ்நாட்டிலே விலைவாசி ஏறுகின்ற நேரத்தில் எல்லாம் அதைக் கண்டித்து பலமுறை சிறை சென்ற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், அமைச்சர்களில் சிலரும் சிறை சென்றவர்களாக இருக்கின்ற காரணத்தாலும் இந்த ஆட்சியில் நிச்சயமாக விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம், விலைவாசி அதிகரிக்க அனுமதிக்க மாட்டோம் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் விரிவான விளக்கத்திற்கு பின் அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

3. தகவல் கோரல்.

(அ) மோகனூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் பிரச்சினை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சர்க்கரையைப் பற்றியும் அதனுடைய விலையைப் பற்றியும் இங்கே மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நான் மோகனூர் சர்க்கரை ஆலையைப் பற்றி சர்க்காருக்கு நினைவுப்படுத்துகின்ற வகையில் வேண்டுகோளாக

1989 நவம்பர் 1] [திரு. குமரி அனந்தன்]

சில வார்த்தைகளைச் சொல்கிறேன். மோகனூர் சர்க்கரை ஆலை கூட்டுறவு அமைப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆலைகளுள் மிகச் சிறந்த ஆலை ஆகும். சென்ற மாதம் மட்டும் 2½ கோடியிலிருந்து 3 கோடி ரூபாய் வரை லாபம் ஈட்டியது. 18 ஆயிரம் விவசாயிகள் அதிலே தங்களுடைய கரும்பை அரைவைக்குக் கொடுக்கிறார்கள். 1,500 தொழிலாளர்கள் அதிலே பணி புரிந்து தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அமைதியான சூழ்நிலை இருக்கிறபொழுது அதனுடைய வெற்றிக்குக் காரணமாக இருப்பது 6 மாதம் செய்ய வேண்டிய அரைவையை அங்குள்ள தொழிலாளர்கள் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றுகிற காரணத்தால் 5 மாதத்திலேயே முடித்துவிடுகிறார்கள். ஏனென்றால் கரும்பை வெட்டிய பிறகு அவை காய்ந்து போகாமல் இருக்க எவ்வளவு சீக்கிரமாக அரைவை செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அரைவை செய்வது நல்லது அதனால்தான் 2,500 டன்தான் ஒரு நாளைக்கு அரைக்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கும்போது அந்தத் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் டன் வீதம் அரைவை செய்கிற காரணத்தால் 6 மாதத்தில் நடைபெற வேண்டிய வேலை 5 மாதத்திலேயே முடிந்துவிடுகிறது. 6-வது மாதத்தில் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்ற காரணத்தினால் விவசாயிகள் எல்லோருமாக சேர்ந்து தாங்கள் உற்பத்தி செய்கின்ற கரும்பிலே இருந்து, டன் ஒன்றுக்கு 2 ரூபாய், 3 ரூபாய் என்கிற அளவுக்கு அவர்களாகவே மனமுவந்து தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ் ஆக கொடுக்கிறார்கள். அப்படி ஊக்க போனசாகக் கொடுத்துக்கொண்டிருப்பதை வாங்கிக்

(11-40)

கொடுத்த சில நல்ல சமுதாயத் தொண்டர்களைப் பாராட்டி ஒரு சுண்டு அறிக்கையை வெளியிட்ட காரணத்தாலே, அங்கே இருக்கிற தனி அலுவலர் கோபமுற்று, "அப்படியா; அப்படி என்றால் இனிமேல் ஊக்க போனஸ் கொடுப்பதற்கு நான் ஒத்துழைக்க மாட்டேன்" என்ற அறிவிப்பை எழுதி வைத்த நாளிலிருந்து அங்கே பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன.

எனவே 5 மாதம் வேலை, 6-வது மாதம் ஊக்க போனசால் வாழ்க்கை என்ற நிலையை மாற்றி, நான் ஊக்க போனஸ் பெற ஒத்துழைப்பு தர மாட்டேன் என்று தனி அலுவலர் சொன்னதோடு மட்டுமல்லாமல், அந்த ஊக்க போனஸ் கிடைக்காமல் இருப்

[திரு. குமரி அனந்தன்] [1989 நவம்பர் 1

பதற்கு என்னென்ன வழிகளோ அதை எல்லாம் அந்தத் தனி அதிகாரி செய்து கொண்டிருப்பதாகவும், அங்கே தொழிலாளர்களுக்கும் தனி அலுவலருக்கும் கருத்து வேறுபாடு இருப்பதன் காரணத்தால் மோதல் முற்றுகிறதென்று சொல்லுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ஒரு தொழிலாளி, சைக்கிளில் போனவர், தனி அலுவலரைக் கண்டு கீழே இறங்கவில்லை என்பதற்காக அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார். இவைகளை எல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், ஏதாவது பிரச்சினைகள் வந்து, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் போய்ப் பேசும்போது, அவர்களோடு பேச அல்லது அவர்களைச் சந்திக்க அனுமதி மறுக்கிறார் அந்தத் தனி அலுவலர். அதனாலே இப்போது என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அவர் ஒரு போர்டு எழுதி வைத்திருக்கிறார் வெளியே. "வேலை கிடைப்பது அரிது, கிடைத்த வேலையைக் காப்பாற்றிக் கொள்வது அதைவிட அரிது, மாட்டிக் கொண்டால் கஷ்டம்தான்" என்று எழுதி வைத்திருக்கின்ற அளவுக்கு அவரும், "அப்படியா, நாங்கள் சொல்கிறோம் வேலை நிறுத்தம் செய்வோம், வேறு வழியில்லை" என்று இவர்களும் சொல்லுகின்ற நிலை இருக்கிறது. கடந்த 19 ஆம் தேதி கூடி, வேலை நிறுத்தம் செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தி.மு.க., அகில இந்திய அண்ணா தி.மு.க., ஐ.என்.டி.யு.சி., சி.ஐ.டி.யு., சீசனல் தொழிலாளர் சங்கம், கரும்பு உதவியாளர் சங்கம் ஆக இத்தனை தொழிற் சங்கங்களும் சேர்ந்து, 19 ஆம் தேதி கூடி, இந்த மாதம் 4 ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் என்று அறிவித்திருக்கிறார்கள். இன்றிலிருந்து அங்கே கரும்பு அரைவை தொடங்குகிறது. இன்றிலிருந்து கரும்பு அரைவை தொடங்கி, அதை வெட்டிக் கொண்டு போய் அங்கே போட, நான்காம் நாளிலே அவர்கள் வேலைநிறுத்தம் செய்வார்களானால், வெட்டிப் போட்டிருக்கிற கரும்பெல்லாம் வீணாகப் போய்விடும் என்பது ஒன்று. வெட்டாமல் உள்ள கரும்பெல்லாம் சாய்ந்துபோகும் என்பது ஒன்று. ஆதலாலே வெட்டிப்போடப்பட்ட கரும்புகள் வீணாகிப் போகாமலும், வெட்டப்படாத கரும்புகள் முற்றி, காய்ந்து போகாமலும் இருப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்வதற்காகத்தான் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன் விவாதிக்க வேண்டுமென்று. தாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானமாக இல்லாமல், கருத்துக்களைச் சொல்லிவிடலாம் என்று சொல்லிய

1989 நவம்பர் 1] [திரு. குமரி அனந்தன்]

காரணத்தாலே, இந்தக் கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் நேற்றைய தினம் வேண்டுகோள் விடுத்தேன். எனவே நமது மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் அல்லது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், கூட்டுப் பொறுப்பு இருக்கிற காரணத்தால், யாரோ ஒருவர்—இதற்கு பதில் சொல்ல வேண்டுமென்று நான் விரும்பவில்லை—அந்த வேலை நிறுத்தத்தைத் தவிர்த்து, எல்லோரும் சுமுகமான சூழ்நிலையிலே தங்களுடைய பணிகளைச் செய்து, விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு மக்களுக்குக் கிடைக்கக்கூடிய சர்க்கரை அத்தனையும் கிடைப்பதற்கு உரிய பதிலைத் தர வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர் சர்க்கரை ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்களின் தொழிற் சங்கங்கள் அனைத்தும் சில குறைபாடுகளை மையமாக வைத்து, 1 ஆம் தேதி அளவில் இந்தக் குறைபாடுகள் நீக்கப்படாவிட்டால், 4 ஆம் தேதியிலிருந்து போராடுவோம் என்று அறிவிப்பு தந்திருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து 27—10—1989 அன்று தொழிலாளர் அலுவலர் இருசாரரையும் அழைத்துப் பேசியிருக்கிறார். இரு சாரரும் தொழிலாளர் அலுவலர் முன்பாக, 1 ஆம் தேதி கூடி, சுமுகமாகப் பேசி, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டு, இன்று பேச்சு வார்த்தை சுமுகமாக நடந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக இணக்கமான முடிவு ஏற்படும் என்று கருதுகிறேன். எனவே 4 ஆம் தேதி போராட்டம் நிச்சயமாக இராது என்று கருதுகிறேன். எனவே எந்தவிதமான குழப்பமும் இல்லாமல், ஆலை தன்னுடைய பணியைத் தொடங்க இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தனி அதிகாரி தவறு செய்திருக்கிறார் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டார்களோ, அந்தத் தனி அதிகாரி மாற்றப்பட்டிருக்கிறார் என்ற தகவலை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மணலியிலுள்ள மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் தொழிலாளர் பிரச்சினை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர அவர்களே, கடந்த ஆண்டு ஜூலை 5 ஆம் தேதி முதல் வேலை மறுக்கப்பட்டு, வெளியே நிற்கக்கூடிய 1400 மணலி மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் நிறுவனத்தின் தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க இந்தச் செய்தியை இங்கே சொல்ல விரும்புகிறேன். அது மத்திய அரசாங்கத்தினுடைய பொதுத் துறை நிறுவனம். சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய இரண்டு தீர்ப்புகளைப் பெற்ற பிறகும்கூட, அந்த உத்தரவுகளை

(11-45)

மதித்து அந்தத் தொழிலாளர்களுக்கு கடந்த 16 மாத காலமாக வேலை வழங்கப்படவில்லை. தமிழக அரசினுடைய செயலாளர் அவர்கள் 3 சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியபிறகும்கூட, அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு "பிரின்சிபிள் எம்ப்ளாயர்" என்று முறையில் அந்தப் பொதுத்துறை நிறுவனம் கலந்து கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, அதனுடைய காண்ட்ராக்டர்களையும் வரவிடாமல் தடுத்திருக்கிறது. இது சம்பந்தமாக விசாரணை நடத்த இருக்கக்கூடிய சமரச அதிகாரியும் ஏப்ரல் மாதத்திலும், அண்மையில் செப்டம்பர் மாதத்திலும் அனுப்பி இருக்கக்கூடிய சமரச முறிவு அறிக்கையில் "காண்ட்ராக்டர்கள் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கத் தயாராக இருந்தும், அந்தப் பொதுத்துறை நிறுவனமான 'மெட்ராஸ் பெர்டிலைசர்' அவர்களுக்கு வேலை கொடுப்பதற்குக் குறுக்கே நிற்கிறது" என்ற குற்றச்சாட்டை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள், வேறு வழியில்லாமல் மறியல் போராட்டத்தில் அந்தக் கம்பெனியின் முன்னே ஈடுபடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையை விரைவாகத் தீர்க்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே விடுத்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொதுத்துறை நிறுவனம் தொடர்பாக, காண்ட்ராக்ட் அடிப்படையில் வேலை செய்து கொண்டிருக்கிற தொழிலாளர்

1989 நவம்பர் 1] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

களை, அவர்கள் வேலைக்குத் தொடர்ந்து செல்வதற்கு 'பிரின்சிபிள் எம்ப்ளாயர்' என்கிற நிறுவனம் மறுக்கிறது என்றும், இது தொடர்பாக அரசாங்கம் தலையிட்டு, பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தொழிலாளர் நலத்துறை செயலாளர் (லேபர் செகரட்டரி) 3 கட்ட பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இன்னும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு இணக்கமான முடிவை அவர்கள் ஏற்படுத்துவார்கள். இல்லையென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) தீப்பெட்டித் தொழில்களுக்கு ஏற்கெனவே இருந்த கலால் வரி வித்தியாசத்தைத் திரும்ப நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின் மீது மத்திய அரசு எடுத்த நடவடிக்கை.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது, தமிழகத்தில் இருக்கிற "ஹேண்டு-மேடு செக்டாரில்" தயாரிக்கப்படுகிற கைவினைத் தீப்பெட்டித் தொழில் நசிந்து போகக் கூடிய அளவுக்கு மத்திய அரசினுடைய வரவு-செலவு திட்டத்திலே "விம்கோ" என்ற பன்னாட்டு கம்பெனிக்கு அளிக்கப்பட்ட வரிச் சலுகையை மாற்றியமைக்க வேண்டும் என்று இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து, ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு மாநில அரசின் சார்பில் அனுப்பியிருக்கிறோமே, அதற்கு இதுவரை ஏதாவது பதில் வந்ததா?

சிவகாசி, சாத்தூரிலிருந்து ஓசூர் வரை தமிழகத்தில் பரவலாக குறைந்தபட்சம் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றையதினம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்த 'டி' கிளாஸ் பேக்டரிகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு கம்பனிக்காக இத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதற்கு ஏதாவது பதில் வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

1989 நவம்பர் 1] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

களை, அவர்கள் வேலைக்குத் தொடர்ந்து செல்வதற்கு 'பிரின்சிபிள் எம்ப்ளாயர்' என்கிற நிறுவனம் மறுக்கிறது என்றும், இது தொடர்பாக அரசாங்கம் தலையிட்டு, பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தொழிலாளர் நலத்துறை செயலாளர் (லேபர் செகரட்டரி) 3 கட்ட பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இன்னும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு இணக்கமான முடிவை அவர்கள் ஏற்படுத்துவார்கள். இல்லையென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) தீப்பெட்டித் தொழில்களுக்கு ஏற்கெனவே இருந்த கலால் வரி வித்தியாசத்தைத் திரும்ப நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின் மீது மத்திய அரசு எடுத்த நடவடிக்கை.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது, தமிழகத்தில் இருக்கிற "ஹேண்டு-மேடு செக்டாரில்" தயாரிக்கப்படுகிற கைவினைத் தீப்பெட்டித் தொழில் நசிந்து போகக் கூடிய அளவுக்கு மத்திய அரசினுடைய வரவு-செலவு திட்டத்திலே "விம்கோ" என்ற பன்னாட்டு கம்பெனிக்கு அளிக்கப்பட்ட வரிச் சலுகையை மாற்றியமைக்க வேண்டும் என்று இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து, ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு மாநில அரசின் சார்பில் அனுப்பியிருக்கிறோமே, அதற்கு இதுவரை ஏதாவது பதில் வந்ததா?

சிவகாசி, சாத்தூரிலிருந்து ஓசூர் வரை தமிழகத்தில் பரவலாக குறைந்தபட்சம் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றையதினம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்த 'டி' கிளாஸ் பேக்டரிகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு கம்பனிக்காக இத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதற்கு ஏதாவது பதில் வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட அந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றும், மத்திய அரசு எடுத்த முடிவை மாற்றிக் கொள்வதற்கில்லை என்றும், ஆகஸ்ட் மாதமே மத்திய அமைச்சர் எனக்குத் தகவல் தெரிவித்திருக்கிறார்கள்.

(ஈ) வன்னியர் சங்கத்தினர் கிளர்ச்சியின்போது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம் அளித்தல்.

* திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வன்னியர் போராட்டத்திலே சாலை மறியலில் ஈடுபட்ட பலபேர் துப்பாக்கிச்சூட்டில் இறந்திருக்கிறார்கள். பலபேர் பல வழக்குகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து பல பேரில் வழக்கு மன்றத்தில் வழக்குகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு, அந்த வழக்குகளையெல்லாம், தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து, திரும்பப் பெறலாம் என்று சொன்னார்கள். அதோடு, துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுக்கு அப்போதிருந்த அரசாங்கம் ரூ. 5,000 உதவித்தொகையாக வழங்குவதாக இருந்தது. அது வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். மேலும் காஞ்சிபுரத்தில் உள்ள காஞ்சிப் பெரியவர் அவர்கள்கூட, இவர்களுக்கு கொஞ்சம் பணம் கொடுக்கலாம் என்று சொல்லி, ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 ரூ. 5,000 என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணம் அரசாங்கத்தில்தான் இருப்பதாகத் தெரிய வருகிறது.

தற்போது இனக் கலவரத்தில் இறந்தவர்களுக்கு ரூ. 25,000 கொடுக்கலாம் என்று இப்போதுள்ள அரசு அனுமதி கொடுத்

(11-50)

திருக்கிறது. அப்போது அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் குடும்பங்கள் பணம் வாங்க மறுத்துவிட்டார்கள். இப்போது கொடுத்தால் வாங்கிக்கொள்வதாக அரசாங்கத்திற்கு கடிதங்கள் எழுதி அனுப்பி இருப்பதாகத்

[1989 நவம்பர் 1

* **மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட அந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றும், மத்திய அரசு எடுத்த முடிவை மாற்றிக் கொள்வதற்கில்லை என்றும், ஆகஸ்ட் மாதமே மத்திய அமைச்சர் எனக்குத் தகவல் தெரிவித் திருக்கிறார்கள்.

(ஈ) வன்னியர் சங்கத்தினர் கிளர்ச்சியின்போது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம் அளித்தல்.

* **திரு. கோ. பூவராகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வன்னியர் போராட்டத்திலே சாலை மறியலில் ஈடுபட்ட பலபேர் துப்பாக் கிச்சூட்டில் இறந்திருக்கிறார்கள். பலபேர் பல வழக்குகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து பல பேரில் வழக்கு மன்றத்தில் வழக்குகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு, அந்த வழக்குகளையெல்லாம், தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து, திரும்பப் பெறலாம் என்று சொன்னார்கள். அதோடு, துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுக்கு அப்போதிருந்த அரசாங்கம் ரூ. 5,000 உதவித்தொகையாக வழங்குவதாக இருந்தது. அது வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். மேலும் காஞ்சிபுரத்தில் உள்ள காஞ்சிப் பெரியவர் அவர்கள்கூட, இவர்களுக்கு கொஞ்சம் பணம் கொடுக்கலாம் என்று சொல்லி, ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 ரூ. 5,000 என்று சொல்லியிருக் கிறார்கள். அந்தப் பணம் அரசாங்கத்தில்தான் இருப்பதாகத் தெரிய வருகிறது.

தற்போது இனக் கலவரத்தில் இறந்தவர்களுக்கு ரூ. 25,000 கொடுக்கலாம் என்று இப்போதுள்ள அரசு அனுமதி கொடுத்

(11-50)

திருக்கிறது. அப்போது அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் களின் குடும்பங்கள் பணம் வாங்க மறுத்துவிட்டார்கள். இப்போது கொடுத்தால் வாங்கிக்கொள்வதாக அரசாங்கத் திற்கு கடிதங்கள் எழுதி அனுப்பி இருப்பதாகத்

1989 நவம்பர் 1] [திரு. கோ. பூவராகன்]

தெரிகிறது. இதைப் பற்றி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு முதலமைச்சர் அவர்கள் வர வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அதோடு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் இருக்கின்றவர்கள் இப்போது முன்பிருந்த வேகம் தணிந்து அவர்கள் ஒரு முகமாக இனிமேல் அவ்வாறெல்லாம் நடப்பது இல்லை என்ற ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்களையும் பரிசிலனை செய்து விடுவிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நிவாரண நிதி உதவி அளித்து இருந்தார்களோ அதையே ஏற்கெனவே வன்னிய சங்கம், ஆதிதிராவிடர்கள் ஆகியோருக்கு இடையில் ஏற்பட்டு, அதனால் பாதிக்கப்பட்டு இருக்கிற வன்னியர்களுக்கும் அதே நிவாரண உதவியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நானும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன். அதோடு சேர்த்து அவர்கள் மேல் பல்லாயிரக் கணக்கான வழக்குகள் பல காலங்களிலே போடப்பட்டிருக்கின்றன. இப்போது சுமுகமான நிலை ஏற்பட்டு அவர்கள் ஒரு அரசியல் கட்சியாக மாறி தேர்தலைச் சந்திக்கும் சூழ்நிலையில் அது போன்ற வழக்குகளையும் வன்னியர் சங்கத்தின் மேல் மட்டுமல்லாமல் ஆதிதிராவிடர்கள் மேல் உள்ள வழக்குகளையும் அரசு வாபஸ் பெற வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் பூவராகன் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திருநாவுக்கரசு அவர்களும் வன்னிய சங்கத்தின் பெயரால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கிளர்ச்சிகளைக் குறித்தும், அதிலே உயிர் இழந்தவர்களுக்குக் குடும்பப் பாதுகாப்பு நிதி அளிப்பது குறித்தும் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். திரு. பூவராகன் அவர்கள் பேசும்போது ஏற்கெனவே இருந்த அரசு அளித்த தொகையை அவர்கள் வாங்க மறுத்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டார். அப்போது அளிக்கப்பட்ட தொகை 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் என்று நான் கருதுகின்றேன். காஞ்சியி

லிருந்து திருமிகு சங்கராச்சாரியார் அவர்கள் மூலமாக அனுப்பப் பட்ட தொகை என்ன ஆயிற்று என்று கேட்டார். இதுபோன்ற விவரங்களை ஒரு நாள் முன்கூட்டிச் சொல்லி, அது குறித்து விவரங்களை நான் சேகரிப்பதற்கு அவர்கள் தவணை தந்து இருப்பார்களேயானால் விவரங்களைச் சொல்ல இயலும். 25 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குத் தர வேண்டுமென்று சொல்லப் பட்ட அந்தக் கருத்தையும், போடி கலவரத்திலே உயிர் இழந்தவர் களுக்குத் தரப்பட்டது போல 25 ஆயிரம் ரூபாய் தர வேண்டு மென்று சொல்லப்பட்ட கருத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். என்றாலும் கூட அவர்கள் அந்தத் தொகையை ஏற்றுக்கொள்வ தாக இருந்தால்—இதுவரையிலே தரப்பட்ட தொகை போக 25 ஆயிரத்தில் மீதித் தொகை அவர்களுக்கு நிச்சயமாக வழங்கப் படும், அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் என்பதனையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று அவர்கள் மீது போடப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான வழக்குகள் கடந்த காலத்தில் தொடரப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும். அதை இந்தப் பேரவையிலே நான் முன்னர் அறிவித்து இருப் பதையும் அவர்கள் நினைவுபடுத்தி இருக்கிறார்கள். நான் அறிவித்தது உண்மை. கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் குறிப்பிட்ட சில வழக்குகளும், பொது வான பல வழக்குகளும் தொடரப்பட்டு இருக்கிறது. நான் அப்போதே சொன்னேன், குறிப்பிட்ட சில பயங்கரமான வன்முறை வழக்குகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என்று அன்றைக்கே சொன்னேன். வன்னி யர்கள் மீது மாத்திரமல்ல ஆதிதிராவிட மக்கள் மீதும் தொடரப் பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று சொன்னேன். அந்த ஆணையில் நேற்றையதினம் நான் உத்திரவு பிறப்பித்து விட்டேன் கையெழுத்திட்டு என்பதை இந்த அவைக்குத் தெரிவித் துக்கொள்கின்றேன்.

(உ) மழையால் பாதிக்கப்பட்டுள்ள மதுரை நகர் பேருந்து நிலையங்களைச் சீர்படுத்துதல்.

திரு. சோ. பால்ராஜ்: பேரவைத் தலைவரவர்களே, மழைக் காலங்களில் மதுரை நகரத்து பொதுமக்கள் மிகவும் அவதிப்படு கிறார்கள். மையப் பேருந்து நிலையத்திலும், அதற்குப்

லிருந்து திருமிகு சங்கராச்சாரியார் அவர்கள் மூலமாக அனுப்பப் பட்ட தொகை என்ன ஆயிற்று என்று கேட்டார். இதுபோன்ற விவரங்களை ஒரு நாள் முன்கூட்டிச் சொல்லி, அது குறித்து விவரங்களை நான் சேகரிப்பதற்கு அவர்கள் தவணை தந்து இருப்பார்களேயானால் விவரங்களைச் சொல்ல இயலும். 25 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குத் தர வேண்டுமென்று சொல்லப் பட்ட அந்தக் கருத்தையும், போடி கலவரத்திலே உயிர் இழந்தவர் களுக்குத் தரப்பட்டது போல 25 ஆயிரம் ரூபாய் தர வேண்டு மென்று சொல்லப்பட்ட கருத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். என்றாலும் கூட அவர்கள் அந்தத் தொகையை ஏற்றுக்கொள்வ தாக இருந்தால்—இதுவரையிலே தரப்பட்ட தொகை போக 25 ஆயிரத்தில் மீதித் தொகை அவர்களுக்கு நிச்சயமாக வழங்கப் படும், அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் என்பதனையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று அவர்கள் மீது போடப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான வழக்குகள் கடந்த காலத்தில் தொடரப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும். அதை இந்தப் பேரவையிலே நான் முன்னர் அறிவித்து இருப் பதையும் அவர்கள் நினைவுபடுத்தி இருக்கிறார்கள். நான் அறிவித்தது உண்மை கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் குறிப்பிட்ட சில வழக்குகளும், பொது வான பல வழக்குகளும் தொடரப்பட்டு இருக்கிறது. நான் அப்போதே சொன்னேன், குறிப்பிட்ட சில பயங்கரமான வன்முறை வழக்குகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என்று அன்றைக்கே சொன்னேன். வன்னி யர்கள் மீது மாத்திரமல்ல ஆதிதிராவிட மக்கள் மீதும் தொடரப் பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று சொன்னேன். அந்த ஆணையில் நேற்றையதினம் நான் உத்திரவு பிறப்பித்து விட்டேன் கையெழுத்திட்டு என்பதை இந்த அவைக்குத் தெரிவித் துக்கொள்கின்றேன்.

(உ) மழையால் பாதிக்கப்பட்டுள்ள மதுரை நகர் பேருந்து நிலையங்களைச் சீர்படுத்துதல்.

திரு. சோ. பால்ராஜ்: பேரவைத் தலைவரவர்களே, மழைக் காலங்களில் மதுரை நகரத்து பொதுமக்கள் மிகவும் அவதிப்படு கிறார்கள். மையப் பேருந்து நிலையத்திலும், அதற்குப்

பக்கத்தில் இருக்கின்ற புகை வண்டி நிலையத்திலும் மற்றும் நகரில் உள்ள தாழ்வான பகுதிகளிலும் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்குவதன் காரணமாக போக்குவரத்து வண்டிகள் உள்ளே செல்ல முடியவில்லை.

(11-55)

போதிய வடிகால் வசதியில்லாத காரணத்தால், சாலைகளெல்லாம் குளங்களாக மாறி வருகின்றன. பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. மத்திய போக்குவரத்து நிலையத்தின் உள்ளே பேருந்துகள் செல்ல முடியாத காரணத்தால் அதற்கு இடம் அளிக்கின்ற வகையில் மாற்று இடம் தற்காலிகமாக வகை செய்யப்பட்டு தரப்பட்டுள்ளது. அதற்காக உத்தரவுகளைப் பிறப்பித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும். அதற்கு உறுதுணை புரிந்த மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை நகர மக்களை மட்டுமல்லாது வெளியூரிலிருந்து பேருந்துகளில் வருகின்ற மக்களும் இந்தப் பிரச்சினையால் அவதிப்படுகிறார்கள். அதற்குக் கிருதமால் நதி வழியாக அந்தப் பகுதியில் இருக்கின்ற தண்ணீர் செல்வதற்கு நகரசபை சார்பாக ஐந்தரை கோடி ரூபாய் திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அதன்மூலம்தான் இதற்கு வழி செய்கின்ற வகையில் முதல் கட்டமாக ஒரு கோடியே முப்பத்திரண்டு இலட்சத்தை உடனடியாக வழங்கி கிருதமால் நதியில் தண்ணீர் செல்வதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும். இதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கம் செய்து கிருதமால் நதி சீரமைப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்புடைய அமைச்சர் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியார் பேருந்து நிலையத்தில் தேங்கும் மழை நீரை வெளியில் அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க் கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன் :

"1989-90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருபது முதல் முப்பத்துமூன்று வரையிலான அறிக்கைகள்."

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்து பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசு உறுதி மொழிக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன் :

"1989-90 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை".

5. (i) சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

*** மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க் கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன் :

"1989-90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருபது முதல் முப்பத்துமூன்று வரையிலான அறிக்கைகள்."

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்து பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசு உறுதி மொழிக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன் :

"1989-90 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை".

5. (i) சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

* மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க் கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்:

"1989-90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருபது முதல் முப்பத்துமூன்று வரையிலான அறிக்கைகள்."

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்து பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசு உறுதி மொழிக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன்:

"1989-90 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை".

5. (i) சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

* மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

1989 நவம்பர் 1]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

1989 நவம்பர் 1]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

1989 நவம்பர் 1]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1989 நவம்பர் 1

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நிறுவனம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

(12-00)

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1989 நவம்பர் 1

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நிறுவனம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

(12-00)

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

1989 நவம்பர் 1]

(ஊ) கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. (ii) சட்ட முன்வடிவுகள் (ஆய்வு).

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் கொடுத்துள்ளார். அவர் தீர்மானத்தை மொழிவார்.

***பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"25—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித் துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

1989 நவம்பர் 1]

(ஊ) கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. (ii) சட்ட முன்வடிவுகள் (ஆய்வு).

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் கொடுத்துள்ளார். அவர் தீர்மானத்தை மொழிவார்.

***பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"25—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஊழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் க. பொன்னு சாமி அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறு கின்றன. இப்போது உரையாற்றுபவர் பேராசிரியர் க. பொன்னுசாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கண்டின்ஜென்சி பண்ட்' என்ற இந்த நிதியம் அரசமைப்புச் சட்டம் 267-ன்கீழ் நிர்வாகம் அவசர காலங்களில் தன்னிச்சையாகவோ, அல்லது மன்றத்தின் அனுமதி பெறாமலோ செலவழித்துக் கொள்ளலாம் என்ற அனுமதியோடு கூடிய நிலையில் அமைக்கப்பட்டது என்பது உறுதி. இது ஒரு நிரந்தரமான முன்பணமாக அமைந்து எதிர்பாராத நிலையில் நிகழ்கிற செலவினங்களைச் சந்திக்கவும், அதற்கு பின்னால் அவற்றைப் பற்றிய துணை மானியக்கோரிக்கைகளை இந்த அவையிலே வைத்து அவைகளுக்கு ஒப்புதல் பெற்றதற்குப் பின்னால் அந்த நிதியை மீண்டும் 'ரெக்கூப்' செய்ய வேண்டும் என்றும் 'இண்ட்ரொடக்ஷன்-டு-பட்ஜெட்' என்ற இந்த அரசின் அறிக்கையில் காணப்படுகிறது.

அந்தவகையிலே பார்க்கிறபோது 75 கோடி ரூபாய் என்று இருக்கிற இந்த நிதியை 200 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று சட்டமுன்வடிவு இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. எதிர்பாராத நிகழ்வுகள் என்று நாம் பார்ப்போமானால், திட்ட மிடாத நிலையில், எதிர்பாராத நிலையில் இயற்கை பாதிப்பு காரணமாகவோ அல்லது வேறு காரணமாகவோ ஏற்படுகிற செலவிற்காக ஏற்பட்ட நிதி இது என்பது பொருந்தும். ஆனால் இங்கே 200 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்த வேண்டு மென்ற கோரிக்கையில் விளக்கத்தில் வறட்சி நிவாரணம் என்று

1989 நவம்பர் 1] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிர்பாராத செலவுகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றை மட்டும் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக இந்தச் செலவினம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனக்கு தெரிய வேண்டியதெல்லாம், இந்த அரசு அமைவதற்கு முன்னாலே தேர்தல் அறிக்கையில்கூட மத்திய அரசிற்கு இணையாக ஊதியம் தரப்படும் என்று கொள்கை அளவிலே அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே வரவு-செலவுத் திட்டத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகிறபோது, 1—6—1988 முதல் இது முன்

(12-05)

தேதியிட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். அப்போது நான் பேசுகின்றபோது கூட இந்த அவையிலே சொன்னேன். இதற்கு நிதி ஆதாரம் காட்டப்பட வில்லையே என்று கேட்டேன். அதற்கு மறுமொழி அப்போது தரப்படவில்லை. அதற்குப் பின்னாலே இப்போது எதிர்பாராத செலவினம் என்று இதைக் குறிப்பிட்டு இருப்பது எந்தவகையில் நியாயம் என்பதை இந்த அவை உறுப்பினர்கள் உணர்ந்து பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. இப்படிப்பட்ட செலவினம் இந்த அவையின் ஒப்புதலைப் பெறாமலேயே செலவழிப்பதற்கு ஒரு தகுதியை உருவாக்கிக் கொடுக்கிறது. இந்த நிதியும் அளவுக்கு அதிகமாக உயர்த்தப்படுகிறபோது, நிதி தவறாக பயன்படுத்தப்படுகிறதோ என்ற எண்ணம் மக்களுக்கு வருகிற சூழ்நிலை உருவாகலாம் என்ற ஐயப்பாடும் எழுகிறது.

அதுமட்டுமல்ல, இங்கே துணை மானியக் கோரிக்கைகளை வைத்து, அதற்குப் பின்னாலே அதற்கு ஒப்புதலைப் பெற்றதற்குப் பின்னாலே இந்த நிதியைப் பற்றி, முடிவு செய்ய வேண்டியது முறை என்று இருந்தாலும்கூட, துணை மானியக் கோரிக்கைகள் இங்கே வைக்கப்படவில்லை என்ற நிலையில், முன்பே இருக்கிற 75 கோடி ரூபாய்க்கு என்ன கணக்கு காட்டப் படுகிறது என்பது தெரியாத நிலையில், அதை 200 கோடி ரூபாயாக உயர்த்தவேண்டும் என்கிற இந்தச் சட்டம் வருவது எந்த அளவிற்கு சரியாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்

காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை 'பைனான்சியல் இன்டிசிப்ளின்' என்று மக்கள் நினைத்துவிடக் கூடாது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

(மாற்றுத் தலைவர் தலைமை)

இன்னும் சொல்லப்போனால், பல்கலைக்கழக நிதி உதவிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கல்லூரி ஆசிரியர் களுக்கு ஊதியம் வழங்கவேண்டும் என்று கொள்கை முடிவு எடுக்கப்பட்டபோது, இந்த அவையிலே நான் அதுகுறித்துச் சொன்னபோது, பணம் வந்துவிட்டது, தருகிற சூழ்நிலை இருக் கிறது, அதை ஜூன் மாதத்திற்குள் அந்த நிலுவைத் தொகை தந்துவிடப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் இங்கே உறுதி அளித்தார்கள். ஆனால் இதிலே 50 விழுக்காடுதான் இப்போது தரப்படுகிறது என்றும், மீதி அவர்களுடைய சேமநல நிதியிலே வைக்கப்படுகிறது என்றும், அவர்கள் 1990 ஆம் ஆண்டு ஒரு பகுதியையும், 1991 ஆம் ஆண்டு மற்றொரு பகுதியையும் கடனாகப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அளவிலே வைத்திருக் கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எவ்வாறு அவர்கள் நடைமுறைப்படுத்துகிறார்கள் என்று சந்தேகிக்கவேண்டிய நிலை யிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அரசு அலுவலர்களுக்குத் தரவேண்டும் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை முழுமையுமே, அவர்களுக்கு சேமநல நிதியில் வைத்துவிட்டு, அவர்கள் ரிடையர் ஆனபிறகு தான் அது கிடைக்கும், இல்லாவிட்டால், அவர்கள் இறந்தபிறகு தான் கிடைக்கும் என்று சொல்கிற அரசு, அதற்காக 125 கோடி ரூபாய் வேண்டும் என்று இங்கே கேட்டு இருப்பது எந்தவகை யிலே நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 426 கோடி ரூபாய் அளவிற்கு இதற்காக செலவழித்து இருக்கிறோம் என்று பல முறைகள் விளம்பரம் தந்திருக்கிறார்கள், அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இங்கே 125 கோடி ரூபாய் மட்டும்தான் கேட்கப்பட்டு இருக்கிறது. மீதிப் பணம் எங்கிருந்து வருகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்துவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

அதைப் போலவே ஜி.பி.எப்-லே போடுவதற்கு அந்தத் துறை ஒத்துக்கொள்ளவில்லை என்ற வதந்தி பரவியிருக்கிறது. தற்போதைய நிலை என்ன என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்துவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. புதுப்புது அறிவிப்புகள் வருகிற காரணத்தாலும், புதிது புதிதாக நிதியை உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கைகள் வருகிற காரணத்தாலும், ஏழை ஆசிரியர்களுடைய பணம், அலுவலர்களுடைய பணம், அவர்களுக்குப் போய்ச் சேராமல் வேறு திட்டங்களுக்குப் போய்ச் சேருகிறது என்ற எண்ணம் பொதுமக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சா. கணேசன்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்து விட்டது. தயவுசெய்து முடித்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : ஆங்கிலத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். "Rob Peter to pay paul" என்று. 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தது' என்பதைப்போல, மக்கள் நினைத்துவிடாமல் இருக்க, நல்ல முறையில் இவைகள் நடைபெற வேண்டும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லி, இப்படிப்பட்ட நடவடிக்கையிலே குளறுபடிகள் என்று போய்க்கொண்டேயிருக்குமானால், அரசு அமைப்புச் சட்டம் 360-ன் கீழ், ஏதாவது 'பைனான்சியல் எமர்ஜென்சி' என்ற அளவிலே மத்திய அரசு நடவடிக்கை எடுத்து விடுகிற அளவிற்கு இந்த அரசு நடந்து கொள்ளக்கூடாது என்ற எச்சரிக்கையை இங்கே தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து, என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவு, கன்டின்ஜென்ட் பண்ட் என்ற பெயரால், 75 கோடி ரூபாயை 200 கோடி ரூபாயாக உயர்த்தவேண்டும் என்று இங்கே அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பட்டது. கன்டின்ஜென்சி பண்ட் என்று ஒன்று இருக்க முடியாது, முன்பு இருக்கவில்லை என்று இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே கூட முதன் முறையாக 1954 ஆம்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம்] [1989 நவம்பர் 1

ஆண்டு தான் கன்டின்ஜென்சி பண்ட் என்று சொல்லி 50
(12-10)
லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று அன்றையதினம் நிதியமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதையே ஒரு கோடியாக ஒதுக்கியபோது இந்தச் சபையிலே கடுமையான எதிர்ப்பு வந்தது. எதிர்பாராத செலவு எப்படி வர முடியும். ஒவ்வொரு இலாகாவும் தங்களுடைய மானிய கோரிக்கையை இங்கே வைக்கிறது. என்னென்ன செலவு என்று ஒவ்வொரு அயிட்டமாக போட்டு காட்டி இவ்வளவு மானியமாக தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்கள். அப்படி இருக்கும்போது இவ்வளவு பெரிய தொகையை ஏன் எதிர் பாராத செலவாகக் கேட்கிறார்கள். பட்ஜெட்டிலேயே அதற்கு வழிவகை செய்திருக்கலாமே; பட்ஜெட்டிலேயே சேர்த்து அதை போட்டிருக்கலாமே என்று அன்றையதினம் கடுமையாக எதிர்த்தார்கள். இந்தச் சபையிலே இருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கும், முன்னாள் உறுப்பினர்களுக்கும்—முன்னாள் அமைச்சர்கள் கூட இங்கே இருக்கிறார்கள்—அவர்களுக்குக் கூட தெரியும். ஒரு கோடி ரூபாய் என்பதை 2 கோடியாக ஒரு முறை உயர்த்தப்பட்டது. அன்றையதினம் இந்தப் பக்கத்திலே யிருந்து கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. இரண்டு கோடி யாக, எதிர்பாராத செலவு என்பதற்கு, அவ்வளவு எளிதிலே கொடுத்து விட முடியாது என்று சொல்லி அன்றையதினம் எதிர்ப்பு சொன்னார்கள்.

ஆனால் இப்போது திடீர் என்று 25—7—1989 ஆம் தேதி அன்று அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சட்ட மன்றத்தினுடைய பட்ஜெட் கூட்டம் முடிந்த 2 மாதங்களுக்குள் ளாக எதிர்பாராத செலவு பெரிதாக என்ன வந்திருக்க முடியும். கஜானா காலி என்று சொல்லிவிட்டு வந்ததற்குப் பின்னாலே கூட அன்றையதினம் பட்ஜெட்டிலே 75 கோடி ரூபாய் போதும் என்று சொன்னார்கள். இதற்கென்று இன்றையதினம் இந்தச் சட்டமுன்வடிவிலேயும், அவசரச் சட்டத்திலேயும் குறிப்பிடப் பட்டிருக்கிற காரணங்கள் "Drought relief operations, Implementation of the 5th Pay Commission recommendation".
என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே இந்த வறட்சி நிவாரணப் பணி என்பது புதியதாக வந்த நிலைமை அல்ல.

1989 நவம்பர் 1] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகமான வறட்சியும் கிடையாது. எனவே வறட்சி நிவாரணத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று சொல்லி இருந்தால் பட்ஜெட்டிலேயே ஒதுக்கி இருக்கலாம். பட்ஜெட்டிலேயே எந்தெந்த வகையிலே என்ன என்ன செலவு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியே ஒதுக்கியிருக்கலாம். அதைப்போல "Implementation of 5th Pay Commission recommendations". என்று சொல்வது ஆளும் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலேயே கூறப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் அமல்படுத்துவோம். சம்பளத்தை அதிகப் படுத்திக் கொடுப்போம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி இருக்கும்போது நிதி அறிக்கையிலேயே அதற்கென்று நிதி ஒதுக்கியிருக்க வேண்டும். இன்றையதினம் இரண்டுமே எதிர் பார்த்த அயிட்டங்களாக இருக்கிறபோது, 75 கோடியிலிருந்து 200 கோடியாக ஒதுக்க வேண்டுமென்று கேட்பது நியாயம் அல்ல. ஏனென்று சொன்னால் நிச்சயமாக This amounts to financial mismanagement not only indiscipline. என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். The authority of Assembly is being undermined என்று சொல்லி, பட்ஜெட்டிற்கு என்று நிதி ஒதுக்கும்போது ஒவ்வொரு இலாக்காவும் மானியக் கோரிக்கைக்கு என்று இவ்வளவு நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று இந்த மன்றம் வாக்கு அளித்ததற்குப் பின்னாலேதான் நிதியை அரசு பெற முடியும். அந்த நிலைமையை மாற்றிக்கொண்டு பொதுவாக 200 கோடி ரூபாய் என்று சொன்னால் எந்த நோக்கிலே வேண்டு மானாலும் எதற்காகவும் ஒதுக்கிக்கொள்ள முடியும் என்ற அள விலே இந்தப் பணம் கேட்பது முறையல்ல என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்பாராச் செலவு என்ற தலைப்பின் கீழ் தமிழக அரசுக்கு மேலும் நிதி வசதி தேவை என்ற முறை யிலே 75 கோடி ரூபாய் என்ற எதிர்பாராச் செலவை 200 கோடி ரூபாய் என்ற அளவிலே வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக் கிறார்கள். । இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டதன் நோக்கமே வறட்சி நிவாரணத்திற்கு பணம் செலவு அதிகமாக ஆகிறது

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1989 நவம்பர் 1

என்ற முறையிலேயும், ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்ற முறையிலேயும் சொல்லப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால் வறட்சி நிவாரணத்தைப் பொறுத்த வரையில் வறட்சி நிவாரணம் செய்யப்பட்டிருக்கிறதா என்ற விவரங்கள் சம்பந்தப்பட்ட தொகுதியைச் சார்ந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ மற்றும் உள்ள பொதுமக்களுக்கோ தெரிவிக்கப் படவில்லை. ஆங்காங்கே நாங்கள் செல்லுகிற நேரத்தில் எங்காவது வறட்சி நிவாரணப் பணிகள் செய்யப்பட்டிருக்கிறதா என்று நாங்கள் கேட்கிற நேரத்திலே 'செய்யப்படவில்லை' என்றுதான் ஒரு குற்றச்சாட்டை பொதுமக்களும் சொல்லுகிறார்கள். அதிகாரிகளையும் நாங்கள் சந்தித்துக் கேட்கிற நேரத்தில் அவர்கள் சொல்வதெல்லாம் ஒரு ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் 50 ஆயிரம் ரூபாய் அல்லது 70 ஆயிரம் ரூபாய்தான் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

பொதுப்பணித் துறையைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு எவ்வளவு பணம் வந்திருக்கிறது என்ற விவரத்தை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதற்குக்கூட அவர்கள் தயாராக இல்லை என்ற நிலைமை தான் இருந்துக் கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட நிலைமையிலே வறட்சி நிவாரணத்திற்கு என்று சரியான முறையிலே செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்ற சந்தேகங்கள் இன்றைக்கு மக்கள் மனத்திலே வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு. ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைச் சார்ந்திருக்கிற லத்தூர் ஒன்றியத்தில் அங்கே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் உறை கிணறுகளை போடுவதற்காக உறைகளை வாங்கியிருக்கிறோம் என்று சொல்லி அதனுடைய விலையை 15 ஆயிரம் ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் லாரி வாடகை மட்டும் 8 ஆயிரம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னையிலிருந்து அந்தப்

(12-15)

பகுதிக்கு லாரி வாடகை என்று சொன்னால் 400 ரூபாய் அல்லது 500 ரூபாய்க்கு மேல் செல்லாது. ஆனால் 8,000 ரூபாய் என்று

1989 நவம்பர் 1] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

சொல்லி கணக்குகளை எழுதியிருக்கிறார்கள். இதையெல்லாம் சரிபார்ப்பதற்கு சர்வ கட்சி குழுக்களோ மாவட்ட அளவிலோ மற்ற அளவிலோ இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல இன்றைக்கு 5-வது ஊதியக் குழுவானது பல்வேறு முறையிலே மாற்றப்பட்டு, பலமுறை அதறகென்று சட்டங்கள் இயற்றப்பட்டு அறிவிப்புகள் வந்து நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. ஆனால் அரசினுடைய நிறுவனங்களாக விளங்கக் கூடிய பொது நிறுவனங்களுக்கு அந்த ஊதிய குழுவின் மூலமாக ஏதாவது வழங்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு முன்பெல்லாம் ஊதிய குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு அனைத்து பொது நிறுவனங்களும் அந்த சிபாரிசுகளை அமல்படுத்தியிருக்கின்றன. ஆனால் தற்போது அந்த சிபாரிசுகளை எல்லாம், லாபத்திலே ஓடுகின்ற பொது நிறுவனங்களில் மட்டும்தான் அவைகளை அமல்படுத்தியிருக்கின்றன. மற்ற பொது நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 1 இலட்சத்திற்கு மேற்பட்டு இருக்கின்ற அரசு ஊழியர்களுக்கு அவைகள் வழங்கப்படவில்லை. ஆனால் அந்த ஊதியக் குழுவிலே சொல்லப்பட்டிருக்கின்ற சிபாரிசின்படி அவர்களுடைய வேலை நேரம் மட்டும் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு ஊதியம் அதிகமாக கொடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் இருக்கின்றன என்பதை அரசினுடைய கவனத்திற்கு சுட்டிக்காட்டி இந்த எதிர்பாராத செலவிற்கு சொல்லப்பட்டிருக்கின்ற காரணங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏற்கனவே அரசுக்குத் தெரிந்த இந்த காரணங்களையே மீண்டும் எதிர்பாராத செலவு என்ற முறையிலே சொல்லி நிதி ஒதுக்கீடுகளை சட்டமன்றம் முடிந்த பிறகு நீங்கள் பெற்றிருப்பதை இந்த அவையானது வன்மையாக கண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த அவசரச் சட்டத்தை எதிர்க்கின்றேன் என்பதைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராத செலவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது; ஆகவே அவசரச் சட்டத்தை இங்கு சட்டமாக, சட்டமுன்வடிவாக மாறுவதை எதிர்க்கிறோம் என்று எதிர்க் கட்சி உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சி உறுப்பினரும் இங்கே

எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இந்த எதிர்பாராத செலவு என்பது 'கண்டின்ஜென்ட் ஃபண்டு' என்ற ஒரு ஆங்கிலச் சொல்லுக்கான மொழி பெயர்ப்பு. என்ன காரணத்தினாலோ இன்னும் அந்த ஆங்கிலச் சொல்லுக்கு சரியான மொழி பெயர்ப்புக் கிடைக்காத காரணத்தினால் அது எதிர்பாராத செலவு என்றே வழக்கமாக. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில்லரைச் செலவுகள் என்று நாம் பயன்படுத்துவது உண்டு. (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது இன்னும் ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டியது. அப்போது உங்களையும் கலந்து கொள்வோம். இந்த 'கண்டின்ஜென்சி' என்பதற்கு அகராதியிலே பொருள் தேடியபோது 'அன்செர் டேன்டி' என்கின்ற ஒரு குறிப்புதான் காணப்படுகிறது. 'அன்சேர்டேன்டி' என்று சொல்லும்போது திடீரென்று நிச்சயித்துக் கூறமுடியாத சூழ்நிலை. ஏற்கனவே நிச்சயித்துக் கூற முடியாத சூழ்நிலை. இப்படி, இந்தச் சொல்லை போட்டிருந் தால் நீங்கள் யாரும் எதிர்த்திருக்கமாட்டீர்கள். எதிர்பாராத செலவு என்பது காலாகாலமாக திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து, அதற்குப் பிறகு கழக ஆட்சிக் காலத்தில் அதற்குப் பிறகு அண்ணா தி.மு.க. ஆட்சி காலத்தில், மீண்டும் இப்போது கழக ஆட்சிக் காலத்தில் அதே சொல்லைப் பயன்படுத்துகின்ற காரணத் தால் எதிர்பாராத எதிர்ப்பு இந்த எதிர்பாராத செலவுக்கு இப்போது இங்கே ஏற்பட்டிருக்கிறது. (சிரிப்பு) அன்செர்டேன்டி என்கின்ற வகையில் நிச்சயித்து கூறமுடியாத ஒரு சூழலில் நாம் சில விவரங்களை முன்பு அறிவித்து நிச்சயித்து கூறமுடி யாத காரணத்தால் ஏற்பட்டுவிட்ட திடீர் செலவுகளை ஈடுகட்ட வும் அதற்கான அனுமதியை இந்த அவையிடம் பெறவும் இந்தச் சட்டமுன்வடிவை உங்களிடத்திலே வைக்கின்றோம். நாங்கள் செய்ய இருக்கின்ற செலவுகளுக்கு நிச்சயமாக கணக்குகள் உண்டு. பொதுக் கணக்குக் குழு அந்த கணக்கை பார்க்க இருக்கிறது. அதற்குப் பிறகு ஆடிட் ரிப்போர்ட்டும் உண்டு. திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன். ஆடிட் ரிப்போர்ட்டை நாங்கள் அவமதிப்பவர்களே அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி). ஆடிட் ரிப்போர்ட் என்ன சொல்

1989 நவம்பர் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

கிறதோ அதை நாங்கள் மதிப்பவர்கள். எனவே, ஆடிட் ரிப்போர்ட்டும் உண்டு. பொது கணக்குக் குழுவும் அதை ஆய்ந்து தன்னுடைய அறிக்கையை இந்த அவையிலே வைக்க இருக்கிறது. இதற்கு என்னென்ன செலவுகள் வறட்சி நிவாரணப் பணிகள் ஒழுங்காக நடைபெற்றதா என்று நண்பர் உகம்சந்த் அவர்கள் கேட்டார்கள். இன்றையதினம் எழுப்பப் படுகின்ற கேள்விகளுக்கெல்லாம் என்ன காரணம் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இவைகள் எல்லாம் பத்திரிகை களிலே கொட்டை எழுத்தில் வரும்போது வறட்சி நிவாரணப் பணி ஒழுங்காக நடைபெறவில்லை என்ற செய்திகள் அந்த நேரத்தில் தரப்படவேண்டும்.

(12-20)

இது எல்லாம் எதிர்க்கட்சிகளுடைய கடமை. நான் அவை களை மறுக்கவில்லை. அந்த வகையிலே அதற்குப் பயன்படுமே யானால், உங்களுடைய சாமர்த்தியத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர் சொன்னார், கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்காதீர்கள் என்று சொன்னார். கடைத் தேங்காய்கள்—இந்தக் கடையி னுடைய தேங்காய்கள் வழிப் பிள்ளையார்களுக்குப் போய் விடாமல் பாதுகாத்த காரணத்தினாலேதான் பல கோடி ரூபாய் இன்றைக்கு இந்தச் சர்க்காருடைய கஜானாவுக்கு வருகிறது.

பணம் இல்லை, பணம் இல்லை என்றாயே, இப்போது எங்கே யிருந்து பணம் வந்தது என்று திரு. பாலசுப்பிரமணியம் ஆச்சரி யத்தோடு கேட்டார். இங்கே மாத்திரம் அல்ல. வெளியிலே கூட அவருடைய கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் கேட்கி றார்கள், எங்கேயிருந்து வந்தது பணம், எங்கேயிருந்து வந்தது பணம் என்று கேட்கிறார்கள். நான் அவைகளுக்கெல்லாம் விவரங்களை இங்கே சொல்லிக் கொண்டிருக்க விரும்பவில்லை. ஏனென்றால், இந்தச் சட்ட முன்வடிவு, பல சட்ட முன்வடிவுகள் இங்கே விவாதத்திற்கு வர இருக்கின்ற காரணத்தால் நான் நேரத்தை அதிகம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

வறட்சி நிவாரணப் பணிகள் மிகச் செம்மையாக நடை பெற்றன என்று அந்தப் பணிகளைக் கவனிப்பதற்காக, ஆய்வு செய்வதற்காக வந்த மத்தியக் குழு உறுப்பினர்களே கூட பாராட்டி விட்டுப் போய் இருக்கின்றார்கள். அதைப்போலவே,

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 நவம்பர் 1

427 கோடி ரூபாய் தரவேண்டும் என்று முன்பே தெரியாதா என்று நண்பர் திரு. பொன்னுசாமி அவர்கள் இங்கே கேட்டார்கள். அவர்கள் பேச்சுக்குப் பேச்சு, ஒவ்வொரு வாசகத்திலும், சந்தேகப்படுகிறேன், சந்தேகப்படுகிறேன் என்றே சொன்னார்கள். 'சங்கீதம் சீனிவாசராவ்' என்பதைப்போல, 'சந்தேகம் பொன்னுசாமி' என்று கூட அவருக்கு ஒரு அடைமொழி கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. அந்த அளவிற்கு சந்தேகப்படுகிறேன், சந்தேகப்படுகிறேன் என்று சொன்னார். எந்தச் சந்தேகமும் நிச்சயமாக இருக்கத் தேவையில்லை.

முதலிலே ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரைகள் வருவதற்கு முன்பு, நம்மால் இவ்வளவு கோடி தேவை என்று திட்டவட்டமாக மதிப்பிட இயலாது. எனவேதான் அதை நிச்சயமற்ற செலவில், 'அன்செர்ட்டன்டியில்', அதாவது கன்டின்ஜன்ட் ஃபண்டில் சந்தித்துக் கொள்ளலாம் என்று இருந்தோம். பிறகு அந்த ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகள் வந்து அதை அறிவித்து, அதற்கு மேலும் அரசு அலுவலாளர்கள் பல கோரிக்கைகளை வைத்ததன் காரணமாக 400 கோடி ரூபாய்க்குக் குறைவாகவே அறிவிக்கப்பட்ட அந்தத் தொகை பிறகு 430 கோடி ரூபாய் அளவுக்கு நீண்டு போனது எல்லாம் உங்களுக்குத் தெரியும். இந்தக் காரணங்களால்தான் அந்தச் செலவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

துணை மானியக் கோரிக்கையை ஏன் வைக்கவில்லை என்று கேட்டார்கள். துணை மானியக் கோரிக்கை வைத்து விவாதிப்பதற்கு யாருக்கும் அவகாசம் இல்லை. ஆளும் கட்சிக்கு மாத்திரமல்ல; எதிர்க்கட்சித் தரப்பிலே இருக்கின்ற நண்பர்களுக்கும், காங்கிரஸ் கட்சித் தரப்பில் உள்ள நண்பர்களுக்கும் மற்றும் இங்கே அமர்ந்திருக்கின்ற பல்வேறு கட்சிகளுடைய தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் அந்த அளவுக்கு அவகாசம் இல்லை. இந்த அவை கூட்டப்படும் என்று ஆளுநர் அவர்கள் அறிவித்த பிறகுதான் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேதி குறிக்கப்பட்டு, இன்னும் இரண்டு, மூன்று நாட்களுக்குள் தேர்தல் பணிகளிலே ஈடுபடவேண்டிய சூழ்நிலையிலே இந்த அவையிலே உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் இருக்கின்ற காரணத்தினால், துணை மானியக் கோரிக்கை விவாதம் இப்போது தேவையில்லை என்று அலுவல் ஆய்வுக் குழுவிலே அனைத்துக்

1989 நவம்பர் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

கட்சித் தலைவர்களும் எடுத்த முடிவின்படிதான் துணை மானியக் கோரிக்கை வைக்கப்படவில்லை. துணை மானியக் கோரிக்கை ஏற்கெனவே தயார் நிலையிலே இருந்தது. அதை விவாதிப்பதற்கு நேரம் இல்லாத காரணத்தால் வைக்கப்பட வில்லை. எனவே, சந்தேகத்திற்கு கொஞ்சமும் இடம் தராமல், எங்களை நம்பி, இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

[1989 நவம்பர் 1

(ஆ) விற்பனை வரி (மேல் வரி) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

"1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித் துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனைவரி (மேல்வரி) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

(12-25)

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் க. பொன்னு சாமி அவர்களின் தீர்மானமும், அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டு இருக்கின்ற சட்ட முன்வடிவிலே சென்னை நகர குடிநீர் சப்ளையை சீர்படுத்து வதற்காகவும், அதற்கான செலவினங்களை சரி செய்வதற்காகவும் விற்பனை வரியில் 5 சதவீதம் மேல் வரியாக விதிக்கப்படுகிறது என்று கொண்டு வந்து இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் சப்ளை சரியாக இல்லை என்பது ஒத்துக்கொள்ளப்பட்டு இருப்பது கண்டு உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த குடிநீர் சப்ளை சரியாக ஆக்கப்படுவதற்காக வரி விதிக்

* 31—10—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசி தழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1989 நவம்பர் 1] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

கிறோம் என்று சொல்லி வரியை போட்டு விட்டீர்கள். ஆனால் இன்னமும் குடத்தோடு மக்கள் அலைந்து கொண்டு தான் இருக்கிறார்கள். பார்க்கிறோம். இதற்கு முன்னாள் இருந்த அரசு எவ்வளவு, சிரமங்களுக்கு இடையிலும் எங்கெங்கு இருந்தோ தண்ணீரை கொண்டு வந்து முழுமையாக தண்ணீர் சப்ளையை செய்து கொண்டு இருந்தார்கள் என்ற உண்மையை இந்த மாமன்றமும், இந்த மன்றத்தில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும் மறுக்க முடியாது என்பதை இங்கே நான் நினைவுப் படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதி 5 சதவீதம் என்பது சாதாரணமாக நமக்கு தோன்றினாலும் தண்ணீருக்காக அலைந்து கொண்டிருப்பவர்கள் தான் இந்த 5 சதவீத வரியையும் செலுத்துகிறார் என்பதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு அரசு முன் வரவேண்டுமே தவிர தண்ணீர் கொடுக்கப்படுவதற்காக வரி வாங்குகிறோம் என்று மீண்டும் சொல்லி தண்ணீர் தாராமல் இருப்பதை தவிர்க்கவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் இதை நான் எதிர்த்து அமைகிறேன். நன்றி.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரி விதிப்பு குறிப்பாக சென்னை நகரத்திலே இருக்கின்ற மக்களுக்கு தண்ணீர் வசதியை பெருக்குவதற்காக இந்த வரி விதிப்பு செய்யப்பட்டு இருக்கிறது. குறிப்பாக இப்போது சென்னை மாநகராட்சியில் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு இப்போது சென்னை நகரத்திற்கு மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இதுபோல் மற்ற நகரத்திற்கும் விஸ்தரிப்பதற்கு ஏதாவது அரசின் யோசனை உண்டா என்று தெரியவில்லை. குறிப்பாக நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் 2 முறை ஆந்திரா மாநிலத்திற்குச் சென்று தெலுங்கு கங்கை திட்டம் சம்பந்தமாக அதை விரைவு படுத்துவதற்கு, விரைவில் தண்ணீர் சென்னை நகரத்திற்கு வந்து சேருவதற்கு 2 முறை ஆந்திரா மாநிலம் சென்று அங்குள்ள அதிகாரிகளையும், அமைச்சர்களையும் பார்த்து வந்தார்கள். அதுபற்றிய ஒரு முழுமையான திட்டவட்டமான நிலையை எப்போது இந்த நகரத்திற்கு ஒரு நல்ல தண்ணீர், நிரந்தரமாக கிடைக்கும் என்பதை மக்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்

கிறார்கள். இந்த 5 சதவீத வரி மட்டும் அல்ல, இன்னும் கூட நீங்கள் அதிகமாக போட்டால் கூட நிரந்தரமாக நாள் முழுவதும் இந்த நகரத்தில் வாழ்கின்ற மக்களுக்கு தண்ணீர் பிரச்சினை தீர்வதற்கு ஒரு தனி வரி போட்டால் கூட ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறார்கள். இருந்தாலும் இந்த தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு நாம் எந்த அளவுக்கு முயற்சி எடுக்கிறோம் இந்த பணத்தை வைத்துக்கொண்டு இது போதுமா, போதாதா என்பதை எல்லாம் பற்றி புதிய அரசு பரிசீலனைச் செய்து வந்த உடனே அவர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தையும் செலுத்தி மேற்கொண்டு செலுத்துவதற்கு தயாராக இருக்கிறோம் என்று சொல்லி விரைவுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார்கள். இந்த 5 சதவீதம் பற்றி கவலைப்படாமல் மேலும் இந்த தண்ணீரை கொண்டு வந்து சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்பது தான் என்னைப் போன்றவர்கள் கருதுவது. இந்த பெரு நகரத்தில் மட்டும் அல்லாது இதுபோன்று கோவை, திருச்சி, மதுரை போன்ற நகரத்திலும் கூட இந்த மாதிரி தண்ணீர் தட்டுப்பாடு இருக்கக் கூடாது என்பதற்காக ஒரு முழுமையான ஒரு சட்டம் அல்லது வரி போடுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்தால்கூட நல்லது. தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் நான் முழுமையாக அவர்கள் கொண்டுவந்த இந்த வரி விதிப்புக்கு என்னுடைய ஆதரவை தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

(12-30)

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரிக்கு கூடுதல் மேல் வரி விதிப்பதற்கான இந்தச் சட்ட முன்வடிவை இங்கே விவாதிக்கின்றபோது இதனுடைய நோக்க காரண விளக்க உரையிலே குறிப்பிட்டு இருப்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். சென்னை நகரிலே குடிநீர் வழங்குதலை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் நிதி ஆதாரங்களை திரட்டும் வகையில் சென்னை மாநகராட்சியிலும் சென்னை மாநகராட்சியினுடைய வெளி எல்லையோரத்திலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாகவும் விற்பனை வரியின் மீது இந்த 100 க்கு 5 விழுக்காடு கூடுதல் வரி விதிப்பதற்காக இந்த சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது எப்படி குடிநீர் வழங்குதலை அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படும்,

1989 நவம்பர் 1] [திரு. உ. ரா. வரதராசன்]

இந்த வரி எப்படி மாற்றப்படும் என்பதைப்பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். சென்னை நகரத்திலேயும் சரி, புறநகர் பகுதிகளிலேயும் சரி குடிநீர் வழங்குவதிலே ஒரு மிகக் கடுமையான நெருக்கடி இப்போது ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, குடிசைபபகுதி களிலே குடிநீர் சப்ளை என்பது கடுமையாகப் பாதிக்கப்பட்டு மக்களெல்லாம் அல்லலுறுகின்றனர். அங்கே போதுமான தண்ணீர் டாங்குகள் இல்லாத நிலைமையும் இருந்து கொண்டி ருக்கின்றன. இதோடு இந்த மசோதாவிலே சென்னை நகரத்தி னுடைய குடிநீர் வசதியை அதிகரிப்பதற்காக சென்னை மாநக ராட்சியினுடைய மக்கள் மட்டுமல்ல. எல்லையிலேயிருந்து 32 கிலோ மீட்டர் சுற்றுப்புறத்திலேயுள்ள எல்லா மக்களும் இந்தக் கூடுதல் வரியைச் செலுத்தவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆனால் அந்த 32 கிலோ மீட்டர் சுற்றுப்புறத்திலே வாழக்கூடிய புறநகர் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் வசதி எப்படி செய்யப்படுகிறது என்பதையும் இங்கே நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த 32 கிலோ மீட்டர் சுற்றுப்புற பகுதி களிலே குடிநீர் ஆதாரம், அதாவது வாட்டர் சோர்ஸ் உண்டு. ஆனால் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடு என்பது இல்லை. இந்த மாநகராட்சியினுடைய மக்கள் மட்டுமல்ல, சுற்றுப்புற பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களும் இந்த வரியை செலுத்த வேண்டுமென்று நினைக்கிறபோது 32 கிலோ மீட்டர் சுற்றுப் புறத்திலே இருக்கக்கூடிய அத்தனை மக்களுக்கும் புறநகர் மக்களுக்கும் குடிநீர் வழங்குகிற வசதியை மெட்ரோ வாட்டர் ஏற்குமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். ஏற்க வேண்டுமென்று, சில பகுதிகளுக்கு முடிவு செய்த பின்னரும்கூட அது மெட்ரோ வாட்டரிலே ஏற்கப்படாத நிலைமை என்னுடைய தொகுதியிலேயும் உண்டு ; மற்ற பகுதிகளிலேயும் உண்டு.

ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம் இந்தப் புறநகர் பகுதி களுக்கு அமைக்கப்படவேண்டுமென்றும் அதற்கான ஆய்வு நடத்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் பலமுறை விடுக்கப் பட்ட போதும்கூட குடிநீர் வடிகால் வாரியம் அந்த ஆய்வுகளை நடத்துகிற பொறுப்பைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லையென்பது

பட்டபோதும்கூட குடிநீர் வடிகால் வாரியம் அந்த ஆய்வுகளை நடத்துகிற பொறுப்பைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லையென்பது

பல ஆண்டுகளாகவே இருக்கிற நிலைமை. அதற்கு ஒரு

முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். சென்னை நகர மக்களுடைய பிரதிநிதியும் நான். என்னுடைய தொகுதி சென்னை நகரத்திலேயும் அடங்கி இருக்கிறது. ஆனால் என்னுடைய தொகுதி செங்கை-அண்ணா மாவட்டத்திலே அடங்கியிருக்கிற தொகுதி. சென்னை நகரத்திற்கு குடிநீர் சப்ளை செய்வது செங்கை-அண்ணா மாவட்டத்திலேயிருந்துதான். ஆனால் சென்னை மாநகரத்து மக்களுக்கு குடிநீர் வழங்குகின்ற அந்த செங்கை-அண்ணா மாவட்டத்திலே, குறிப்பாக சென்னையினுடைய புறநகர்ப் பகுதிகளிலேயிருக்கக் கூடிய மக்கள் குடிநீருக்காக ஆலாய் பறக்கிறார்கள் என்கின்ற நிலைமையையும் கவனத்திலே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு குடிநீர் வழங்குகின்ற ஏற்பாட்டை துரிதப்படுத்தவேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் விடுக்கிறேன்.

இன்னொரு பிரச்சினையையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். குடிநீர் வழங்கப்படாமலேயே புதிய குடியிருப்புப் பகுதிகளுக்கு எல்லாம் கடந்த 10 ஆண்டுகளுக்கான குடிநீர் கட்டணம், வரி செலுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கை குடிநீர் வடிகால் வாரியத்தாலே வைக்கப்பட்டிருக்கிறது. மெட்ரோ வாட்டராலே வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும், அந்த 10 ஆண்டுகளுக்கான நிலுவையை ஒரேயடியாக செலுத்தினால் தான் அவர்களுக்கு குடிநீர் வழங்கப்படும், அங்கேயிருந்து கழிவு நீர் அகற்றுவதற்கான ஏற்பாடுகளும் அவர்களுக்குச் செய்து தரப்படும் என்கின்ற நிபந்தனைகளெல்லாம் விதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இங்கே பல குடியிருப்புகளிலே, பல மாடிக் கட்டிடங்களெல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் என்று இருக்கின்றன. பல மாடிக் கட்டிடங்கள் இருக்கிற இடங்களிலே ஒரே சம்ப், நீர்த் தொட்டியின் மூலம் சப்ளை செய்தாலும்கூட ஒவ்வொரு அடுக்கு வீட்டிலே இருக்கிறவர்கள் அதற்காக, தனியாக கட்டணம் செலுத்தவேண்டுமென்கிற ஏற்பாடெல்லாம் இருக்கிறது. இவற்றையெல்லாம் களைந்து இந்தக் கூடுதல் வரியைப் பெற்று குடிநீர் வசதியை அதிகரிக்கிறபொழுது சென்னை மாநகராட்சியிலே மட்டுமல்லாமல் புறநகர்பகுதிகளிலேயும் குடிநீர் வழங்குகின்ற ஏற்பாடுகளை முறைப்படுத்துவதோடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மிகக் கடுமையான நெருக்கடியையும் தட்டுப்பாட்டையும் போக்குகிற வகையிலே அரசு செயல்படவேண்டுமென்று வலியுறுத்தி நான் அமைகிறேன்.

1989 நவம்பர் 1]

* திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 சதவீதம் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்வது நிச்சயமாக விலைவாசியை ஏற்றும் என்கின்ற நிலைமையில் மாற்று கருத்து இருக்க முடியாது. விலைவாசி ஏறிவிட்டால் அதற்கு மத்திய அரசுதான் பொறுப்பு என்று சொல்வதும் தங்களுக்கு வசதியான முறையிலே, தமிழகத்தினுடைய. ஒரு மாநிலத்தினுடைய சில பிரச்சினைகளுக்காக வரியை ஏற்றி விடுவதும் நடந்துகொண்டிருக்கிற பிரச்சினை. 5 சதவீதம் டாக்ஸ் என்று சொன்னால் நிச்சயமாக நகரப் பகுதிகளிலே வாழ்கின்ற, சென்னை நகரத்திலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான எல்லா பொருட்களினுடைய விலையும் ஏறத்தான் செய்யும். விலை ஏறிவிட்டால், "பார், மத்திய அரசை" என்கிறார்கள். இது சென்டிரல் கவர்ன்மென்டினுடைய ராங் பாலிசி என்று பல்வேறு இடங்களிலே, பல அரசியல் கட்சிகள் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். அதற்குப் பொறுப்பு நம்முடைய மாநில அரசுதான். பழியை ஏற்க தாங்கள் தயாராக இல்லை. தமிழகத்திற்கும், குறிப்பாக, சென்னை மாநகரத்திற்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தாக வேண்டும்.

(12-35)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவினால் இந்தப் பிரச்சினையே வராது. எனவே தாங்கள் முயற்சி செய்து, தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்ற உதவினால் இந்த வரி போட வேண்டிய அவசியம் இருக்காது.

திரு. மா. சுந்தரதாஸ் : பணம் வாங்கவேண்டியதெல்லாம் மாநில அரசின் பொறுப்பு. எங்களுடைய பொறுப்ப அல்ல. ஆகவே நான் கேட்பது இப்போது குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நிச்சயமாக நம்முடைய சென்னை மாநகரம் கஷ்டப்படுகிறது. அதற்கு பட்ஜெட்டில் பணத்தை ஒதுக்கி பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். தமிழ்நாட்டிலும் சென்னை மாநகரத்திலும் விற்பனை வரியைப் போட்டு விலைவாசியை ஏற்றிவிட்டால் அது நிச்சயமாக அரசையும், பொதுமக்களையும் பாதிக்கத்தான் செய்யும். ஆகவே தண்ணீர் என்ற பெயரில் 5 சதவீதம் டாக்ஸ் போடுவது சரியானதாக இருக்காது, என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட பகுதி

மக்களின் தண்ணீர் வசதிக்காக தமிழ்நாட்டு மக்களிடமிருந்து டாக்ஸ் வசூலிப்பது நிச்சயமாக நன்றாக இருக்காது. இதற்கு ஒரு மாஸ்டர் பிளான் தயார் செய்து மக்களுடைய தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யவேண்டும். அதற்காக 5 சதவீத வரியைக் கூட்டி மக்களுக்கு வரிச்சுமையை ஏற்றுவது சரியான தாக இல்லை என்று சொல்லி, எம்.எல்.ஏ., ஹாஸ்டலிலும் தண்ணீர் இல்லை என்று சபாநாயகர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையில் குளிப்பதற்குத் தண்ணீர் இருந்ததா, இல்லை குளிக்காமலேயே வந்து விட்டீர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னுள்ள தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்டத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டம் 70/89 திருத்தச் சட்டமானது 1971-ம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டமானது 1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின்படி சிறப்புத் திட்ட வரியில் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் தனி நிலை நகராட்சிகளில் எல்லாம், பத்து சதவீதம் என்ற நிலையிலும் மற்ற பகுதிகளில் 8 சதவீதம் என்ற வகையிலும் ஒற்றை மேல் வரியை 1989-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் விதிப்பதற்கு வகை செய்கிறது. இதற்கிடையில், தெலுங்கு கங்கைத் திட்டத்தை அமலாக்குவதற்கு, 1989—90-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில்—ஏற்கெனவே இந்த அரசு அளித்த ரூ. 30 கோடி தவிர—மேலும் 30 கோடி ரூபாய் ஆந்திரப் பிரதேச அரசுக்குக் கொடுக்கவேண்டியதற்காகத் திரட்டும் பொருட்டும், அரசு விற்பனை வரி மீது கூடுதல் மிகை வரி விதிக்கலாம் என்பது விதியாகும். சென்னை நகரில் குடிநீர் வழங்குதலை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் வகையில் சென்னை மாநகராட்சியிலும் சென்னை மாநகராட்சி வெளி எல்லை ஓரத்திலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளாகவும் விற்பனை வரியின் மீது 100 க்கு 5 சதவீதம் கூடுதல் மேல் வரி விதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதைச்

1989 நவம்பர் 1] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

செயல்படுத்துவதற்காக ஏற்கெனவே விற்பனை வரி, மேல் வரி 2 ஆம் திருத்த அவசரச் சட்டம் ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. 1—7—1989-ந் தேதி முதல் இந்த சட்டம் வெளியிடப்பட்டது. வரி விதிப்பு 1—7—1989 முதல் அமலுக்கு வந்துள்ளது. நிதி ஆதாரத்தைத் திரட்டுவதற்குக் கொண்டு வரப்பட்ட சட்டமே தவிர புதிய வரி அல்ல.

மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் தண்ணீர் வரி என்று சொன்னார்கள். தண்ணீர் வரி அல்ல. குடிநீர்த் திட்டத்திற்கு நிதியாதாரங்களைத் திரட்ட வரியே தவிர தண்ணீர் வரி அல்ல. விற்பனை வரி மீது விதிக்கிற அடிஷனல் சர்சார்ஜ் தவிர தண்ணீர் வரி அல்ல என்பதை அவருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தண்ணீர் வரி என்று நான் குறிப்பிடவில்லை. தண்ணீர் வழங்குவதற்காக தேவைப்படுகின்ற நிதி ஆதாரத்திற்காகப் போடப்படுகின்ற மேல் வரி என்று தெளிவாக குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(12-40)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மிகத் தெளிவாக என்று அவர்கள் சொன்னதற்காக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் இது போன்ற திட்டத்தை கோவை, திருச்சி, மதுரை போன்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்று ஆலோசனை சொல்லி இருக்கிறார்கள். அந்த ஆலோசனைப்படி தேவைப்பட்டால் விஸ்தரிக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஆனால் இப்போது இருக்கின்ற பிரச்சினை சென்னைமாநகரின் குடிநீர்ப்பிரச்சினையைப் போக்குவது குறித்தது. பல ஆண்டுக்காலமாக சென்னைமாநகரின் குடிநீர்ப்பிரச்சினையைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏற்கெனவே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த போதும் கூட வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அரசியல் காரணத்தால் அது கைவிடப்பட்டது. ஏற்கெனவே இருந்த அரசு எடுத்துக்

கொண்ட முயற்சியின் காரணமாக தெலுங்கு கங்கைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும் அந்தத் திட்டத்திற்கான நிதியுதவிகளைச் செய்யாத காரணத்தால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிய வில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்கள் திரு. துரைமுருகன் அவர்களும், திரு. பொன்முடி அவர்களும் நேராகச் சென்று பார்த்திருக்கிறார்கள். வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக தெலுங்கு-கங்கைத் திட்டம் நிறைவேறுவதற்கு நல்ல வாய்ப்பு அமையும் என்று கருதி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொன் னார்கள். வீராணம் திட்டமானது முந்தைய அரசினுடைய அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். மீண்டும் நீங்களே பொறுப்புக்கு வந்திருக் கிறீர்கள். ஏன் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதுமட்டுமல்ல ; சமீபத்தில் பத்திரிகையில் வந்திருக்கிறது. சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருகிற கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தில் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. திரு. என். டி. ராமராவ் அரசினுடைய தவறான கொள்கையின் காரண மாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்களே. அதற்கு அரசின் மூலமாக என்ன பதில் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, தெலுங்கு-கங்கைத் திட்டம் தயாரிப்பதில் எந்தவிதமான இடர்பாடும் கிடையாது. சென்னை நகருக்குக் குடிநீர் நிச்சயமாக வரும். அத்திட்டத்திற்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டால் இந்தத் திட்டம் நிறை வேற்றப்பட்டு சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டுவரப்படும். வீராணம் திட்டம் பற்றிச் சொன்னார்கள். அது 'டெக்னிக்கலி ஃபீஸிபிள்' என்று அன்றைக்கு அகர்வால் தலைமையிலே நியமிக்கப்பட்ட கமிட்டி கூறி இருக்கிறது. அதற்குப் பிறகு

வந்த அரசு அதை நிறைவேற்றாத காரணம் குறித்தெல்லாம் நான் விவரிக்க விரும்பவில்லை. அரசியல் காரணங்களால்தான் அது நிறைவேற்றப்படவில்லை. அதை நிறைவேற்றியிருந்தால் இப்போது குடிநீர்ப் பிரச்சினைகூட தீர்ந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். இப்போது தெலுங்கு-கங்கைத் திட்டத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அது சிறப்பாக நடைபெறும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தண்ணீர் கொண்டுவருவதற்காகத்தான் இந்த மேல்வரி விதிப்பு என்று சட்ட அமைச்சர் அவர்களும் சொன்னார்கள்; இந்தச் சட்டமுன்வடிவும் தெரிவிக்கிறது. தெலுங்கு-கங்கைத் திட்டம் வரவேண்டும்; வரும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. இருந்தாலும் இப்போது போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தாலே 30, 40 கிலோ மீட்டர் பக்கத்திலே இருக்கின்ற புலிக்கட்டேரியிலிருந்து—சுவர்ணமுகி, ஆரணி மற்றும் ஒரு நதி ஆக மூன்று நதிகள் அதிலே கலக்கின்றன—மீனவர்கள் பாதிக்கப்படாத வகையில் தண்ணீர் கொண்டு வருகிற திட்டத்தை நிறைவேற்ற முடியும். அதைப்போலே ஓகையன் மதகு என்று திருவான்மியூருக்கு அடுத்தபடியாக இருக்கிறது. அந்த மதகைச் சீர்படுத்தினால் தண்ணீர் கொண்டுவர முடியும். அந்தத் தண்ணீரைக் கொண்டுவருவதற்கு, வீராணம் ஏரித்திட்டத்திற்காகத் தயார் செய்த குழாய்களே போதுமானது என்று மூர்த்தி என்று சொல்கிற அந்தத் துறையிலே உள்ள ஒருவர் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு திட்டத்தைத் தந்தார். நான் அதை முன்பிருந்த அரசிடம் கொடுத்தேன். இப்போதிருக்கிற அரசிடமும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். 8 கோடி ரூபாய் முதல் 10 கோடி ரூபாய் வரையில் செலவிட்டால் நிறைய தண்ணீர் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே ஓகையன் மதகு திட்டத்தையும், மீனவர்கள் பாதிக்கப்படாத வண்ணம் புலிக்கட்டேரி திட்டத்தையும் நிறைவேற்றுவது குறித்து பரிசீலிக்கப்படுமா என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அதாவது இந்தப் பணம் வருகிற காரணத்தால்—10 கோடி ரூபாய் செலவிட்டால் தண்ணீர் கிடைக்கும், எவ்வளவு தண்ணீர் கிடைத்தாலும் தண்ணீர் தேவை இருக்கின்ற காரணத்தால்—இதைப் பயன்படுத்திக்கொண்டு அந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று உங்கள் முன்னால் சமர்ப்பித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னால் இருக்கின்ற பிரச்சினை தெலுங்கு-கங்கைத் திட்டம் பற்றியது. ஆனால் திரு. குமரி அனந்தன் அவர்கள் வேறு சில திட்டங்கள் பற்றிச் சொல்கிறார்கள். அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. எனவே நான் விளக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானம் பேரவை யின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

(12-45)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

1989 நவம்பர் 1]

6. அறிவிப்பு.

சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1989) பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. (ii) சட்ட முன்வடிவுகள் (ஆய்வு)—தொடர்ச்சி.

(இ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவின் மீது விவாதம் தேவையிருக்காது என்று கருதுகிறேன். காரணம் எதிர்க் கட்சித் தலைவருக்கும், முதலமைச்சரின் பாராளுமன்றச் செயலாளருக்கும், மற்றும் சட்டமன்ற உறுப் பினர்களுக்கும் அலவன்ஸ் அதிகப்படுத்துவது சம்பந்தமான சட்ட முன்வடிவு ஆகும் இது. எனவே, விவாதமின்றி இதனை ஏகமன தாக அனைவரும் சேர்ந்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை சபாநாயகர் அவர்கள், முதலமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியவர்களுக்கெல்லாம் 200 ரூபாய் அதிகரிப்பு வழங்குவதற்காக இச்சட்டமுன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்

* 31—10—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசி தழில் வெளியிடப்பெற்றுள்ளது.

6. அறிவிப்பு.

சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1989) பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. (ii) சட்ட முன்வடிவுகள் (ஆய்வு)—தொடர்ச்சி.

(இ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவின் மீது விவாதம் தேவையிருக்காது என்று கருதுகிறேன். காரணம் எதிர்க் கட்சித் தலைவருக்கும், முதலமைச்சரின் பாராளுமன்றச் செயலாளருக்கும், மற்றும் சட்டமன்ற உறுப் பினர்களுக்கும் அலவன்ஸ் அதிகப்படுத்துவது சம்பந்தமான சட்ட முன்வடிவு ஆகும் இது. எனவே, விவாதமின்றி இதனை ஏகமன தாக அனைவரும் சேர்ந்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை சபாநாயகர் அவர்கள், முதலமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியவர்களுக்கெல்லாம் 200 ரூபாய் அதிகரிப்பு வழங்குவதற்காக இச்சட்டமுன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்

* 31—10—1989 ஆம் தேதியிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.**

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 நவம்பர் 1

டிருக்கிறது. நான் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோபத்திற்கும் ஆளாக விரும்ப வில்லை. ஆனால் எதிர்க் கட்சித் தலைவரின் சார்பிலே நேற்றைய மற்றும் இன்றைய காலைப் பத்திரிகைகளில் எல்லாம் வந்த ஒரு செய்தியைப் பார்த்தேன். அதாவது எதிர்க் கட்சித் தலைவருக்கு 200 ரூபாய் சம்பள அதிகரிப்பு என்று அநேகமாக எல்லா பத்திரிகைகளிலும் செய்தி வந்திருந்தது. எதிர்க் கட்சித் தலைவர் கேட்டு, அவருக்காக இந்த 200 ரூபாய் அதிகரிப்பது மாதிரியும், அதற்காக இச்சட்டமுன்வடிவு கொண்டுவரப்படுவது போலும் பத்திரிகைகளில் செய்தி வந்தது. எதிர்க் கட்சித் தலைவரைப் பொறுத்தவரையில் அவர்கள் ஏற்கெனவே சம்பளம் பெற்றுக்கொள்வதில்லை. அரசின் சார்பாக வழங்கப்படுகிற குடியிருப்பதற்கான வீட்டு வாடகையையும் அவர்கள் பெற்றுக் கொள்வதில்லை. காரையும் அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. எனவே, இந்த 200 ரூபாய் உயர்வையும் அவர்கள் பெற்றுக் கொள்ளப்போவதில்லை. இந்த அலவன்ஸ் உயர்வால் எதிர்க் கட்சித் தலைவருக்கு எந்த நன்மையும் இல்லை. அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளப்போவதுமில்லை. உங்களுக்காக, துணை சபாநாயகருக்கு உதவி செய்வதற்காக, முதலமைச்சரின் பாராளு மன்ற செயலாளருக்கு உதவி செய்வதற்காக கொண்டு வந்தி ருக்கிற இந்த சட்டமுன்வடிவை எதிர்க் கட்சித் தலைவருக்கு கொண்டு வந்திருப்பதை போல ஒரு உணர்வு பத்திரிகைகளில் வந்ததன் காரணமாக அதை நான் மறுத்து எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் சார்பிலே அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்ற கருத்தை நான் இங்கே தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்ப்பு அரசினருக்கா அல்லது பத்திரிகை நிருபர்களுக்கா என்பதை உறுப்பினர் தெளிவு படுத்த வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும் பத்திரிகைகளுக்கும் சேர்த்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் அதைத் தனியாக கவனிக்க வேண்டும்.

1989 நவம்பர் 1]

* **திரு. ஆர். அண்ணாநம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித் தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு ஏற்படுவதற்கு முன்னாலேயே, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் 'சொல்வதைச் செய் வோம், செய்வதைச் சொல்வோம்' என்கிற வாசகத்துடன் கூடிய உறுதிமொழியை அளித்தது. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குவோம் என்று அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து இங்கே புதிய சம்பள விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. புதிய சம்பள விகிதங்கள் அறிவிக்கப்பட்டாலும் அதிலே பல குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் யாரும் மறுப் பதற்கில்லை. அதுபோல பல்வேறு வித்தியாசங்கள், இடர் பாடுகள் பல்வேறு தரப்பட்டவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது என்பதையும் யாரும் மறுப்பதற்கில்லை. குறிப்பாக சொல்ல வேண்டுமானால் கோவையைச் சேர்ந்த சிறப்பு அங்காடியில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும் அத்தகைய சம்பளம் வழங்கப்பட்டது, என்றாலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இங்குள்ள சட்டத்தை ஒட்டியதா ?

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தை ஒட்டியே பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்குள்ள சட்டத்திற்குட் பட்டு மட்டும் சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த ஊதிய விகிதங்கள் அவர்களுக்கு அமுல்படுத்தப்பட்டாலும் இன்னும் அவர்கள் ஒப்பந்த அடிப் படையிலேயே கருதப்படுகிறார்கள். ஆகவே இதையும் அரசு கவனித்து அந்த ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(12-50)

அதுபோல இன்றைக்கு 63 பொது நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றிலே 47 பொது நிறுவனங்கள் நஷ்டத்திலே இயங்குகின்றன என்பதால் 17 நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களை மட்டும் அரசு ஊழியர்களாகக் கருதி அவர்களுக்கு மட்டும் அரசு ஊழியர்களுக்கு தரப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அதேநேரத்திலே பொதுத்துறை நிறுவனங்களிலும், மற்றும் பல நிறுவனங்களிலும் உள்ள ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், மின்சார வாரியம், போக்குவரத்துத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக செய்திக்கு வந்தால் அனுமதிக்கப்படும். இப்போது பேசுவது சட்ட முன்வடிவில். எனவே பொதுவாகப் பேசுவது கூடாது.

திரு. கோ. வீரையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டு இருப்பது இந்தச் சம்பளம் வழங்கல் சட்டத் திருத்தம் சம்பந்தமாகவா? அல்லது ஐந்தாவது ஊதியக் கமிஷனுடைய பரிந்துரையை அமல் நடத்தியது சம்பந்தமாக விவாதம் நடக்கிறதா என்பதைத் தெளிவுபடுத்திவிட்டால் நாங்கள் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்பே நான் அதற்கு விடையும் சொல்லியிருக்கிறேன். தடையும் விதித்து இருக்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சம்பளங்கள் பற்றித்தான் சொல்கிறேன். அதற்குச் சில உதாரணங்களைச் சொன்னேன். வேறு மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லவில்லை. எனவே சம்பளங்கள் ஒரே சீராக, அனைத்து ஊழியர்களுக்கும் ஆக்கப்படவேண்டுமென்ற வேண்டுகோளை விடுவதற்காக இதைச் சொன்னேன். எனவே பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களை அரசு ஊழியர்களாகக் கருதி அவர்களுக்கும் இணையாகச் சம்பளம் வழங்கவேண்டும்

1989 நவம்பர் 1] [திரு. ஆர். அண்ணாநம்பி]

என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் இந்த ஊதியக்குழு . . . (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்ணா உங்களை நம்பித்தான் உட்காரச் சொல்கிறேன். (சிரிப்பு)

திரு. ஆர். அண்ணாநம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, சொல்கிற கருத்தை ஒரே வார்த்தையிலேயே முடித்துக்கொள்கிறேன். இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசை ஏற்று தி.மு.க. அரசு நிறைவேற்றியதுபோல், 3 வது, 4 வது ஊதியக் குழுக்களின் சிபாரிசுகளை ஏற்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசு நிறைவேற்றியதுபோல் ஐந்தாவது ஊதியக் குழுவின் சிபாரிசை ஏற்று இந்த பொதுத்துறையிலே இருக்கின்ற நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் மற்ற ஊழியர்களுக்குச் சமமாக ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வார்த்தை என்பதற்கு இதுதான் பொருளா?

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் ஆதரித்தாலும், எதிர்த்தாலும் இது நிறைவேறப் போகிறது. ஆனால் அதே நேரத்தில் இந்தச் சட்ட முன்வடிவின் அடிப்படையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைவேறப் போகிறது என்று உறுதியாகத் தெரிந்துகொண்ட பிறகும் ஏன் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்க வேண்டும். (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலே நான் இந்தச் சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டும் என்று பேசினேன். அதற்காக 200 ரூபாய் அதிகப்படுத்தி இந்தச் சட்டமுன்வடிவு இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற ஒரு இக்கட்டான அவலநிலையை, கஷ்டத்தை இந்த அரசு உணர

வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு வகையான கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம். பேரவையின் தலைவர் அவர்களும் அனுபவித்துக்கொண்டு இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அமைச்சர்களும் இங்கே அனுபவித்துக்கொண்டு இருப்பார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். பல்வேறு துறைகளிலே இருப்பவர்களுக்கெல்லாம் உயர்ந்த சம்பளங்களை இங்கே நீங்கள் வழங்கிக் கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் வழங்கவில்லை. தற்போது சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்ற நாங்கள் எல்லாம் இளைஞர்கள். ஒருசில நண்பர்களைத் தவிர எல்லோரும் இளைஞர்கள். நாங்கள் தூய்மையானவர்கள், நல்லவர்கள், நாணயம் மிக்கவர்கள், என்றெல்லாம் பாராட்டுகிறீர்கள். அந்த வகையிலே சிறப்பான முறையிலே எங்கள் தொகுதிகளிலே நாங்கள் வேலை செய்வதற்கு எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தருவதற்கு இந்தச் சம்பளம் போதாது. நிரம்பச் சம்பளம் தரவேண்டும் என்று நான் உங்களைப் பணிவன்போடு வேண்டி, விரும்பி கேட்டுக் கொள்வதோடு சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்துபோனால் ஒரு கணிசமான தொகையை நீங்கள் வழங்க வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் உடன்பிறப்பு திரு. எட்டியப்பன் அவர்கள் இறந்தபிறகு அந்தக் குடும்பம் எப்படித் தத்தளித்துக் கொண்டு இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். அதே நேரத்தில் மக்களுக்காக அல்லும், பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிற நாங்கள் திடீரென்று இறந்துவிட்டால்—நான் ஏன் மற்றவர்களைச் சொல்ல வேண்டும், இந்தச் சிங்காரமே இறந்துவிட்டால் ஒரு அனுதாபத் தீர்மானத்தைப் போட்டு இங்கே ஒரு நாள் அவையை ஒத்திவைத்துவிட்டு போய் விடுவோம்.

(12-55)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சிங்காரம் அவர்கள் நீண்ட நாள் வாழவேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன்.

1989 நவம்பர் 1]

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு நன்றி. நிச்சயமாக வாழ்வோம். ஆனால் யார் எப்போது இருப்பார், யார் எப்போது போவார் என்பது யாருக்கும் தெரியாது. அது ஆண்டவனுக்குத் தான் தெரியும். அதே நேரத்தில் இங்கே இருக்கும்போது எங்களால் முடிந்த பணியை அதிகபட்சம் செய்ய வேண்டும். நண்பர் எட்டியப்பன் மறைந்த பிறகு அந்தக் குடும்பம் எப்படி இருக்கிறது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் ஒரு சாதாரண ஏழைத் தொண்டன். என்னைப்போல நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் இந்த அவையிலே இருக்கிறார்கள். ஆகவே, நாங்கள் திடீரென்று இறந்துவிட்டால் ஒரு அனுதாபத் தீர்மானத்தை மட்டும் போட்டு முடித்துவிட்டால் அது எங்களுக்கு பெருமை சேர்க்காது; எங்கள் குடும்பத்தை வாழவைக்காது.

நாங்கள் எல்லாம் நேர்மையாக இருக்கலாம்; நாணயமாக இருக்கலாம்; ஒழுக்கமாக இருக்கலாம்; நீதியாக இருக்கலாம்; தூய்மையாக இருக்கலாம்; அந்த அளவிலே பணி செய்யலாம். சாப்பாட்டிற்கு வழியில்லை என்றாலும் பட்டினிக் கிடந்து பணி செய்யலாம். ஆனால் எங்கள் மறைவுக்குப் பிறகு எங்கள் குடும்பத்தை யார் கவனிப்பது? அனுதாபத் தீர்மானத்தை மட்டும் போட்டுவிட்டால் போதாது. ஆகவே, இறந்த பிறகு எங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி, எங்கள் குடும்பத்திற்கு வழங்கி, வாழவைக்க வேண்டுமென்ற சட்டத்தை நீங்கள் எல்லோரும் ஆமோதித்து, நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஒரு விளக்கத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்த விவாதத்திலே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவருக்குத் தந்த 200 ரூபாய் சம்பள உயர்வை அவர்கள் பெற்றுக்கொள்வதாக இல்லை என்று அறிவித்திருப்பதாகச் சொன்னார்கள். * *

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, 'ஸ்மூத்' ஆக போய்க்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அனாவசியமான பிரச்சினைகள் வேண்டாம். * * எனக்கு அனுமதி கொடுத்தால் நான் திருப்பிப் பேசுவேன். [* *],

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மோகன், இதில் ஏதாவது Point of order இருக்கிறதா ?

திரு. இரா. மோகன் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் என்னுடைய பேச்சைக் கேட்டபின் இறுதியில் ஏதாவது சொன்னால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேறு செய்திக்கு வாருங்கள்.

திரு. இரா. மோகன் : * *

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை எல்லாம் அவைக் குறிப்பில் இடம் பெற்றால், எனக்கும் பேசுவதற்கு வாய்ப்புத் தரவேண்டும். இந்த பில்லை ஒட்டிப் பேசுவதாக இருந்தால் பேசட்டும். 200 ரூபாய் வேண்டுமா, வேண்டாமா என்று கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் கவனிக்க வேண்டும். 200 ரூபாய் ஊதிய உயர்வை எதிர்க்கட்சித் தலைவர் பெற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார். அது தொடர்பாக "Point of order" -க்கு இடமில்லை என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே, இந்தச் சட்டமன்றத்தில் அதை ஒரு பிரச்சினை ஆக்காமல், திரு. மோகன் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியை மட்டும் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு 'வெரி சிம்பிள் லெஜிஸ்லேஷன்'. இந்தச் சட்ட முன்வடிவின்மீது இவ்வளவு விவாதம் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக ஊதிய உயர்வு அல்ல; 'அலவன்ஸ்' தான் உயர்த்தப்படுகிறது. சம்பள விகிதங்களை நாம் பார்க்கும்போது, 1—4—1984-ல் அமைச்சர்கள் மற்றும் பேரவைத் தலைவருக்கு மாத ஊதியம் 1,700 ரூபாய். 1—7—1985-ல் இந்த மாத ஊதியம் 2,100 ரூபாய் உயர்த்தப்

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 நவம்பர் 1] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

பட்டது. 1—6—1989-ல் கூட அமைச்சர்களுக்கும் பேரவைத் தலைவருக்கும் 2,100 ரூபாய்தான் மாத ஊதியம் கொடுக்கப் படுகிறது.

பேரவைத் துணைத் தலைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் 1—4—1984-ல் 1,400 ரூபாய் மாத ஊதியம். 1—7—1985-ல் 1,700 ரூபாய் மாத ஊதியம். 1—6—1989 முதல் பேரவைத் துணைத் தலைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் மாத ஊதியம் 1,900 ரூபாய் என்று இப்போது அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அமைச்சரின் பேரவைச் செயலர் (Parliamentary Secretary) முதலில் கிடையாது. இப்போது அவருக்கு ஊதியம் 11—2—1989 முதல் 1,700 ரூபாயாக இருந்தது. இப்போது 1—6—1989 முதல் 1,900 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கக்கூடிய படி, ஊதியம் முதலியன—மாத ஊதியம் 1—4—1984-ல் 500 ரூபாய் என்று இருந்தது.

(13-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் அவையின் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஈட்டுப்படி 400 ரூபாய் ; தொலை பேசிப் படி 350 ரூபாய் ; ஆக 1—4—1984-ல் ஒரு எம்.எல்.ஏ.-க்கு 1,250 ரூபாய். 1—7—1985-ல் மாத ஊதியம் 600 ரூபாய் ; ஈட்டுப் படி 500 ரூபாய் ; தொலை பேசிப் படி 450 ரூபாய் ; ஆக மொத்தம் 1,550 ரூபாய். 1—6—1989-ல் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம்—மாத ஊதியம் 600 ரூபாய் ; ஈட்டுப்படி 700 ரூபாய் ; தொலைபேசிப் படி 450 ரூபாய். ஆக 1,750 ரூபாய். 200 ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, நான் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்கள்கூட இந்த ஊதியத்தைப் பெறாமல் விட்டு விடுவாரோ என்று நான் எதிர்பார்த்தேன். அவருடைய தலைவரைப் பின்பற்றி, துணைத் தலைவரும் ஊதியம் வாங்காமல் இருப்பாரோ என்று எதிர்பார்த்தேன். ஆனால் சொல்லவில்லை.

[1989 நவம்பர் 1

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் நானும் வாங்க வேண்டாமென்று விரும்பினால், வாங்காமல் இருக்கத் தயார்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் வாங்க வேண்டாமென்று சொல்லமாட்டேன். ஏனென்றால் எனக்குத் தெரியும் கஷ்டம். நான் கஷ்டத்தை உணர்ந்தவன். அதனால் வாங்க வேண்டாமென்று நான் சொல்லமாட்டேன். அது அவர்களுடைய முடிவே தவிர என்னுடைய முடிவல்ல. எனவே உறுப்பினர்களுக்காக ஒட்டுமொத்தமாகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை என்று சொல்லி, பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் இருக்கின்ற கஷ்டங்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கிறது, என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் படி 1—6—1989 முதல் அமலுக்கு வருவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எல்லோருக்கும் 11—2—1989 முதல் அமுலுக்கு வந்து, இது மாத்திரம் ஏன் 1—6—1989 முதல் அமுலுக்கு வருகிறது? இதையும் 11—2—1989 முதல் அமுலுக்குக் கொண்டு வந்தால் என்ன என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்களுக்குத் தெரியாத சட்டமா எனக்குத் தெரியப் போகிறது? அவருக்குத் தெரியும். ஆனால் கேட்க வேண்டுமென்று, கேட்டிருக்கிறார்கள். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட பிறகு, அதைச் சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் கேட்ட கேள்வி மிகவும் நியாயமான கேள்வி. அதற்கு ரெட்ராஸ்பக்டிவ் எபக்ட்

1989 நவம்பர் 1] [திரு. ஆர். சிங்காரம்]

கொடுக்க வேண்டும். ஆரம்பத்திலிருந்துதான் கொடுக்க வேண்டும். இன்னும் 6 மாதம் கழித்து அல்லது 5 வருடங்கள் கழித்து சட்டம் போட்டால், அது ஒரு காரணமா? அறிவிப்பை முன்னாலேயே கொடுத்திருக்கிறீர்கள். இப்போது 8 மாதம் கழித்து கொடுப்பது நியாயமல்ல. அதை ஆரம்பத்திலிருந்தே கொடுங்கள்.

இரண்டாவது, சட்ட மன்ற உறுப்பினர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. தயவு செய்து அதைப் பரிசீலனை செய்யுங்கள். சட்டமன்ற உறுப்பினர்தானா நாட்டிலே கிடைத்தான், காரிலே ஆக்சிடன்டாகிச் சாவதற்கு. ஆகவே இதனை சட்ட அமைச்சர் அவர்கள் நன்றாகப் பரிசீலனை செய்து, சபாநாயகர் அவர்கள் இறந்தாலும் சரி, அமைச்சர்கள் இறந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்தாலும் சரி, ஒரு இலட்சம் ரூபாய் கட்டாயம் அவர்களுடைய குடும்பத்திற்குக் கொடுக்கும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் மிகவும் தாராளமாக இந்தத் திட்டத்தை அனைவருக்கும் விரிவடையச் செய்திருக்கிறார்கள். அது பேரவைத் தலைவர் வரைக்கும் வந்திருக்கிறது. அவருடைய கோரிக்கையை அனைவரும் பரிசீலிப்பார்கள். ஆனால் உயிரோடு இருக்கும்போது பரிசீலிப்பார்களா என்பது சந்தேகம். என்றாலும், உங்கள் கோரிக்கையைக் கவனித்து, வருங்காலத்தில் மிகப் பெரிய தொகையை, நீங்கள் கேட்டதைவிட அதிகமாக, பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கு எல்லோரும் முயல்வார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்தச் சட்டமுன்வடிவின் மீதான விவாதம் முடிவுற்றதென்பதைத் தெவித்துக்கொள்கிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 35/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

[பேரவைத் தலைவர்] [1989 நவம்பர் 1

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

(13-05)

"29—6—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1989) இப்பேரவை நிராகரிக்கிறது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [1989 நவம்பர் 1

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

“1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

(13-05)

“29—6—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1989) இப்பேரவை நிராகரிக்கிறது.”

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1989 * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானமும், சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரி தொடர்பான இந்தச் சட்ட முன்வடிவில் ஒரு முரண்பாடு காணப்படுகிறது என்பதால் அதைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பெருநகரங்களில் இருக்கிற திரை அரங்கங்களுக்கான வரி 53 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாக இருக்கிறது. ஆனால் நகர எல்லைக்கு அப்பால் இருக்கிற—5 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிற எல்லாத் திரையரங்கங்களும் அதே வரியைத்தான் செலுத்தவேண்டும் என்பது நியாயத்திற்கு முரணாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருநகரங்களில் இருக்கிற திரையரங்குகளில் இருக்கிற இருக்கைகளின் எண்ணிக்கை வேறு, அவர்கள் வசூலிக்கிற கட்டணமும் வேறு. ஆனால் வெளியே இருக்கிற தியேட்டர்களின் நிலைமைகள் வேறு என்பதை அரசு ஆராய்ந்து இதைக் கைவிட்டு, புறநகர்ப் பகுதிகளில் இருக்கிற திரை அரங்குகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். அதோடு வரி பெரும்பாலும் குறைக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அரசு நீண்ட நாட்களாக விளம்பரப்படுத்திக்கொண்டே வந்திருக்கிறது. வரி குறைகிறது என்று சொன்னால், கட்டணம்

* 31—10—1989 ஆம் தேதியிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.**

குறைய வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒரு திரைப்படத்திற்கு வசனம் எழுதியிருப்பது எனக்கு நினைவில் இருக்கிறது. "இன்று சட்டத்தை நீட்டுவோர் அன்று வாட்டத்தைப் போக்கியிருக்க வேண்டும்" என்று அதிலே குறிப்பிடுகிறார். அந்த அடிப்படையில் நான் குறிப்பிட விரும்புகிறேன். வரியைக் குறைக்கிறேன் என்று சொல்லும்போது அதன் காரணமாக கட்டணம் குறைந்திருக்கிறது என்ற நிலைமை வந்தால்தான் மக்கள் வாழ்த்துவார்கள். ஆனால் வரி குறைந்திருக்கிறது, கட்டணம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு இடையிலே என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. இதை நான் சந்தேகமாகச் சொல்லவில்லை. இருந்தாலும் இந்த எண்ணம் மற்றவர்களுக்கு வரக்கூடாது என்ற அடிப்படையில் கூறுகிறேன். இது எந்தவகைப் பொருளாதாரம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்துவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. இந்தப் பொருள் யாருக்கு ஆதாரமாக இருக்கிறதோ என்ற சந்தேகம் வந்துவிடாமல், இதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வரியைக் குறைத்ததைப்போலவே, கட்டணத்தையும் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்து, இந்தச் சட்ட முன்வடிவுக்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அமைகிறேன், வணக்கம், நன்றி.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கேளிக்கை வரி பற்றிய சட்ட முன்வடிவிலே சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக அவர் பொறுப்பேற்ற பிறகு, கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் சினிமா படத் தயாரிப்பாளர்கள், பட விநியோகஸ்தர்கள், திரை அரங்கு உரிமையாளர் ஆகியோரையெல்லாம் அழைத்து ஒரு முத்தரப்பு கூட்டம் போட்டு அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பார்த்து, ஏற்கெனவே இருக்கிற வரியை சீரமைத்ததன் மூலமாக அரசாங்கத்திற்கும் வருவாய் குறையக்கூடாது; அதைப்போன்றே பட விநியோகஸ்தர்களுக்கும் வருவாய் குறையக் கூடாது, திரையரங்கு உரிமையாளர்களுக்கு இருக்கிற சங்கடங்களையும் போக்க வேண்டும் என்று ஆராய்ந்து, இந்த வரிவிதிப்பு முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒன்று.

1989 நவம்பர் 1] [திரு. கோ. பூவராகன்]

குறிப்பாக, வீடியோ படங்கள் எல்லாம் வந்துவிட்ட பிறகு, புதிதாக எடுக்கப்படுகிற படங்கள் நல்ல தரமான படங்களாக இருந்தால், அதிக நாட்கள் ஓடுகின்றன. சில திரையரங்குகளில் அதிக நாட்களுக்கு ஓடுவதில்லை. நல்ல படங்களுக்கு—எனக்கு முன்னால் பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல்—கட்டணங்களை அவர்கள் பார்ப்பதில்லை. ஒரு நபருக்கு இவ்வளவு ரூபாய் கட்டணம் என்றிருக்கிறது. அப்படியும் கட்டணம் 2 ரூபாய் என்றால் ரூ. 5 கூட கொடுத்துப் பார்க்கிறார்கள். சில படங்கள் 100 நாட்கள் ஓடுகின்றன. மூன்று வாரம், நான்கு வாரம், ஒரு மாதம், இரண்டு மாதம் ஆகிற

(13-10)

வரை அதிக அளவில் டிக்கெட்டுகள் வெளியே விற்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு ஒரு முயற்சி எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, சென்னை நகரத்திலே ஒரு புதிய சட்டம் இருக்கிறது. அது, திரையரங்குகளுக்கு வெளியே டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டால் அதைத் தடுத்து அவர்கள் மீது வழக்குப் போடுவதற்கு, தியேட்டர் உரிமத்தை ரத்துச் செய்வதற்கு போலீஸ் கமிஷனர் அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறது. சமீபத்திலே பல நகரங்களிலே தென் மாவட்டங்களிலே திரையரங்குகளில் அதிக எண்ணிக்கையில் டிக்கெட் கொடுத்து ஏராளமானவர்களை நிரப்புகிறார்கள். அதுமட்டுமல்லாமல் டிக்கெட்டுகளின் தொகையையும் கூட்டி விற்கிறார்கள். இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டபோது, அவர்களுக்கு இருக்கின்ற சட்டத்திலே, முழுமையாக திரையரங்குகளை தடை செய்வதற்கில்லை; ஒரு வாரம், இரண்டு வாரங்கள் அந்தக் கொட்டகைகளில் காட்சிகளை நிறுத்த வேண்டுமென்று ஆணையிட்டாலும், திரையரங்கு உரிமையாளர்கள் மேற்கொண்டு நீதிமன்றங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். அந்தக் குறை இருக்கின்றது. முதலமைச்சர் இதையெல்லாம் பார்த்து இது போன்ற திரையரங்குகளில் புதிய படம் வரும்போது அதிக எண்ணிக்கையில் டிக்கெட்டுகளை ஒரே சமயத்தில் நிரப்புவது, ஒரு குறித்த தொகையை வைத்து, அந்தத் தொகையைக் கொடுக்கின்றவர்கள் திரையரங்குகளில் எங்கு வேண்டுமானாலும் உள்ளே போய் அமர்ந்து கொள்ளலாம் என்ற ஒரு நியதி அளித்து உள்ளே அனுப்புவது போன்ற முறைகேடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; அந்த முறைகேட்டைத் தவிர்ப்பதற்கு

ஏதாவது சட்டம் இயற்ற முடியுமா ? அல்லது அங்கு இருக்கிற மாவட்ட காவல் துறை அதிகாரிகளுக்கு ஒரு சட்டம் இயற்று வதன் மூலம் அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகா ரத்தை அவர்களுக்கு வழங்க முடியுமா என்பதை ஆலோசனை செய்து நல்ல முறையிலே, படம் பார்க்கின்றவர்கள் எந்தப் பட மாக இருந்தாலும் திரையரங்குகளில் இருக்கைகளில் நன்றாக அமர்ந்து பார்ப்பதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு கொட்டகையில் ஆயிரம் எண்ணிக்கை இருக்கைகள் இருக்கின்றன என்று சொன்னால் 3 ஆயிரம் டிக்கெட்டுகள் வரை கொடுத்து, அவர்கள் அந்தக் கொட்டகையின் காம்ப்வுண்டுக்குள்ளே எங்கு வேண்டுமானாலும் இருந்து படம் பார்த்துக் கொள்ளலாம் என்ற நிலையிலே அனுப்பிவிடுகிறார்கள். அந்த நிலையை ரத்துச் செய்வதற்கு ஏதாவது செய்ய வேண்டும் அல்லது அதுபற்றி கண்காணிக்க வேண்டும். ஆனால் இப்போது இருக்கிற சட்டத்தில் மாவட்டங்களில் அவ்வாறு செயல்பட முடியாது ; மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, மாவட்ட காவல் துறை அதிகாரிகளுக்கு அந்த அதிகாரம் இல்லை; மாநகராட்சியில் மட்டும்தான் அந்த அதிகாரம் இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிக எண்ணிக்கையில் டிக்கெட்டுகள் விற்கக்கூடாது. அதிக எண்ணிக்கையில் மக்களை திரையரங்கு களின் உள்ளே அனுமதிக்கக் கூடாது. இதைச் சரி செய்வதற்கு புதிய சட்டம் ஏதாவது கொண்டுவர முடியுமா என்று முயற்சிக்க வேண்டும் என்று கேட்டு இந்தத் திருத்தத்தின் மூலம் குறிப்பாக இப்போது கொண்டு வந்திருக்கிற சட்ட அமைப்பின் மூலம் முத் தரப்பினருக்கும் எல்லா சலுகைகளும் ஏற்பட்டிருக்கிறது; எல்லோரும் வரவேற்கின்றார்கள் என்று சொல்லி இந்த சட்டத்தை நான் வரவேற்று முடித்துக்கொள்கின்றேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இங்கு கொண்டு வரப்பட்டு இருக்கிற இந்தச் சட்டச் சம்பந்தமாக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திரைப்படம் என்பது மக்களின் பொழுதுபோக்கு சாதனம் என்பதை நாம் முக்கியமாக அறிவோம். திரைப்படக் கலையும், மற்ற கலைகளும்கூட இத் தகைய மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்கும், விழிப்புணர்வுக்கும்

1989 நவம்பர் 1] [திருமதி பாப்பா உமாநாத்

உதவ வேண்டும் என்பதும் எங்களுடைய கருத்து. பொதுவாக இன்றைக்குத் திரைப்படங்கள் தரம் குறைவாக இருப்பதை நாம் அறிவோம். அதைப்பற்றி வேறு ஒரு சமயம் முடிவு செய்வோம். ஆனால் பொதுவாக மக்களிடம் இன்றைக்கு சினிமா பார்க்கக் கூடிய மோகம் அதிகரித்துக் கொண்டிருப்பதும், திரைப்படங்களில் வரக்கூடிய கே. ஆர். விஜயா ஆதி பராசக்தியாக, ராதா சீதையாக, ஜெயலலிதா பார்வதியாக—இப்படி வரக்கூடிய திரைப்படங்களில் அவர்களை தெய்வமாக நினைத்து படம் பார்ப்பவர்கள் கன்னத்தில் போட்டுக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் தெய்வங்கள் அல்ல என்பதை நாம் அவர்களுக்குக் கூற வேண்டியிருக்கிறது. இதுமாதிரி பல்வேறு விஷயங்களில் ஒரு விழிப் புணர்வை ஏற்படுத்தக்கூடிய ஒரு சாதனமாக சினிமா அமைய வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

இரண்டாவது திரையரங்குகள் இப்போது சுத்தமாக சுகாதாரமாக இல்லை. குறிப்பாக கழிப்பறைகள் சுத்தமாக இருப்பதில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல் குடிப்பதற்கு குடிதண்ணீர் பல திரையரங்குகளில் இருப்பதில்லை. திரையரங்குகள் பலவற்றில் குறிப்பாக கிராமப் புறங்களில் இரவுக் காட்சியோ அல்லது முதல் காட்சி பார்த்து விட்டு இரவில் வரக்கூடியவர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு ஒரு பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது. பல சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. திரையரங்கு உரிமையாளர்கள் அடி ஆட்கள் வைத்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, சில சமயம் சமூக விரோதிகளும் இதில் பங்கு எடுக்கிறார்கள். இதைக் கண்காணித்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது, வரி மோசடி செய்வது பரவலாக இன்றைக்கு இருக்கிறது. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் சொன்னது மாதிரி, நாங்கள் பெட்டிஷன் கமிட்டிக்கு போனபோது, கோவில்பட்டி, தூத்துக்குடி மற்றும் பல பகுதிகளில் 90 சதவீதம் சினிமா தியேட்டர்களில் வெறும் கட்டணம் மட்டும் வாங்கிக்கொண்டு டிக்கெட் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். அப்பொழுது எடுத்துக் கேட்டால் அவர்கள் ஆள் வைத்துக்கொண்டு செய்கிறார்கள். அதுமட்டுமல்ல, அபிமான

நட்சத்திரங்கள் நடிக்கக்கூடிய திரைப்படம் என்றால் இரட்டிப் பாக்கப்படுகிறது. கஷ்டப்பட்டு தியேட்டருக்குக் குடும்பத் தோடு வந்துவிட்டு சினிமா பார்க்க முடியாமல் திரும்பவும் போக விரும்பாமல் பேசாமல் அதிக கட்டணம் கொடுத்து டிக்கெட் வாங்கி பார்த்து விட்டுப் போகிறார்கள். எதிர்ப்பு இருந்தாலும், மனைவியை அழைத்துக்கொண்டு வந்திருப்பார் ஆசையோடு சினிமா பார்க்கலாம் என்று, எனவே திரும்பிப் போக வேண்டா மென்று பார்க்கிறார்கள். ஆகவே, இந்த முறையிலே இருக்கக் கூடிய சூழ்நிலையில் அதில் கறாராக ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அவர் சொன்னதுமாதிரி காவல்துறை அதிகாரி களுக்கு, போய் வெறும் உரிமத்தை ரத்து செய்வேன் என்று சொல்வதன் மூலமாகவும் அல்லது அபராதத் தொகை விதிப்பதன் மூலமாகவும் இதைக் கட்டுப்படுத்திவிட முடியாது. இது ரொம்பவும் ஆழமாக வேரோடிப்போன விஷயம். ஆகவே, திரை யரங்குகளிலேயே டிக்கெட் கிடைக்கக்கூடிய முறையில் ஒரு அதிகாரம் காவல் துறையினருக்கு இந்த விஷயத்தில் தருவது அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தருவது உதவிகாமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே இங்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, திரையரங்குகளில் பரவலாக ஆபாசப் படங்கள் இரவுக் காட்சிகளில் காட்டப்படுவதை நான் ஏற்கனவே குறிப் பிட்டிருக்கிறேன். அப்பொழுது கூட அதைக் கண்காணிக்க ஆட்களை அனுப்பச் சொன்னபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள், போகக் கூடியவர்களும் அனுபவித்து விட்டுத்தான் வெளியே வருகிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, இந்த முறையும் அப்படி நடந்துகொண்டிருக்கிறது. தென் மாவட்டங்களில் அதிகமாக நடந்துகொண்டிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக வரி விகிதம். நகர்ப்புறத்திற்கும் கிராமப் புறத்திற்கும் ஒரே மாதிரி போடப்பட்டிருப்பதாகவும், கிராமப் புறங்களுக்குக் கொஞ்சம் சலுகை தர வேண்டுமென்று சொல்லி

1989 நவம்பர் 1] [திருமதி பாப்பா உமாநாத்]

அந்தத் தியேட்டர் உரிமையாளர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வரியைப் பொறுத்தவரையில் திரையரங்குக்கு 53-ஐ 40 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டணத்தில் முதல் வகுப்புக்கு ஒரு ரூபாய் அல்லது எட்டு அணா என்று இப்படி இரண்டு ரூபாய் ஆனால்கூடப் பரவாயில்லை. ஆனால், சாதாரண மக்கள் அதிகமாகப் போகக்கூடிய மற்ற வகுப்புகளுக்கு உயர்த்தப்பட்ட கட்டணங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பங்குகள் தருவது சம்பந்தமாக 20, 80 என்ற விகிதத்தில் நகராட்சிக்கும், பேரூராட்சிக்கும் தரலாம் என்பது எங்கள் கட்சியினுடைய கருத்து 80 நகராட்சிக்கும், 20 அரசுக்கும் ஏற்றுக் கொள்ளலாம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, குதிரைப் பந்தயம் சம்பந்தமாகச் சொல்ல வேண்டும் என்றால், கோபுர சின்னத்தோடு இன்றைக்குக் கோலாகலமாக நடந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் இந்த ரேஸ் கிளப்பை அரசு ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் அரசு ஊழியர்கள் இன்றைக்கு 12 (1) பிரிவின்படி அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டாலும்கூட அவர்களுக்கு ஊதியக் கமிஷன் சிபார்சுகள் வழங்கப்படவில்லை என்பதையும் 650 தினக் கூலி ஊழியர்கள் இன்றைக்கும் தினசரி 15 ரூபாயைப் பெற்றுத்தான் அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவதற்காக நிதித் துறை செயலாளர், உள்துறைச் செயலாளர், ரேஸ் கிளப் கஸ்டோடியன் ஆகியோர் அடங்கிய ஒரு குழு பரிந்துரை செய்தும்கூட இன்றைக்கும் ஏன் அமலாக்கப்படவில்லை என்பதையும், ரேஸ் கிளப் இயக்குநரும், சேர்மனும் தடையாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை அரசு கவனித்து அந்த ஊழியர்களுடைய பாதுகாப்பக்கும் ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் கொண்டு வந்துள்ள தமிழ்நாடு கேளிக்கைகள் வரி சட்டத் திருத்த மசோதாவின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி

கூறிக் கொள்கிறேன். கடந்த 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத் திருத்த அவசரச் சட்டம் 1989 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கேளிக்கை வரி சட்டத் திருத்த மசோதாவின்படி செக்ஷன் 4, 5 (எ) 5 (பி) ஆகியவைபற்றிய திருத்தம் கவனிக்கத்தக்கது.

செக்ஷன் 4-க்கு ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தம் ஏற்கனவே பெருநகர்ப் பகுதிகளில் உள்ள தியேட்டர்களில் 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் வரை 53 பர்சென்ட் வரி செலுத்தி வந்ததை 40 பர்சென்டாகக் குறைத்து பெரும் சலுகை வழங்குகிறது. செக்ஷன் 5, 5 (பி)-க்கு உள்ள திருத்தம் நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் உள்ள திரையரங்குகளில் 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதிக்கு முன்பு செலுத்தி வந்துள்ள வரியிலிருந்து கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஆனால் செக்ஷன் 5ஏ, 5பி ஆகியவைகளுக்குள்ள திருத்தப்படிக்கு ஐந்து கிலோ மீட்டர் பெரியசல் லிமிட்டில் உள்ள தியேட்டர்களுக்கு செக்ஷன் 5ஏ, 5பி திருத்தம் செய்தபடி பலன் அடைவதற்கில்லை என்று புரோவிசோ (Proviso) ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே செக்ஷன் 5பி-இன்படி காம்பவுண்டிங் வரி செலுத்தி வந்த தமிழ்நாட்டிலுள்ள 753 தியேட்டர்களை இந்த மசோதா பாதிக்கிறது.

அவசரச் சட்டம் 1/83-னால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் ஐம்பது பேர்கள் மட்டும் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். மீதிப் பேர்கள் பல்வேறு காரணங்களுக்காக பயந்து ரிட் மனு தாக்கல் செய்யவில்லை. சட்டத் திருத்த மசோதாவின்படி மேற்படி ஷரத்து பெருநகர்ப் பகுதியிலுள்ள திரையரங்குகளைப் போல நகர்ப்புற எல்லையிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்திலுள்ள திரையரங்குகளுக்கு 40 பர்சென்ட் வரி செலுத்த வேண்டுமென்பது நியாயமற்றது. அதற்கான காரணம் விளங்கவில்லை. பெருநகர்ப் பகுதிகளில் உள்ள திரையரங்குகளில் நுழைவுக் கட்டண விகிதம், இருக்கை எண்ணிக்கை, மொத்த வசூல் ஆகியவை 5 கி.மீ. சுற்று வட்டாரத்திலுள்ள திரையரங்குகளை விட மிகவும் அதிகம். ஓரிரு திரை

யரங்குகளைத் தவிர 5 கி.மீ. சுற்று வட்டாரத்திலுள்ள திரையரங்குகளில் பழைய படங்கள், வெளியான தேதியிலிருந்து சில மாதங்கள்

1989 நவம்பர் 1] [திரு. வெ. இராசு]

அல்லது வாரங்கள் கடந்து தான் திரையிடப்படுகின்றன. இவ்வாறு உள்ள நிலையில் மேற்படி 5 கி.மீ. எல்லைக்குள் உள்ள இரண்டாம் தர மூன்றாம்தர தியேட்டர்களை பெருநகர் எல்லைக்குள் உள்ள முதல் தர தியேட்டர்களோடு ஒப்பிட்டு, நகர்ப்புற தியேட்டர்களைப்போல 5 கி.மீ. எல்லைக்குள் உள்ள தியேட்டர்களுக்கும் நிர்ணயித்து அந்த அளவிற்கு அவர்களும் செலுத்த வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் திருத்தம் நியாயமற்றது. கிராமங்களில் பெரும்பாலும் அதிகப்படியாக புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய திரைப்படங்களே ஓடுகின்றன என்ற காரணத்தால் அவசர அவசரமாக இந்த மசோதாவை பிறப்பித்து இருப்பதற்கு நான் கண்டனம் தெரிவித்து, வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரியிலே குறைவு செய்திருப்பதை வரவேற்கிறோம். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் கூறியதைப் போல நகரப் பகுதிகளுக்குச் சுற்றியிருக்கிற பகுதிகளுக்கும் இதே அளவு டாக்ஸ் போடுவது சரியானதல்ல. நகரப் பகுதிகளுக்குச் சுற்றியிருக்கிற பகுதிகளில் இருக்கிற தியேட்டர்களுக்கு டாக்சை குறைக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

நம் நாட்டில் இன்றைக்கு ஏழை எளிய மக்களும், நடுத்தர பிரிவைச் சார்ந்தவர்களும் தான் சினிமா தியேட்டர்களில் சினிமா பார்க்கப் போகிறார்கள். வசதி படைத்தவர்கள் எல்லாம் வீட்டில் இருந்து வீடியோ படங்களைப் பார்க்கிறார்கள். அதற்கு எந்த வரியும் போட்டதாகத் தெரியவில்லை. ஆம்னி பஸ்களிலும், அரசாங்க பஸ்களிலும் கூட இரண்டு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் வரை வீடியோவிற்காக வசூலிக்கிறார்கள். அதற்கு நம்முடைய அரசு எந்த டாக்சும் போட்டதாகத் தெரியவில்லை. வீட்டிலே வைத்திருக்கிற வீடியோக்களுக்கும் வருடத்திற்கு 100 ரூபாய் என்று டாக்ஸ் விதித்தால் நிச்சயமாக அரசிற்கு அதிகமாக வருமானம் வரும். தியேட்டர்களுக்கு நாம் இன்னும் டாக்சை குறைக்கலாம். இதை ஏன் சொல்கிறேன் என்றால் ஏழை எளிய மக்களும், நடுத்தர மக்களும்தான் சினிமா தியேட்டர்களில் கியூவில் நின்று டிக்கட் வாங்கி சினிமா பார்க்கிறார்கள். ஆகவே அதற்கு வரியை இன்னும் குறைத்துவிட்டு, வசதி படைத்தவர்கள் வீட்டிலிருந்து ஏ.சி. ரூமிலிருந்து பார்க்கிற வீடியோக்களுக்கு டாக்சை அதிகமாக விதித்து, அரசின் வருமானத்தைப் பெருக்குவது சிறப்பாக இருக்கும்.

[திரு. மா. சுந்தரதாஸ்] [1989 நவம்பர் 1

ஆம்னி பஸ்களில் வீடியோவிற்கு 5 ரூபாயிலிருந்து 10 ரூபாய் வரையில் வசூலிக்கிறார்கள். அவர்கள் ஒரு ட்ரிப்பில் 300 ரூபாய் வீடியோவிற்கு என்று பணம் வசூலிக்கிறபோது அரசாங்கம் அவர்களிடம் ஏன் 100 ரூபாய் வசூலிக்கக் கூடாது என்பது தான் என்னுடைய கோரிக்கையாகும். ஏழை மக்கள் தியேட்டர்களில் பார்க்கிற சினிமா படத்திற்கு இன்னும் வரியைக் குறைக்கலாம். குறிப்பாக சினிமா இண்டஸ்ட்ரியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மிகவும் மோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. பல பெரிய தியேட்டர்களை இடித்து ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்டுகிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பல தியேட்டர்கள் மூடுகின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. ஏனென்றால் வீடியோ வந்ததற்குப் பிறகு இன்றைக்கு சினிமா தியேட்டர்களுக்கு மக்கள் அதிகமாகப் போவதில்லை. அதிலும் சனி, ஞாயிறுகளில் டி.வி. சென்டர்களிலும் சினிமா போடுகிறார்கள். அந்த நாட்களில் சினிமா தியேட்டர்களில் கூட்டம் இல்லாமல் இருக்கிற காரணத்தால் அவர்களுடைய வரியை அதிகமாகக் குறைக்க வேண்டும். அரசாங்கத்திற்கு டாக்ஸ் வேண்டுமென்றால் வீடியோவிற்கு டாக்ஸ் போட்டு தங்களுடைய வருமானத்தை ஏற்றிக் கொள்ளலாம் என்று தெரிவித்து, சினிமா தியேட்டர்களின் கேளிக்கை வரியை மேலும் குறைக்க வேண்டுமென்று கேட்டு, வரியை குறைத்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரியை குறைத்தவுடன் இன்றைய தினம் மக்கள் சினிமா கட்டணம் குறையும் என்று எதிர்பார்த்தார்கள். வரி குறைக்கப்பட்டது என்றாலும் கட்டணங்கள் உயர்த்தப்பட்டு விட்டன. நகரப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் சினிமா தான் மக்களின் பொழுதுபோக்காக மாறி தியேட்டர்களில் கூட்டம் நிரம்பி வழிகிற இன்றைய சூழ்நிலையில் சினிமா கட்டணம் உயர்ந்து கொண்டிருக்கிறது. பெரிய பெரிய நகரங்களில் ஒரே தியேட்டரில் மூன்று, நான்கு தியேட்டர்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சொகுசான தியேட்டர்களுக்கு கட்டணங்களை உயர்த்துவதில்கூட தவறு கிடையாது. அப்படிப்பட்ட தியேட்டர்களிலும் இன்றையதினம் கட்டணம் உயர்ந்திருக்கிறது. இவைகளை அரசு கருணை கூர்ந்து பரிசிலிக்க வேண்டும். இன்றைக்கு தமிழகத்தில் உள்ள மக்கள் சினிமாவை தங்களுடைய அத்தியாவசியமான பொழுதுபோக்காக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சினிமா மாயை என்று சொல்லக்கூடிய

1989 நவம்பர் 1] [திரு. ஜி. பழனிச்சாமி]

அளவிற்கு இன்றையதினம் பல்வேறு விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த சினிமா ஆபாசங்களிலிருந்து கட்டுப்படுத்துவதற்கும், குடும்பச் சித்திரங்களை உருவாக்குவதற்குமான வழிகளைக்கூட நமது அரசு காணவேண்டும். அதற்கான திட்டங்களை, வழிகளை காணுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(13-25)

அதுமட்டுமல்ல, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய தியேட்டர்களில் கூட இப்படிப்பட்ட கட்டண உயர்வுகளைக் கொண்டு வருவது என்பது சரியல்ல. கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய சாதாரண டூரிங் டாக்கீஸ் வைத்திருக்கக்கூடிய, சாக்கு படுதாவை வைத்து படங்களைக் காண்பிக்கிறவர்கள்கூட, இப்படிப்பட்ட கட்டணத்தை உயர்த்தி இருப்பது சரியில்லை. இவைகளில் எல்லாம் மணிக்கணக்கில் டிக்கெட்டுகள் வந்து சேர்ந்ததற்குப் பிறகு படம் பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அந்த வகையிலே இந்த சினிமாக் கட்டணத்தை உயர்த்தி இருப்பதை அரசு மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் சினிமாக் கட்டணங்கள் குறைக்கப்பட்டும், வரி குறைக்கப்பட்டும், கூடுதலான விலையில் டிக்கெட்டுகள் விற்கப்படுகிற நிலையைக் குறித்தும் பல உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைச் சொன்னார்கள். குறிப்பாக எனக்கு முன்னாலே உரையாற்றிய அம்மையார் திருமதி பாப்பா உமாநாத் அவர்களும், திரு. பூவாராகன் அவர்களும், நானும் மனுக்கள் குழுவின் சார்பாக பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அலுவலகங்களுக்குச் சென்றபோது, சினிமா டிக்கெட் பிரச்சினைதான் ஒரு முக்கியமான பிரச்சினையாக எங்கள் மனுக்கள் குழுவிலே இடம் பெற்றது. அப்போது தூத்துக்குடியில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், எஸ். பி. போன்றவர்களையும் நேரில அழைத்து வைத்து, நாங்கள் கேட்கிறபோது, தூத்துக்குடியில மட்டுமல்ல, சுற்று வட்டார கிராமங்களில் கூட, போட்டிருக்கிற அந்தக் கட்டணத்தைவிட, மிக மிக அதிகமாக வசூல் செய்கிறார்கள், எங்குமே, எந்த நடவடிக்கையுமே எங்களால் எடுக்க முடியவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். இதைக் காவல் துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஒத்துக்

[திரு. பி. என். வல்லரசு] [1989 நவம்பர் 1

கொண்டார்கள். இப்போதிருக்கிற சட்டத்தை வைத்துக்கொண்டு கட்டுப்படுத்தவே முடியவில்லை. 5 ரூபாய் டிக்கெட்டை 10 ரூபாய்க்கு விற்கிறார்கள். கண்கூடாக நாங்கள் இதைப் பார்க்கிறோம். 6 ரூபாய் டிக்கெட்டை 12 ரூபாய்க்கு விற்கிறார்கள், கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனால் எங்களால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று எஸ்.பி. அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவருமே எங்களிடம் ஒப்புக்கொண்டது, நம்முடைய சட்டத்திற்கு வடக்கூடிய ஒரு சவாலாக இது உருவாகி இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இதைப்பற்றி சட்டமன்றத்திலே கூறி, இந்த ஓட்டைகளை அடைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாகக் கவனம் செலுத்துகிற அளவிற்கு நாங்கள் ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று உறுதிமொழியை அளித்துவிட்டு வந்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, கட்டணம் போட்டிருப்பதைவிட இரண்டு மடங்கு அதிகமாக விற்கக்கூடிய நிலை ஏன் ஏற்படுகிறது என்றால், அவர்களை தண்டிக்கின்ற நிலை சட்டத்தில் இல்லாததுதான். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், எஸ்.பி. அவர்களும் சொல்கிறார்கள், இது குறித்து நாங்கள் நடவடிக்கை எடுத்தால், நாளைக்கே ஸ்டே வாங்கி விடுவார்கள், நாங்கள் என்ன செய்வது என்று சொல்லி, மிகவும் வருத்தப்படுகிறார்கள். அந்த வட்டாரத்திலே இது பொதுமக்களுடைய பிரச்சினையாக இருக்கிறது. இதே நிலைமைதான் எல்லா வட்டாரத்திலேயும் இருக்கிறது என்பதால், டிக்கெட்டுகள் உரிய கட்டணத்தில் கிடைப்பதற்கும், எவ்வளவு கட்டணம் என்று டிக்கெட்டில் குறிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக் கட்டணத்திற்கே அவைகள் கிடைப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும், இதை மீறிச் செய்பவர்களுக்கு சரியான தண்டனை வழங்குவதற்கு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பல்வேறு தியேட்டர்களில் ஏ.சி.-க்கு என்று சேர்த்து கூடுதலாக வரி வசூல் பண்ணுகிறார்கள். ஆனால் அத்தகைய தியேட்டர்களிலே ஏ.சி.-யைப் போடுகிறார்களா என்றால் இல்லவே இல்லை. அதற்கும் சேர்த்துத்தான் கட்டணம் வசூல் செய்கிறார்கள். இதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1989 நவம்பர் 1] [திரு. பி. என். வல்லரசு]

கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு திரைப் படம் பார்ப்பது என்பது ஒரு பொழுதுபோக்கு என்ற வகையில் இருப்பதால் அவர்களுக்கு என்று ஒரு தனிச் சலுகையை அளிக் கின்ற வகையில், கிராமப் புறங்களில் இருக்கிற சினிமாத் தியேட் டர்களுக்கு வரிக் குறைப்புச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச சட்டமுன்வடிவின் மீது பேசுகின்ற சந்தர்ப்பத்தைத் தந்த உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமை பட்டிருக்கிறேன்.

இதிலே இரண்டு, மூன்று முக்கியமான பிரச்சினைகள் சம்பந்த மாக அரசினுடைய கவனத்தை நான் ஈர்க்க விரும்பு கிறேன். இன்று இந்தியாவை எடுத்துக்கொண்டால் தமிழகத்திலே மட்டும்தான் சினிமாவே வாழ்க்கை என்கிற சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருகிறது. நகரங்களிலேயும், நகரங் களைச் சுற்றி இருக்கின்ற கிராமங்களிலேயும் காலை 8 மணிக்கே சினிமா பார்க்க வரிசையிலே நிற்கிற ஒரு கூட்டம் உருவாகி இருப்பது இந்தியாவிலே தமிழகத்திலே மட்டும்தான் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(13-30)

காலையிலே 7 மணிக்கே படித்த இளைஞர்கள், படித்த இளம் பெண்கள் சினிமாவிற்குப் போய் வரிசையில் நின்று, மனிதன் உழைக்கின்ற நாட்களை, மனித நாட்களை வீணடிக்கின்ற— wasting human labour hours. என்று ஆங்கிலத்திலே சொல்வார் கள்—அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இன்று இந்தியாவிலே தமிழ கத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை. 5 காட்சிகள், 7 காட்சிகள் என்று ஓட்டக்கூடிய அளவுக்கு இன்றைக்குத் தமிழகத்திலே மக்களுடைய ரசனை மிகத் தாம் தாழ்ந்து இருக்கிறது. சில இடங் களிலே சொல்லுகிறார்கள், தினசரி 5 காட்சிகள், சனி, ஞாயிறு விடிய விடிய காட்சிகள் என்று சொல்லி மனிதர்களுக்கு சினிமாவைத் தவிர வேறு வேலையே இல்லையா என்ற ஒரு கேள்விக்குறியை எழுப்புகிற அளவுக்கு இன்றைக்கு தமிழகத் தினுடைய ரசனை தாம் தாழ்ந்து இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று அரசு ஆராய வேண்டும்.

[திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்] [1989 நவம்பர் 1

அவ்வாறு மனிதர்கள் படிக்கக்கூடிய நேரம், வேலை செய்யக் கூடிய நேரம், உழைக்கக் கூடிய நேரம், தொழிற்சாலை நடக்கக் கூடிய நேரம், கல்விச் சாலைகள், கலாசாலைகள் நடந்துக் கொண் டிருக்கிற நேரங்களிலேகூட, இந்த சினிமாக் காட்சிகளை நிபபாட்டினால் என்ன என்பதை அரசு ஆராய வேண்டும். அப்படி ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்காமல் போனால், அப்படியே ஒரு பகுதி மக்கள் வழி நடத்தப்படுவார்கள் என்று சொன்னால், அது எதிர்கால தமிழகத்திற்கு சரியான வாய்ப்பைத் தராது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

அதற்கும் மேலே இந்த 'ஏ' படங்களின் காட்சிகளை எல்லாத் திரையிலும் கட்டாயமாக காண்பிக்கக்கூடிய ஒரு நிர்பந்தத்தை உண்டாக்கி வைத்திருக்கிறார்கள். அந்த 'ஏ' சர்டிபிகேட் எதற்கு கொடுக்கப்படுகிறது என்பதைக்கூட பாராமல், சின்னஞ்சிறுவர்கள் கூட, சிறுமியர்கள்கூட, இந்த வயது வந்தவர்களுக்கு என்றிருக் கிற படத்தை பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். அரசு அந்த இளம் மனதுகள் அழுகி விடாதவண்ணம், அந்த இளம் மனதிலே ஒரு சோர்வு வந்து விடாத வண்ணம் அல்லது தவறான பாதை யிலே அவர்கள் வழி நடத்தப்படாத வண்ணம், அந்தப் படங்களை கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும் காண்பிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்றைக்கு எல்லாத் திரை அரங்குகளிலும் உருவாக்கக்கூடிய ஒரு பொறுப்பை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

நான் இன்னும்கூட அதிகமாக சொல்ல வேண்டுமென்றால், வயது வந்தவர்களுக்கு என்று இருக்கிற படங்களுக்கு சற்று வரி யைக்கூட அதிகமாக விதித்து, வரியைக் கூட அதிகமாக்கினால் என்ன என்பதை கூட அரசு சிந்தித்து பீனல் டாக்ஸ் என்ற முறை யிலே செய்ய வேண்டும். அவ்வாறு ஒரு உணர்வுக்கு தீனி போட்டு படம் பார்க்க விரும்புகிறவர்கள் அப்படி படம் பார்ப்பதை அனு மதிக்கிற வகையிலே அரசு அதிகமாக வரி விதித்தால் என்ன என் பதைக்கூட அரசு சிந்திக்க வேண்டும். அதைக் கூட சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறது.

அதற்கு அடுத்தாற்போல அந்த திரை அரங்குகளில் வேலை பார்க்கிற தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார் கள். அவர்களைப் பற்றியும் அரசு ஆராய வேண்டும்.

1989 நவம்பர் 1] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

கூடுதலாக வரும் வருமானத்திலே நகராட்சிகளுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் அதிக விழுக்காடுகளை கொடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால் வருமானம் இல்லாத பஞ்சாயத்துகளும் வருமானம் இல்லாத நகராட்சிகளும் இந்த ஆதாரத்தை மட்டும் நம்பி நகரமன்ற நிர்வாகத்தை, பஞ்சாயத்துக்களை நடத்திக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு இப்போது கிடைக்கிற கூடுதல் வருமானத்தின் மூலம் ஏதாவது கூடுதல் தொகை ஒதுக்க முடியுமா என்பதையும் அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருத்தச் சட்ட முன்வடிவைக் குறித்து எல்லா கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள். இறுதியாகப் பேசிய நண்பர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் சில பொதுவான பிரச்சினைகளை இங்கே எடுத்துக்காட்டி, தமிழ்நாட்டில் சினிமாவே வாழ்க்கையாக ஆகிவிட்டது, அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். சினிமாவை அறவே நீக்கிவிட முடியாது. ஆனால் அவர் கூறிய தத்துவம் 'சினிமாவே வாழ்க்கையாக ஆகிவிட்டது' என்பதை மாற்றுகிற முயற்சியில் இந்த அரசு நிச்சயமாக ஈடுபடும், ஒத்துழைக்கும். திரு. ஆல்போன்ஸ் போன்ற நண்பர்களும் அதை இந்த சட்டமன்றத்திலே பேசிய அளவோடு நிறுத்தாமல் சினிமாவே வாழ்க்கையாக எப்படி எப்படி மாறிவிட்டது. எங்கெங்கே மாறிவிட்டது என்பதைத் தமிழ்நாட்டில் மாத்திரம் அல்ல, அலகாபாத் வரையிலே சென்று எண்ணிப் பார்த்து அவர் நல்ல யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சினிமா தியேட்டர்களில் உள்ளபடியே வேதனைப்படக்கூடிய சம்பவமாக—ஒரு நாள் ஒரு அதிகாரி கூட என்னிடத்திலே மிகுந்த வருத்தத்தோடு அதைக் குறிப்பிட்டார். எந்தெந்தக் காட்சியில் தணிக்கையிலே வெட்டப்படுகிறதோ, அவைகளைக் கூட தணிக்கை அதிகாரிகளுடைய கண்களை மறைத்துவிட்டு, தொலை தூரத்திலே உள்ள திரை அரங்குகளிலே அப்படிப்பட்ட காட்சிகளை, தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளைக்கூட இணைத்து படத்தைக் காட்டுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதைவிட இன்னும் மோசமாக ஆபாசக் காட்சிகள், சொல்லக் கூச்சப்படுகிற காட்சிகளைக்கூட படத்தின் இடை இடையே ஒரு

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 நவம்பர் 1

சில மணித் துளிகள் வந்து மின்னல் வேகத்தில் போய் விடுகிற நிலையில், தியேட்டர்காரர்கள் பணம் சம்பாதிப்பதற்காக காட்டு கிறார்கள் என்ற அந்தத் தகவல்களும் அரசுக்கு வராமல் இல்லை.

அதைப்போலவே புதிய படங்கள், நல்ல கதாநாயகர்கள், மக்க ளிடத்திலே பிரபலமான கதாநாயகர்கள் நடிக்கிற படங்கள் வெளி வருகிற நேரத்திலே எல்லாம்—இப்போது சில உறுப்பினர்கள் டிக்கெட் கட்டணத்தை ஏற்றிவிட்டீர்களே, நியாயமா? இது ஏழைகளுக்குச் செய்யப்படுகிற தீங்கு அல்லவா என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களே முதலில் பேசியதை ஓரளவு மறந்து விட்டு பிறகு பேசும்போது 5 ரூபாய் டிக்கெட்டை 10 ரூபாய்க்கு விற்கிறார்கள் என்று சொன்னார்கள். வாங்குகின்றவர்கள் இருக் கின்ற காரணத்தால்தான் அதை விற்கின்றார்கள். 5 ரூபாய் டிக் கெட்டை 10 ரூபாய்க்கு விற்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையில் டிக் கெட் கட்டணம் ஓரளவு மிகக் குறைந்த சதவிகிதம் ஏற்றப்பட்

(13-35)

டிருப்பதால் எந்த ஏழையும் எளியவர்களும் வருத்தப்படுவதாகத் தெரியவில்லை. இன்று உருவாக்கப்பட்டுள்ள இந்த மாற்றங் களின் காரணமாக கிராமப்புறங்களில் உள்ளவர்கள் எல்லாம் கூட இதற்கு முன்பு 5 ரூபாய், 10 ரூபாய் கொடுத்து நாங்கள் டிக் கெட்டைப் பெற வேண்டியிருந்தது. இன்றைக்கு 1 ரூபாய், 2 ரூபாய் என்று அந்த டிக்கெட்டுகள் நிச்சயப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தால் எங்களை யாரும் ஏமாற்ற முடியவில்லை என்கின்ற மகிழ்ச்சியோடு இருப்பதாகத்தான் எனக்கு செய்திகள் வரு கின்றன. இந்த மாற்றங்களை எல்லாம்கூட இந்த அரசே தன்னிச்சையாக செய்து விடவில்லை. 31—5—1989 அன்று ஒரு நாளும், பிறகு 9—6—1989 மற்றொரு நாளும் திரைப்படத் துறை யிலே உள்ள பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையிடுகின்ற திரையரங்கு உரிமையாளர்கள் அத்தனை பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை அவர்களுடைய சங்கச் சார்பில் அழைத்து தலைமைச் செயலகத்திலே நானும் தொடர்புடைய அமைச்சரும் மற்ற அதிகாரிகளும் அவர்களிடத் திலே நீண்ட நேரம் விவாதித்து அவர்கள் சொன்ன கருத்துக் களையும், அரசின் கருத்துக்களையும் அலசி ஆராய்ந்து இரு தரப்பும் ஏற்றுக்கொண்ட முடிவுகளைத்தான் பிறகு அறிவித் தோம். அதுதான் அவசரச் சட்டமாக வந்தது. அதுதான் இன்றைக்கு சட்ட முன்வடிவாக இந்த மன்றத்திலே

1989 நவம்பர் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

வைக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே அடிப்படை கேளிக்கை வரி, இரண்டாவதாக கேளிக்கை வரி மீதான மேல் வரி—சர்சார்ஜ் ஆன் என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ், மூன்றாவதாக கேளிக்கை வரி மீதான கூடுதல் மேல் வரி—அடிஷனல் சர்சார்ஜ் ஆன் என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ், நான்காவதாக காட்சி வரி—அதாவது ஷோ டாக்ஸ், ஐந்தாவது காட்சி வரி மீதான மேல் வரி—சர்சார்ஜ் ஆன் ஷோ டாக்ஸ், ஆறாவது காட்சி வரி மீதான கூடுதல் மேல் வரி—அடிஷனல் சர்சார்ஜ் ஆன் ஷோ டாக்ஸ் என்று இப்படி 6 விதமான வரிகள் இருந்தன. இந்த ஆறு விதமான வரிகளையும் ஒரே வரியாக ஆக்கி 53 சதவிகிதம் என்று இருந்த அந்த வரியை 40 சதவிகிதம் ஆக இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று குறைத்துத் தந்தது. அப்படி அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டபோது அரசு அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னது. நாங்கள் 40 சதவிகிதம் ஆக அதைக் குறைக்கிற காரணத்தால் அரசினுடைய வருமானம் கேளிக்கை வரி மூலமாக இதுவரையிலே கிடைத்துவந்த வருமானம் குறையக்கூடும். எனவே கட்டணத்தை சில விழுக்காடுகள் நீங்கள் ஏற்ற வேண்டும் என்று அரசு சொன்னவுடன் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு ஏற்றுவதற்கு சம்மதம் தந்தார்கள். நான் எந்த அளவிற்கு அவர்கள் இதிலே மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு கடிதத்தைப் படிப்பது நலம் என்று கருதுகிறேன். இங்கே அண்ணா தி.மு.க. வரிசையிலே சில உறுப்பினர்கள் கிராமப்புறங்களிலே உள்ள தியேட்டர்காரர்களுக்காக மெத்தவும் வருத்தப்பட்டு பேசினார்கள். அவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு கடிதம் எழுதியிருப்பவர்கள் தமிழ்நாடு பிலிம் எக்சிபிட்டர்ஸ் அசோசியேஷன். திரைப்படக் கொட்டகைகளின் சொந்தக்காரர்களுடைய சங்கத்தின் சார்பிலேதான் இந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதுவும் அவர்களுடைய பொதுக் காரியதரிசியாக இருக்கின்ற டி. இராமானுஜம் அவர்கள்—அண்ணா தி.மு.க. நண்பர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். மறைந்த நம்முடைய முதலமைச்சர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர், எனக்கும் வேண்டிய நண்பர், திரை உலகத்தில் நீண்ட நெடு நாட்களாக இருப்பவர். பல திரையரங்குகளுக்குச் சொந்தக்காரர். இந்தத் திரைப்பட கொட்டகைகளுடைய உரிமையாளர்கள் சங்கத்திற்குத் தலைவராக இருப்பவர். அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே, "ஏற்கெனவே திரைப்பட

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 நவம்பர் 1

உலகம் நலிந்து கொண்டு வருவதை தாங்கள் அறிந்து அதை எப்படி யும் சீர்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் திரைப்படத் துறையை கலந்து தாங்கள் தக்க சமயத்தில் உதவி செய்ததினால், இந்தத் திரைப்பட உலகில் எல்லோரும் மகிழ்ந்திருக்கும் அள விற்கு திரைப்பட உலகம் வளர்ந்து வருகிறது. திரையரங்குகளில் படம் பார்ப்பவர்கள் செலுத்தி வந்த கம்பவுண்டிங் வரி இல்லாத இடங்களில் கார்ப்பரேஷன், ஸ்பெஷல் கிரேட் முனிசிபாலிடிகளில் இப்போதுள்ள 6 வித வரிக்குப் பதிலாக ஒரே வரியாக்கி அந்த வரியையும் கூட 53 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதம் ஆக

(13-40)

குறைத்து திரைப்பட உலகைச் சேர்ந்த தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், உரிமையாளர்கள் எல்லோரும் பயன் அடைந்து, சிறந்த தரமான படங்களை நல்ல முறையிலே துணிவு கொண்டு எடுக்க இது வழி வகுக்கிறது. உதாரணமாக, திரை யரங்குகளில் முன்பு 53 சதவிகிதம் இருக்கும்போது உள்ள வரி விகிதத்தையும், இப்போது வரி குறைந்து 40 சதவிகிதம் அளவிலே உள்ள வரி விகிதத்தையும் பற்றி ஒருசில திரையரங்குகளின் வசூ லைக் குறிப்பிட்டு இத்துடன் இணைத்துள்ளோம். இதனால் திரைப்பட உலகில் எல்லோரும் மகிழ்ச்சியுறுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, யாரும் குறைவில்லாமல் பெரிய அளவில் திரைப்பட உலகம் வளர இது திருப்பு முனையாக அமைந்தது.

(13-40)

இதேமாதிரி 'கம்பவுண்டிங்' முறையிலே வரி செலுத்தும் இடங் களில் அரசு இப்போதுள்ள அதிகபட்சமான 34 சதவிகித வரியை 30 ஆகக் குறைத்தும், அனுமதிக் கட்டணத்தை அதிகப்படுத்தி யும், சர்க்காரும் நஷ்டப்படாமல், பொதுமக்களும் கஷ்டப்படாமல் திரைப்படத் தொழில் லாபகரமாக வளர உங்களுடைய உத்தரவு நல்ல முறையில் அமைந்துள்ளது. உதவிக்குப் பெரிதும் நன்றி" என்று திரையரங்கு உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக அத னுடைய பொதுச் செயலாளர், தலைவர் ஆகியோர் எனக்குக் கடி தங்கள் எழுதி இருக்கின்றார்கள்.

நான் உங்களுக்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமே யானால், படத் தயாரிப்பாளர்கள், தியேட்டர்காரர்கள், அவர் களுக்கு முன்பெல்லாம் என்ன வருமானம் வந்தது, இப்போது என்ன வருமானம் வருகிறது என்பதைப் பார்ப்பதற்கு முன்பு, பொதுவாக இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, இந்த மாற்றங்கள் அமலாக்கப்படுவதற்கு முன்பு, எப்ரல், மே, ஜுன்

1989 நவம்பர் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆகிய இந்த மாதங்களில், 1989 ஆம் ஆண்டிலே 16.45 கோடி ரூபா யாக அரசுக்கு வருமானம் இருந்தது. சூலை, ஆகஸ்ட், செப்டம் பர் ஆகிய இந்த மூன்று மாதங்களில் அரசு வருமானம் 17 கோடியே 49 இலட்சம் என்கின்ற அளவிற்கு இந்த வருமானம் உயர்ந்திருக்கின்றது. அது மாத்திரமல்ல. நான் படங்களுக்கு உரையாடல் எழுதுபவன் மாத்திரமல்ல, படங்களையும் ஒரு காலத் திலே தயாரித்தவன் என்ற முறையில்—தம்பி திருநாவுக்கரசு இப்போதுதான் நுழைந்திருக்கிறார்—அதனுடைய கஷ்ட நஷ்டங் கள் தெரியும். ஆனால் அப்போது எல்லாம் இந்தப் படத் துறையில், தயாரிப்பாளர்களுக்கு எதுவும் மிச்சப்படாது. மிச்சப் படுவது எல்லாம் விநியோகஸ்தர்களுக்கு என்கின்ற அளவிலே தான் மிச்சப்படும் அல்லது சர்க்காருக்கு வரியாகப் போய்ச் சேரும்.

ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். மகாராணி தியேட்டர் சென்னையில். ஏற்கெனவே கிராஸ் கலெக்ஷன், மொத்தமாக வசூலாகிற தொகை 3,082 ரூபாய் அப்போது. அதற்கு எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ், நான் சொன்ன அந்தப் பல வரி கள் இருக்கிறதே, ஆறு விதமான வரிகள், அதைக் கொடுத்தால், 1,555 ரூபாய் அதிலே வரியாகப் போய்விடும். மீதமுள்ள 1,527 ரூபாய்தான் நெட் கலெக்ஷன். அது தியேட்டர்காரர்களும், தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும், மூன்று பேரும் பங்கு போட்டுக் கொள்ள வேண்டிய கலெக்ஷன். ஆனால் இப்போது செய் யப்பட்டுள்ள மாறுதலின் காரணமாக, கிராஸ் கலெக்ஷன், மொத்த வசூல் 4,021 ரூபாய், அந்த தியேட்டரில். அதிலே என்டர்டெயின் மெண்ட் டாக்ஸ் 1,609 ரூபாய்; 100 ரூபாய்தான் அதிகமாகிறது ஏறத் தாழ. ஆனால் நெட் கலெக்ஷன், ஏற்கெனவே ரூ. 1,527 ஆக இருந்ததற்குப் பதிலாக ரூ. 2,412 ஆக உயர்கிறது.

இன்னொரு தியேட்டரை எடுத்துக் கொள்வோமேயானால், அண்ணா சாலையில் உள்ள அலங்கார் தியேட்டர். முன்பு கிராஸ் கலெக்ஷன் 6,346 ரூபாய். அப்போது என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ், அதற்கு 3,293 ரூபாய். நெட் கலெக்ஷன், தியேட்டர் காரரும், விநியோகஸ்தரும், தயாரிப்பாளரும் பகிர்ந்து கொள்ள வேண்டிய தொகை 3,053 ரூபாய். இப்போது இந்த மாற்றத்திற் குப் பிறகு கிராஸ் கலெக்ஷன் அந்தத் தியேட்டரில் 8,639 ரூபாய். வரி 3,456 ரூபாய். உயர்த்தப்பட்ட வரி, நெட் கலெக்ஷன் 5,183 ரூபாய். 3 ஆயிரம் ரூபாய் 5 ஆயிரம் ரூபாயாக உயர்கிற காரணத்

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 நவம்பர் 1

தால் தயாரிப்பாளர் நஷ்டம் அடையவில்லை. தியேட்டர்காரர் நஷ்டம் அடையவில்லை. விநியோகஸ்தர் நஷ்டம் அடைய வில்லை. அதன் காரணமாக திரை உலகத்தில் இருக்கின்ற 10 இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு இல்லை. அதையும் மறந்துவிடக் கூடாது.

(13-45)

சில நண்பர்கள் பேசும்போது சொன்னார்கள், தியேட்டர்களை எல்லாம் இன்றைக்கு இடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அளவுக்குத் திரை உலகம் பாழ்பட்டு போய்விட்டது, திரைப்படத் தொழில் நசிந்து விட்டது என்றெல்லாம் சொன்னார்கள். நான் உங்களுக்குத் தெரிந்த நண்பருடைய பெயரைச் சொல்ல வேண்டு மானால் காங்கிரஸ் இயக்கத்திலே நல்ல நண்பராக இருக்கின்ற திரு. உமாபதி அவர்கள் இந்த மாற்றம் வருவதற்கு முன்பாக என் னிடத்திலே பேசிக் கொண்டு இருந்தார், "என்னுடைய தியேட்டரை விலை கூறிவிட்டேன், விற்கப் போகிறேன்" என்று சொன்னார். இந்த மாற்றம் வந்த பிறகு என்னைச் சந்தித்து நான் அந்த முடிவை மாற்றிக்கொண்டு விட்டேன். இந்த முடி வின் காரணமாக தியேட்டர் நடத்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. எனவே விற்கப் போவது இல்லை, தொடர்ந்து நடத்துகிறேன் என்று சொன்னார். இத்தகைய மாற்றம் ஏற்படா விட்டால் தமிழ்நாட்டில் பல திரைப்பட அரங்குகள் இடிக்கப்பட்டு இருக்கும், திரைப்படத் தொழிலாளர்கள் பல லட்சக்கணக்கானவர் கள் வாழ்வு இழந்து போயிருப்பார்கள். எனவேதான் இது ஏதோ 4, 5 நடிகர்கள், 10, 15 தயாரிப்பாளர்களுடைய நலத்தை முன் வைத்து செய்யப்பட்ட மாற்றங்கள் அல்ல. பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் சென்னையில் ஸ்டுடியோக்களில் பணியாற்று கின்ற தொழிலாளர்கள் ஆனாலும் ஆங்காங்கே சிறிய சிறிய தியேட்டர்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ஆனாலும் பல லட்சக்கணக்கானவர்களுக்கு வாழ்வு வீணாகக்கூடாது என்பதற் காகத் தான் இத்தகைய மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இப் போது நடைமுறைக்கு வந்து இருக்கின்றன.

இதிலே நீங்கள் சொல்லிய பல கருத்துக்களில் நகரை ஒட்டி யிருக்கின்ற கிராமத்தில் இப்போது செய்யப்பட்டு இருக்கின்ற மாற்றத்தை எதிர்த்து இங்கே அ.தி.மு.க. வரிசையில் ஒரு நண்பர் இங்கே பேசினார், பேசும்போது நண்பர் எம்.ஜி.ஆர். படங்களை ஓடாமல் செய்வதற்காக இதைச் செய்கிறோம் என்று கூறிப்பிட்

1989 நவம்பர் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

டார். அது தவறு. கிராமபுறங்களில் எம். ஜி. ஆருடைய படங்கள் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. யாருடைய படமாக இருந்தாலும் நல்ல படமாக இருந்தால் பழைய படங்களில் கூட நல்ல படமாக இருந்தால் அதை பார்க்க மக்கள் யாரும் தவறுவது இல்லை.

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். வேலூர், காட்பாடி என்று எடுத்துக்கொண்டால் இது போன்ற ஒரு சலுகை காட்பாடிக்கு கிடைக்கிறது என்பதற்காகவே பட விநியோகஸ்தர்கள் வேலூரில் உள்ள நகர்ப்புறத்து தியேட்டர்களில் புதிய படங்களை வெளியிடாமல் காட்பாடி தியேட்டரில் வெளியிட்டு வரி ஏய்ப்பு செய்வதிலே ஈடுபட்டார்கள். எனவேதான் அதைத் தடுப்பதற்காகத்தான் இதுபோன்ற ஒரு நிலையை அரசு மேற்கொள்ள நேரிட்டது.

நம்முடைய அம்மையார் அவர்கள் கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினராக இருக்கின்ற திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல இன்னமும் பல தியேட்டர்களில் புதிய படங்கள் வருகிற நேரத்தில் இதுபோன்ற மோசடிகள் நடைபெறுகின்றன. அதை நேரிலே குழு உறுப்பினர்கள் சென்றபோது அவர்களும், நம்முடைய திரு. வல்லரசு போன்றவர்களும் மற்றவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்து நேரிலே கண்டு அறிந்ததாக, கேட்டு அறிந்ததாக எடுத்துச் சொன்னார்கள். அதையெல்லாம் கண்டுபிடித்து தக்க தண்டனை வழங்க இன்னும் தீவிர நடவடிக்கை எடுக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு நடவடிக்கைகளுக்குப் பிறகும் அரசை ஏமாற்ற, வரியை ஏமாற்ற சில தியேட்டர்காரர்கள், அவர்களுக்கு ஒத்துழைக்கக் கூடிய சில அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சென்னைக்கு அருகிலே ஒரு தியேட்டரில் கடந்த 2 ஆண்டு காலத்திலே நாங்கள் சென்று ஆராய்ந்ததில் கிட்டத்தட்ட 80 லட்ச ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே இப்படிப்பட்ட தியேட்டர்காரர்கள் நாட்டில் இருக்கிறார்கள்.

அதைப்போல ஒரு புதிய படம் வந்தால் அந்தப் படத்தை தன்னுடைய தியேட்டரில் வெளியிடும் போதே அதை வீடியோ செய்து அதை மக்களுக்கு விற்று அந்தப் படத்தினுடைய வசூலைக்

கெடுக்கின்ற சில திரையரங்க உரிமையாளர்களும் உண்டு. அவர்கள் எல்லாம் அதிகமாக இந்தப் பகுதியிலே இல்லை. தென் மாவட்டங் களிலே அவர்கள் உண்டு. அவர்கள் யார் என்பது நம்முடைய திரு. ஆல்போன்ஸ் போன்றவர்களுக்கு எல்லாம் மிக நன்றாகத் தெரியும். அவர்கள் மீது எல்லாம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாகத்தான் இன்றைக்கு அத்தகைய மோசடிகள் குறைந்து புதிய படங்கள் எல்லாம் நல்ல முறையில் இன்றைக்கு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வழி ஏற்பட்டிருக் கிறது. ஏதோ சினிமாவிற்காக இந்த அரசு வக்காலத்து வாங்கிக் கொண்டு இவைகளையெல்லாம் செய்வதாக யாரும் எண்ணக் கூடாது.

அதைப்போலவே ஏழை எளிய மக்களுக்கு அதிகக் கட்டணத்தை உயர்த்தி விட்டதாகவும் யாரும் எண்ணக்கூடாது. இன்னும் கொஞ்சம் கட்டணத்தை அதிகமாக உயர்த்தினாலும் சினிமாவைப் பொறுத்தவரையில் அதைத் தருவதற்கு அந்த மக்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே இதிலே எந்தவிதமான மறுப்பதற்கு, ஆட்சேபிப்பதற்கான கருத்துக்கள் இல்லை என் பதை எடுத்துக் காட்டி உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகத் தொகை இதிலிருந்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டது. ஏற்கனவே அரசுக்கு இந்த கேளிக்கை வரி மூலமாக 35 விழுக்காடும், உள்ளாட்சி மன்றங்களுக்கு 65 விழுக்காடும் என்று இருந்தது. இப்போது இந்தச் சட்டத்தின்படி அரசுக்கு 30 35 விழுக்காடும், உள்ளாட்சி மன்றங்களுக்கு 65 விழுக்காடும் என்று இந்தச் சட்டத்திலே இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக உரிமைகளை, அதிக நிதியை ஒதுக்குவதற்காகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு என்பதை யும் தெரிவித்து இதை நீங்கள் அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

(13-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் க. பொன்னு சாமி தனது தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் இங்கே கூறிய கருத் துக்கள், மிகத் தெளிவாக சினிமா கட்டண உயர்வுக்குக் காரணம்

கற்பிப்பதைப்போல இருந்தது. இருந்தாலும் மற்றொன்றைக் கூட இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வேலூர் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதால், ஒரு பத்திரிகையிலே நான் பார்த்த செய்தியைச் சொல்லி அதற்கான விளக்கத்தை முதல்வர் அவர்கள் விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேலூர் அரசு திரையரங்கில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்ந்து பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. வலியுறுத்துகிறீர்களா, இல்லையா என்பதை மட்டும் தெரிவியுங்கள்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : அரசு திரையரங்கில் கட்டணம் இரட்டிப்பாக மாற்றப்பட்டு விட்டதாக ஒரு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அது தொடர்பாக முதல்வர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் கருத்து சரியானதாக இல்லை. இருந்தாலும் உறுப்பினர் தெரிவித்திருக்கிறார் என்பதற்காக மீண்டும் விசாரிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது ; இப் போது வாக்கெடுப்பு.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 36/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1989 நவம்பர் 1

பிரிவுகள் 2 முதல் 18 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 36/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

7. அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30(3)-ன் கீழ் நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம்-4. அரசினர் சட்ட முன் வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின்கீழ், வரிசை எண். 5. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 37/1989) என்று உள்ளதை நாளை (2-11-1989) எடுத்துக் கொள்ளலாம். '.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1989 நவம்பர் 1

பிரிவுகள் 2 முதல் 18 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 36/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

7. அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30(3)-ன் கீழ் நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம்-4. அரசினர் சட்ட முன் வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின்கீழ், வரிசை எண். 5. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 37/1989) என்று உள்ளதை நாளை (2-11-1989) எடுத்துக் கொள்ளலாம். '.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

1989 நவம்பர் 1]

5 (ii). சட்ட முன்வடிவுகள் (ஆய்வு)—தொடர்ச்சி.

(2) மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"28—9—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது."

தீர்மானம் முறைப்படி வழி மொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. முதலில் பேராசிரியர் க. பொன்னுசாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவு மாநகராட்சி தனி அலுவலர்களின் பணிக் காலத்தை நீட்டிப்பதற்காக இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு குறிப்பிட்டிருக்கின்ற காரணம் எப்படி இருந்தாலும் விளக்கக் குறிப்பிலே, ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும், அந்தக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்து அஃ து

* 31-10-1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பரிசீலனையில் இருப்பதாகவும், குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் அதன்மீது முடிவு எடுக்க இயலாத காரணத்தால் தள்ளிவைக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆழ்ந்து சிந்தித் துப் பார்த்தால் இது சாதாரணமாக ஒரு போலியான காரணம் என்றே நம்ப இடம் ஏற்படுகிறது. தேர்தல் நடத்த வேண்டும், நடத்த வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தபோதெல்லாம் நடத்துகிறோம், நடத்துகிறோம்; சொன்னதைச் செய்வோம் என்று இந்த அரசு சொல்லியது; செய்வதைச் சொல்வோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப்

(13-55)

அவர்கள் கூட தேர்தலை ஒரு நாள் இரண்டு நாள் தள்ளி வைக்க முடியுமா என்று கேட்டுக் கொண்ட காலம் கூட இருக்கிறது. அப்போதெல்லாம் நினைத்துக் கொண்டேயிருந்தோம், உடனடி யாக தேர்தல் நடந்துவிடும் என்று. புலி வருகிற கதையாக இந்த தேர்தல் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கிறது. அதற்கு நீங்கள் கண்டுபிடித்த காரணமாக இருக்கிறது என்று நினைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப் பிடவிரும்புகிறேன்.

18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை வேண்டும், அதற்குப் பின்னாலே தேர்தல் நடத்தவேண்டுமென்று நாங்கள் குறிப்பிட்ட போது, இல்லை, இல்லை உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற வாதம் இங்கே எடுத்து வைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே இப்போது நடந்துகொண்டிருப்பதைப் பார்த்தால் தேர்தல்கள் மேலும் மேலும் தள்ளிவைக்கப்படுவது உள்நோக்கத் தோடு நடத்தப்படுகிறதோ என்ற எண்ணத் தோன்றுகிறது. அது மட்டுமல்ல, கோப்புகளை இரவோடு இரவாக பார்த்து எங்கெங்கே தவறுகள் இருக்கிறதோ அவைகளையெல்லாம் கண்டறிந்து விரைவிலே நடவடிக்கை எடுப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சொன்னதைச் செய் வோம் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட பரிசீலனையை ஒரே இரவில் நடத்திவிட முடியும். அதை வேண்டுமென்றே காலம் தாழ்த்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989 நவம்பர் 1] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

அதுமட்டுமல்ல, தேர்தல் நடத்தாமல் தப்பிப்பதற்கு இந்த அரசு சாக்கு போக்கு கூறிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணம ஏற்பட இதனால் வழி ஏற்படும் என்று குறிப்பிட்டு, பொதுவாகவே மதுரை, மருங்காபுரி தேர்தல்களுக்குப் பின்னாலே தேர்தலைச் சந்திப்பதற்குத் தயங்குகிறார்கள் என்ற எண்ணத்தையும் தெரிவித்து, என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து, இந்த முன் வடிவை எதிர்த்து அமைகிறேன், வணக்கம்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியினுடைய அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கக் கூடிய இந்த தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்த அரசாங்கம் நீண்ட நெடுங்காலமாக மாநகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்தாமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வந்ததும், அதன் விளைவாக இந்த 3 மாநகராட்சிப் பகுதிகளில் இருக்கிற மக்கள் தாங்கள் விரும்புகிற மக்கள் பிரதிநிதிகளைத் தேர்வு செய்து அந்த மூன்று மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய ஒரு வாய்ப்புக் கிடைக் காத ஒரு சூழ்நிலையில் தொடர்ந்து இருக்கிற சூழ்நிலையில் புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்த தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படும் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் சில தவிர்க்க முடியாத காரணங்களால் ஏற்கெனவே அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில் இன்றைக்கு மேலும் 6 மாதகாலம், மார்ச் 31-ந் தேதி வரையில் நீட்டிக்கப்பட்டிருக்கிற இந்த ஒத்திவைப்பு என்பது கடைசியாக இருக்கவேண்டும், அடுத்து மார்ச் 31-ந் தேதிக்கு உள்ளாக திட்ட வட்டமாக இந்த 3 மாநகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்தி முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டு மென்று இந்த சந்தர்ப்பத்திலே வலியுறுத்துவதோடு, ஏற்கெனவே இதே மன்றத்தில் 21 வயது நிரம்பிய வாக்காளர்களைக் கொண்டு தேர்தல்களை நடத்துவதற்கான ஒரு சட்ட திருத்தம் இதே மன்றத்திலேயே திருத்தப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மன்றத்தில் பல உறுப்பினர் களின் வேண்டுகோளுக்கிணங்க 18 வயது நிரம்பிய வாக்காளர் களைக் கொண்டே தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தாலும் கூட ஏற்கெனவே திருத்தப்பட்டிருக்கிற

[திரு. சி. கோவிந்தசாமி] [1989 நவம்பர் 1

அந்த சட்டத்தை 18 வயதான வாக்காளர்களைக் கொண்டே தேர்தல் நடத்தப்படும் என்று அதையும் திருத்தி உரிய காலத்தில் இந்த மாநகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமைகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சட்ட முன்வடிவில் பேசுகிற வாய்ப்புக் கிடைத்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய அருமை உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு பதவி ஏற்றுக் கொண்ட உடன் மாநகராட்சிகளுக்கு நடத்தவேண்டிய தேர்தல்களை நாங்கள் உடனடியாக நடத்து வோம் என்று சொன்னார்கள். பிப்ரவரி மாதம் அதைப்பற்றி நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த நேரத்திலுங்கூட, எடுத்துச் சொன்னோம். கடந்த 14, 15 ஆண்டுகளாக தேர்தல் நடைபெறவில்லை. மாநகராட்சிகள் எல்லாம் சீர் கெட்டு இருக்கிறது, ஆகவே உடனடியாக தேர்தல் நடத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு எடுத்துச் சொல்லப்பட்ட காரணங்கள் எல்லாம், ரம்சான் பண்டிகை வருகிறது என்பதுதான். அந்தப் பண்டிகையை ஒட்டி நீங்கள் ஓரளவுக்காவது தள்ளி வையுங்கள் என்றும் கேட்டுக்கொண்டதாகச் சொன்னார்கள். 18 வயது நிறைந்த வாக்காளர் பட்டியலைத் தேர்தல் கமிஷன் மே மாதம் 21 ஆம் தேதியே தயாரித்து இருப்பதாகச் சொல்கிறார்கள் அந்தப் பதினெட்டு வயது வாக்காளர்களையும் சேர்த்து தேர்தல்

(14-00)

வையுங்கள் என்று சொன்னபோது கூட அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தேர்தலை நடத்துவோம் என்று சொன்னார்கள். ஆனால் பின்னர் மதுரையிலும், மருங்காபுரியிலும் தேர்தல் நடந்து முடிந்த பிறகு இந்தத் தேர்தலானது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று இன்றைக்குப் பரவலாக மக்களால் பேசிக்கொள்ளப்படுகிறது.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு உள்ள நிலைமையிலே சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மிகவும் சீர்கேடு ஏற்பட்டு இருக்கின்ற ஒரு நிலைமையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நம்முடைய தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் அவர்கள் இருக்கின்ற இல்லத்திற்குச் செல்கிற வழியில் கூட கடந்த நான்கைந்து மாதங்களாகக் குப்பைகள் சீர் செய்யப் படாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட கொடுமையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அதுமட்டுமல்ல. சென்னை மாநகராட் சிக்குச் சொந்தமான பல்வேறிடங்களில் இன்றைக்கு ஆக்கிர மிப்பு செய்யப்பட்டிருக்கிற ஒரு கொடுமையான நிலைமையும் இருந்துகொண்டு இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை என்.எஸ்.ஸி. போஸ் ரோட்டிலே உள்ள, 1959 ஆம் ஆண்டிலே பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட, என்னுடைய உறவினர் ஒருவரால் கட்டித்தரப்பட்ட தொட்டி, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், மறைக்கப்படுகிற அளவுக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல. போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிற அளவுக்கும் அந்த ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டிருக் கிறது என்று சொன்னால் அந்த அளவுக்கு நிலைமைகள் மோச மாகி இருக்கின்றன. இதனை எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல. தேர்தலை நடத்தவேண்டும் என்று சொல்கிற பொழுது சென்னையைப் பொறுத்தவரையில் கள்ள வாக்குகள்தான் மிக அதிகமாக இருக்கின்றன. எனவே வாக் காளர்களுக்குப் போட்டோக்கள் ஒட்டிய அடையாள அட்டையை வழங்குகிற அளவிலே விரைவிலே ஏற்பாடு செய்வதுடன் பெண் களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கிற பட்டியலை அரசு விரைவில் வெளி யிட்டு தேர்தலை நடத்துகிற அளவுக்குக் கருத்துக்களைச் சொன் னோம். ஏற்கெனவே தேர்தல் கமிஷன் மூலமாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வாக்காளர் பட்டி யலைக் கூட பயன்படுத்தி மேலும் காலதாமதம் இல்லாமல் தேர்தலை நடத்தி, மக்களின் பிரதிநிதிகள் மூலமாக செய்ய வேண்டிய கடமையைச் செய்வதற்குரிய வழிவகைகளை இந்த அரசு வழங்கவேண்டுமென்று கேட்டு இந்த அளவிலே தேர்தலை ஒத்தி வைப்பதற்காகக் கொண்டுவரப்படுகிற சட்டமுன்வடிவை எதிர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இந்தக் கால நீட்டிப்பு ஏற்கெனவே சட்டப்பேரவை உறுப்பினர்களிடத்திலிருந்தும், வெளியே இருந்தும் வந்த பல்வேறு கருத்துக்களை ஒட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் அமைந்தது என்பதை இந்த மன்றம் அறியும். தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் இந்த அரசு மாநகராட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் 21 வயது பூர்த்தியடைந்த வாக்காளர்களைக் கொண்டு அதாவது சட்டமன்ற வாக்காளர் பட்டியல் அடிப்படையில் தேர்தலை இந்த ஆண்டு மே மாதம் நடத்துவதற்காக தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டத் திருத்தம் சட்டமன்றத்திலே 15—2—1989 அன்று நிறைவேற்றப்பட்டது. ஆனால் இதே மன்றத்திலேயும், வெளியிலேயும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதாவது ரம்சான் பண்டிகை மே மாதம் 7 ஆம் தேதி முடிவடைவதால் தேர்தல்களை சிறிதுகாலம் தள்ளி வைக்க வேண்டுமென்று சட்டமன்றத்தில் கோரிக்கைகள் எழுப்பப்பட்டதன் அடிப்படையிலேயும், மேலும் 18 வயது வந்தவர்கள் பெயர்களை மாநகராட்சித் தேர்தல் வாக்காளர் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டும் என்று கோரிக்கை சட்டமன்றத்திலே எழுப்பப்பட்ட அடிப்படையிலேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கைகளை ஏற்று 18 வயதுடைய வாக்காளர்களைக் கொண்ட பட்டியலின் அடிப்படையிலே ஜூலை மாதம் மாநகராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று 3—4—1989 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். அதற்கேற்ப புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8—4—1989 அன்று மாநகராட்சி வார்டுகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கும், பெண்களுக்கும் தனி இட ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு ஆராயும் என்று—மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் இங்கே பேசியதற்கேற்ப அந்தக் கருத்தையும் ஏற்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்கு ஏற்ப சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சி சட்டங்களில் தனி ஒதுக்கீடு குறித்தும், கோ-ஆப்ட் குறித்தும் சட்டத் திருத்தங்கள் 11—5—1989 அன்று நிறைவேற்றப்பட்டது. மாநகராட்சிகளில் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கும் தனி ஒதுக்கீடு செய்ய வேண்டிய

வார்டுகளைத் தேர்ந்தெடுக்க திரு. டி. வி. வெங்கடகிருஷ்ணன் என்கிற மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் குழு ஒன்று இதற்காக அமைக்கப்பட்டு, மாநகராட்சிகளின் தனி அதிகாரிகள், ஆணையாளர்கள் மற்றும் அந்தந்த மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்றை அரசு பெற்றுள்ளது. அதன்படி வாக்காளர்களின் எண்ணிக்கை ஓரளவுக்கு சமமாக இருக்குமாறு புதிதாக பிரித்து அதன்பின் தனி ஒதுக்கீடு வார்டுகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்கிற பொதுவான கருத்தை குழு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கை தற்போது அரசின் ஆய்வில் உள்ளது. நாடாளுமன்ற தேர்தல் நடந்த பிறகு தனி ஒதுக்கீடு செய்வது பற்றி குழுவின் அறிக்கையின்மேல் எடுக்கப்படும் முடிவுக்கு ஏற்ப மாநகராட்சி தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளில் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் இவ்வாண்டு செப்டம்பர் மாதம் முடிவடைய இருந்தது. அப்போது சட்டமன்ற கூட்டம் நடைபெறாததால் இந்த தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 1990 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டித்து 1981 ஆம் ஆண்டு மாநகராட்சிச் சட்டத்தை, 4 ஆம் திருத்த அவசரச் சட்டமாக ஆளுநரிடமிருந்து ஒப்புதல் பெற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில்தான் கால நீட்டிப்பு செய்யப்பட்டது என்பதோடு மட்டுமல்லாமல், இன்னொன்றையும் இங்கே பேசும்போது உறுப்பினர்கள் சொன்னார்கள்.

"சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்று சொல்லிவிட்டு, ஏன் அவ்வாறு செய்யவில்லை என்று இங்கே கேட்கப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற 9 மாத காலத்தில் "சொன்னதைச் செய்திருக்கிறது" என்பதை நாட்டு மக்கள் மிகவும் நன்றாக அறிவார்கள். அதுபோல கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. இந்தத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு இன்னொரு முக்கியமான காரணமாக அமைந்தது என்னவென்றால் மத்திய அரசு பஞ்சாயத்து ராஜ், நகர பாலிகா என்கிற

TRUTH ALONE TRIUMPHS

சட்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்தது. அந்த அரசியல் சட்டத் திருத்தம் ஒருவேளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டால் நாம் பழைய முறையிலே தேர்தலை நடத்தினாலும்கூட அதை மீண்டும் மாற்றி தேர்தலை நடத்த வேண்டிய ஒரு அவசியம், கட்டாயம் இங்கே ஏற்படும். ஆகவே, இந்தக் காரணங்களை எல்லாம் ஒட்டித்தான் ஒத்திவைக்கப் பட்டது. மார்ச் மாதம் அந்த குறிப்பிட்ட தேதிக்குள் இந்த அரசு தேர்தலை நடத்த எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்து, இச்சட்ட முன்வடிவை நிறைவேற்றி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

பேராசிரியர் க. பொன்னுசாமியின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 38/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு—2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்"

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

In Clause 2 *for* the words '31st day of March 1990", *substituted* the words "31st day of January 1990".

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

1989 நவம்பர் 1]

திரு. மா. சுந்தரதாஸ் : இந்தத் திருத்தத்திற்கு காரணம், கடந்த அரசும் இதுபோல சட்டத் திருத்தம் கொண்டு வருவது வழக்கம். குறிப்பாக அப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் திரு. இரகுமான்கான் அவர்கள் பிரச்சினையாகத்தான் இதனைப்பற்றி பேசிக்கொண்டிருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் சென்னை நகரைச் சார்ந்தவர்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் நீங்கள் வந்த உடனேயே தேர்தலை நடத்துவீர்கள் என்றுதான் நான் எதிர் பார்த்தேன். இப்படி தேர்தலுக்கான நாளை நீட்டித்துக் கொண்டே போவது நல்லதல்ல என்பது என் கருத்து. இங்கே அமைச்சர் அவர்கள் பல்வேறு காரண காரியங்களை எல்லாம்

(14.10)

சொன்னார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன், இப்படி நாளை நீட்டித்துக்கொண்டு போக வேண்டிய அவசியமில்லை. ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்சில் பெண்களுக்கும் அரிஜனங்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்போதுதான் பாராளுமன்றத் தேர்தலுக்காக 18 வயதான வர்கள் வாக்காளர் பட்டியல் தயாராகி இருக்கிறது. ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிக்குப் பார்த்தாலே தெரியும். எங்கே அரிஜன மக்கள் அதிகமாக இருக்கிறார்கள், எங்கே பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று. அதைப் பார்த்து செய்தால் போதும். அதற்கு மார்ச் மாதம் வரை தேவையில்லை. ஜனவரியிலேயே முடிக்க முடியும். எனவே நவம்பரிலே பாராளுமன்றத் தேர்தல் முடிந்தவுடனே தேர்தல் அறிவிக்கை செய்தால், 1990 ஜனவரிக்குள் நிச்சயமாக 3 மாநகராட்சிகளிலும் தேர்தல்களை நடத்த முடியும். அந்த 3 மாநகராட்சிகளிலும் மக்களாட்சி உருவாக வழி ஏற்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தில்தான் இந்தத் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். நிச்சயம் அமைச்சர வர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன். 1969-லிருந்து இந்த மாநகராட்சிகளின் தேர்தல்கள் நடக்கவில்லை. மாண்புமிகு முதல்வரவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் அது கலைக்கப்பட்டது. ஜனநாயக மரபுக்கு இது சரியானதல்ல என்று சொல்லி, தயவு செய்து இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்

(திரு. மா. சுந்தரதாஸ்) [1989 நவம்பர் 1

கிறேன். திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும்கூட, "நாங்கள் செய்வோம்" என்ற ஒரு அஷ்யூரன்ஸ் கொடுத்தால், அதை நாங்கள் அஷ்யூரன்ஸ் கமிட்டியில் பார்த்துக்கொள்வோம்...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மார்ச் என்று சொல்கிற காரணத்தாலே, அதற்குள்ளே ஜனவரியும் அடங்கியிருக்கிறது. மார்ச் வரையிலே காலக்கெடு கேட்கிறோம். அதற்குள்ளேயே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நடத்த இந்த அரசு முன்வரும்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு முதல்வரவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நான் இந்தத் திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 2, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

"In Clause 3 *for* the words "31st day of March 1990", *substitute* the words "31st day of January 1990".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

1989 நவம்பர் 1] (திரு. மா. சுந்தரதாஸ்)

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 மற்றும் 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 38/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (2—11—1989) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

168. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிருவாகத் தீர்ப்பாய (நிதி மற்றும் நிருவாக அதிகாரங்கள்) விதிகளை வகுப்பது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்திருத்தம் துறையின் 1989 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு நிருவாகத் தீர்ப் பாயச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 13/1985) 37(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

1989 நவம்பர் 1] (திரு. மா. சுந்தரதாஸ்)

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 மற்றும் 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 38/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (2—11—1989) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

168. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிருவாகத் தீர்ப்பாய (நிதி மற்றும் நிருவாக அதிகாரங்கள்) விதிகளை வகுப்பது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்திருத்தம் துறையின் 1989 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு நிருவாகத் தீர்ப் பாயச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 13/1985) 37(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

TRUTH ALONE TRIUMPHS

169. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது பானங்களுக்கு விதிக்கக்கூடிய 30 சதவீத வரியினை 20 சதவீதமாக குறைத்து வரி விதிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 1989 ஆம் ஆண்டு மே திங்கள் 29 ஆம் நாளிட்ட 398 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

170. மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதி பராசக்தி ஆலயத்தை பொறுத்தமட்டில் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் சில வழிவகைகளிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1989 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 24 ஆம் நாளிட்ட 39432/க்யூ 1/89 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

171. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1989 ஆம் ஆண்டு மே திங்கள் 19 ஆம் நாளிட்ட 642 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

172. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்கல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 1989 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27 ஆம் நாளிட்ட 873 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

173. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண் வருமான வரி (மேல் முறையீடு மற்றும் சீராய்வு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 1988 ஆம் ஆண்டு மே

1989 நவம்பர் 1]

திங்கள் 31 ஆம் நாளிட்ட 975 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண் வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

174. தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனத்தின் 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் முடியவுள்ள கால வரைக்கான ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

175. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1980-81 ஆம் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

176. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

177. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

178. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான நிருவாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1எ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

179. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான நிருவாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1எ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1989 நவம்பர் 1

180. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான நிருவாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

181. தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

182. சென்னை மாநகர், மெரினாவில் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாள் அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து நீதிபதி திரு. பி. கே. சேதுராமன் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

22. பொது நிறுவனங்கள் குழுவின் இருபது முதல் முப்பத்தி மூன்று வரையிலான அறிக்கைகள் (1989-90).

23. அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை (1989-90).

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

180. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான நிருவாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

181. தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

182. சென்னை மாநகர், மெரினாவில் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாள் அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து நீதிபதி திரு. பி. கே. சேதுராமன் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

22. பொது நிறுவனங்கள் குழுவின் இருபது முதல் முப்பத்தி மூன்று வரையிலான அறிக்கைகள் (1989-90).

23. அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை (1989-90).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS